# பெண்களின் நிலை இஸ்லாத்திலும் யூத - கிருஸ்தவ மார்க்கங்களிலும்


- அறிமுகம்
- ஏவாளின் தவறு
- ஏவாள் விட்ட சொத்து
- இழிவிற்குரிய பெண் மக்கள்
- பெண் கல்வி
- தூய்மையற்ற தீட்டுப்பட்ட பெண்
- சாட்சி கூறுதல்
- கள்ள உறவு (விபச்சாரம்)
- நேர்ச்சை சபதம்
- மனைவியின் சொத்து
- விவாகரத்து
- தாய்மார்கள்
- பெண்களுக்கு சொத்துரிமை
- விதவைகளின் துன்ப நிலைகள்
- பலதார மணம்
- திரை (பர்தா - ஹிஜாப்)
- முடிவுரை
- ஆதார நூல்கள்


## அறிமுகம்

ஐந்து வருடங்களுக்கு முன்னர், 3-7-1990 ல் வெளிவந்த டோரோண்டோ ஸ்டார் இதழில் வெளியிடப்பட்டிருந்த டாக்டர் வைன் டைர் அவர்களின் ''இஸ்லாம் மாத்திரம் குலக் கொள்கைகளைக் கொண்டதல்ல'' என்ற கட்டுரையை படித்தேன். எகிப்திய பெண்ணுரிமைவாதியான டாக்டர் நவல் ஸாதவி தெரிவித்த சில கருத்துக்கள் பற்றி மாண்ட்ரீலில் நடந்த ''பெண்ணும் வலிமையும்'' என்ற மாநாட்டிற்கு வந்திருந்தவர்களின் ஆக்ரோசமான எதிர்ப்பை அந்த கட்டுரை விவரித்திருந்தது.

டாக்டர் நவல் ஸாதவியின் ''அரசியல் ரீதியாக சரியற்ற'' அந்த கருத்துக்களில் உள்ள சில பின் வருமாறு : ''பெண்களை அதிகம் கட்டுப்படுத்தக் கூடியவைகள் இருப்பது முதலில் யூத மதத்தின் பழைய ஏற்பாட்டிலும் பின்பு கிறிஸ்தவ மதத்திலும் அதன் பின் இஸ்லாத்திலும் காணப்படுகின்றன.'' எல்லா மதங்களும் குல ரீதியானவைகள் ஏனெனில் அவைகள் குல ரீதியான சமூக அமைப்பிலிருந்தே தோன்றியுள்ளன.'' ''பெண்கள் பர்தா அணிவது இஸ்லாத்திற்கேயுரிய பிரத்யோக கொள்கையல்ல ஆனால் சகோதரி (யூத கிறிஸ்தவ) மார்க்கத்தில் காணப்பட்டு வந்த, மிகவும் தொன்று தொட்ட காலத்திலிருந்து பின்பற்று வந்த பழக்கமேயாகும்.''

தங்களது மதங்கள் இஸ்லாத்தினோடு ஒப்பிடப்படுவதை மாநாட்டிற்கு வந்தவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே அவர்கள் டாக்டர் ஸதாவி அவர்கள் மீது விமரிசன மழையைப் பொழிந்தார்கள். ''டாக்டர் ஸதாவியின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவைகளல்ல. மற்றவர்களின் மதத்தை பற்றிய அறியாமையே அவரின் பதில்கள் வெளிப்படுத்துகின்றன என்று உலக தாய்மார்களின் இயக்கத்தை சேர்ந்த பெர்னைஸ் டுபாஸ் அறிவித்தார். நான் இதை வண்மையாக எதிர்க்கிறேன் ஏனெனில் ''பர்தா எனும் கொள்கை யூத மதத்தில் இல்லை'' என இஸ்ரேலிய செய்தி சேகரிப்பு நிறுவனத்தை சார்ந்த ஆலிஸ் கூஷால்வி என்ற பெண் தெரிவித்தாள்.

இஸ்லாத்தில் பின்பற்றப்பட்டு வரும், மேற்கத்திய நாகரிகத்தின் ஒரு பாகமாகமாக இருந்த மேற்கின் சொந்த பண்பாட்டை (இஸ்லாம்தான் இதை அறிமுகப்படுத்தியது என) குறை கூறி இஸ்லாத்தை பலிகிடாவாக ஆக்கிடும் முரட்டுத்தனமான பழக்கத்தையே இந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட ஆக்ரோச எதிர்ப்புக்கள் பிரதிபலிக்கின்றன என்று கட்டுரை கூறியது. ''கிறிஸ்தவ யூத பெண்ணுரிமைவாதிகள் தீய முஸ்லிம்கள் விமர்சிக்கப்படுவதைப் போல் விமர்சிக்கப்படுவதை பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள்'' என வைன் டைர் எழுதுகிறார்.

இதைப் போன்ற மாநாட்டிற்கு வருகை தந்திருப்பவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான இது போன்ற கருத்துக்களை குறிப்பாக பெண்கள் பற்றிய விசயங்கள் விவாதிக்கப்படும் போது, உதிர்ப்பது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிடவில்லை. பெண்களை முற்றிலும் அடிமைப்படுத்துவதின் அடையாளம் என்றே மேற்கில் இஸ்லாம் நம்பப்படுகின்றது. இந்த நம்பிக்கை எவ்வளவு ஆழமானது என்பதை புரிந்து கொள்ள பர்தா அணிந்த முஸ்லிம் பெண்களை பள்ளிகளிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று பிரான்ஸின் கல்வித்துறை அமைச்சர் வால்டேர் சமீபத்தில் வெளியிட்டுள்ள உத்தரவு ஒன்றே போதுமானதாகும்.[1] சிலுவை அணிந்த கத்தோலிக்க மாணவியும் தொப்பி அணிந்த யூத மாணவியும் பள்ளிகளில் அனுமதிக்கப்படும் போது பர்தா அணிந்த முஸ்லிம் மாணவி மாத்திரம் அனுமதி மறுக்கப்படுகின்றாள். ஆலபாமா பிரதேசத்தின் கவர்னரான ஜார்ஜ் வேலஸ் என்பவர் 1962ம் ஆண்டு ஒரு பள்ளியின் நுழைவாயிலின் முன் நின்று கொண்டுஇ கருத்த, வெள்ளை மாணவர்களை பிரிக்கும் நோக்குடன் கருத்த மாணவர்களை பள்ளியில் செல்லவிடமால் தடுத்த மற்றொரு கேவலமான சம்பவத்தை இது நமக்கு நினைவூட்டுகிறது. இதற்கும் அதற்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் அந்த கருத்த மாணவர்களுக்காக இரக்கப்படுபவர்கள் அந்த அமெரிக்காவிலும் மற்றும் உலகின் பல பாகங்களிலும் இருந்தனர். கருத்த மாணவர்களை வலிமையின் மூலம் பள்ளியில் நுழையச் செய்வதற்காக ஜனாதிபதி கென்னடி அமெரிக்க தேசிய இராணுவப் படையை அனுப்பினார். ஆனால் இந்த முஸ்லிம் மாணவிகளுக்கோ எவரிடமிருந்தும் உதவியில்லை. அவர்களின் கொள்கைக்கு பிரான்ஸின் உள்ளேயும் வெளியேயும் மிகக் குறைந்த பச்சாதாபமே காணப்படுகின்றது. இஸ்லாம் என்று சொல்லப்படும் எதைப்பற்றியும் எல்லா இடத்திலும் பரவியிருக்கும் தப்பபிப்ராயமும் பயமுமே இதற்கு காரணமாகும்.

மாண்ட்ரீல் மாநாடு என்னில் உண்டாக்கிய மிகப்பெரும் வியப்பிற்குரிய கேள்வி என்னவெனில் : ஸதாவியினுடைய அல்லது அவளை விமர்சிப்பவர்களின் கருத்துக்கள் உண்மையானவைகளா? ஆதாவது, யூத மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மார்க்கம் ஆகியவைகள் பெண்களைப் பற்றி ஒரே மாதிரியான கருத்துக்களைத்தான் கொண்டுள்ளனவா அல்லது அவைகள் வித்தியாசமானவைகளா? ***உண்மையில் யூத மதமும் கிறிஸ்தவ மதமும் பெண்களை இஸ்லாத்தை விட நல்ல முறையில் நடத்துகின்றனவா? உண்மை என்ன?***

இந்த கடினமான கேள்விகளுக்கு விடைகளை தேழக் கண்டு பிழப்பது அவ்வளவு எளிதல்ல. முதலில் உள்ள கஷ்டம் என்னவெனில் ஒருவர் இந்த விசயத்தை அனுகுவதில் நியாயமானவராகவும் ஒருதலைப்பட்ச உணர்வு இல்லாதவராகவும் இருக்க வேண்டும் அல்லது குறைந்த பட்சம் அவ்வாறு இருப்பதற்கு பெருமளவில் முயற்சிக்கவாவது வேண்டும். இதைத்தான் இஸ்லாம் போதிக்கின்றது. எப்பொழுதும் உண்மையையே பேச வேண்டுமென திருக்குர்ஆன் முஸ்லிம்களுக்கு கட்டளையிடுகிறது. தங்களுக்கு மிக நெருங்கிய உறவினர்கள் அதை வெறுத்த போதிலும் சரியே. ''பேசும் போது நீங்கள் நீதமாகவே பேசுங்கள், அது உங்களின் இநருங்கிய உறவினர்களோடு சம்பந்தப்பட்டதாயினும் சரியே.'' (6:152) ''நம்பிக்கை கொண்டவர்களே, நீதியை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ்விற்காக உறுதியான சாட்சிகளாக ஆகி விடுங்கள். அது உங்களுக்கோ, உங்களின் பெற்றோர்களுக்கோ, உங்களின் உறவினர்களுக்கோ அல்லது ஏழை பணக்காரர்களுக்கோ எதிரானதாக இருந்தாலும் சரியே.''

மற்றொரு சிரமம் என்னவெனில் எடுத்துக் கொண்ட தலைப்பின் பரந்து விரிந்த தன்மையேயாகும். ஆகவே கடந்த சில வருடங்களாக சரியான விடைகளை கண்டு பிடிப்பதற்காக நான் பைபிள், என்ஸைக்ளோப்பீடியா ஆப் ரெலிஜியன்,

என்ஸைக்ளோப்பீடியா ஜூ டாய்க்கா ஆகியவற்றை படித்து வருகிறேன். மேலும் பல்வேறு மதங்களிலுள்ள பெண்களின் அந்தஸ்து பற்றி அறிஞர் பெருமக்கள், விமர்சகர்கள் ஆகியோர்கள் எழுதிய பல்வேறு புத்தகங்களையும் படித்து வருகிறேன். பின்வரும் அத்தியாயங்களில் காணப்படும் விசயங்கள் யாவும் என்னுடைய தாழ்மையான ஆராய்ச்சிகளின் முக்கியமான கண்டுபிடிப்புக்களேயாகும். முற்றிலும் நடுநிலையோடு இருப்பதாக நான் உரிமை கொண்டாடவில்லை. இது என்னுடைய சக்திக்கு அப்பாற்ப்பட்டது. இந்த முழு ஆராய்ச்சிகளின் போதும் நான் திருக்குர்ஆன் போதிக்கும் "நீதியாகப் பேசுதல்" என்பதையே கடைப்பிடிக்க என்னால் ஆன வரை முயன்றிருக்கிறேன் என்பதை மாத்திரம் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

***யூத மதத்தையோ அல்லது கிறிஸ்தவ மதத்தையோ இழிவுபடுத்துவதற்காக என்னுடைய இந்த ஆராய்ச்சியை நான் மேற்கொள்ளவில்லை என்பதை இந்த முன்னுரையில் நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.*** முஸ்லிம்கள் என்ற முறையில் அவைகள் இரண்டும் இறைவனிடமிருந்தே வந்துள்ளன என்று நாம் நம்புகிறோம். இயேசுவும் மூஸாவும் இறைவனின் மிகப் பெரும் தீர்க்கதரிசிகாளாவர் என்பதை நம்பாமல் எவரும் முஸ்லிமாக தொடர்ந்திருக்க முழயாது. **என்னுடைய இலட்சியமெல்லாம் இஸ்லாத்தின் உண்மையை நிலை நாட்டுவதும் மனித இனத்திற்கு இறைவனால் வழங்கப்பட்ட இறைவனின் இறுதி தூதிற்கு பெருமை சேர்ப்பதும் மேற்குலகிற்கு நாம் வெகு காலத்திற்கு முன்னேயே சொல்லியிருக்க வேண்டிய இந்த செய்தியை சொல்வதுமேயாகும்.** நான் கொள்கைகளைப் பற்றித்தான் கூறுகிறேன், அதாவது இந்த மூன்று மதங்களின் மூலச் சட்ட நூல்களில் பெண்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அந்தஸ்தைதான் நான் கூறுகின்றேனேயல்லாது அம்மதங்களைப் பின்பற்றுபவர்களின் நடை முறைகளைப்பற்றி நான் கூறவில்லை என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். ஆகவே திருமறை குர்ஆன், ஹதீது, பைபிள், தல்மூது மேலும் கிறிஸ்தவ மதக் கொள்கைகளை வரையறுத்து அதற்கு உருவம் அளிப்பதில் மிகப் பெரும் பங்கு வகித்த புகழ் பெற்ற சர்ச் பாதர்களின் கருத்துக்கள் ஆகியவைகளே ஆதாரங்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது ஏனெனில் ஒரு மதத்தின் உண்மை கொள்கைகளை புரிந்து கொள்வதற்கு அந்த மதத்தை சாதாரணமாக பின்பற்றுபவர்களின் செயல்களை வைத்து முடிவு செய்வது பெரும்பாலும் சரியானவைகளாக இருப்பதில்லை என்பதனாலேயாகும். ஏனெனில் அவர்களில் பலர் தங்களின் கலாச்சார பழக்க வழக்கங்களையே மதமென நினைத்துக் கொண்டிருக்கின்றனர் மற்றும் பலருக்கு அவர்களின் மதக் கிரந்தங்கள் என்ன கூறுகின்றன என்பது தெரியவில்லை இன்னும் சிலர் அது பற்று கிஞ்சிற்றும் கவனம் செலுத்துவதில்லை.

Top Top

- ஏவாளின் தவறு

ஆணும் பெண்ணும் பிரபஞ்சமனைத்தையும் படைத்த இறைவனால் படைக்கப்பட்டவர்களே என்ற அடிப்படை உண்மையை மூன்று மதங்களும் ஒப்புக்கொள்கின்றன. இருப்பினும், முதல் மனிதரான ஆதம், முதல் மனுசியான ஏவாள் படைக்கப்பட்டவுடன் நடந்த சம்பவங்களிலிருந்தே கருத்து வேறுபாடுகள் ஆரம்பித்து விடுகின்றன. ஆதம்-ஏவாள் படைக்கப்பட்டது பற்றிய யூத-கிறிஸ்தவ கொள்கை பைபிள் ஆதியாகமம் 2:4, 3:24 ஆகியவைகளில் விவரமாக கூறப்பட்டுள்ளது. தடுக்கப்பட்ட மரத்தின் கனிகளை உண்பதிலிருந்து இறைவன் இருவரையுமே தடுத்திருந்தான். அதை உண்ணும்படி பாம்பு (-சாத்தான்) ஏவாளை தூண்டியது: அதற்கிணங்கிய அவள் அக்கனியை தன்னுடன் உண்ணுமாறு அவள் ஆதத்தை தூண்டினாள். இறைவன் இந்த வரம்பு மீறலுக்காக ஆதத்தை கண்டித்த போது ஆதமோ நீர் என்னுடன் வைத்திருக்கும் பெண்தான் எனக்கு அம்மரத்தின் கனியை கொடுத்தாள்: நான் அதை உண்டேன்" என்று கூறி பழியனைத்தையும் ஏவாளின் மீதே போட்டார். இதனால் இறைவன் ஏவாளை நோக்கி : நான் குழந்தைப்பேறின் போது உன் வேதனையை மிகவும் அதிகமாக்குவேன்: வேதனையுடனேயே நீ குழந்தை பெறுவாய். நீ உன் கணவனை விரும்புவாய்: அவன் உன்னை ஆளுவான் என்றார்."

அவர் ஆதத்தை நோக்கி : நீ உன் மனைவியின் பேச்சை கேட்டு மரத்தின் கனியை உண்டதால் .... உன் நிமித்தம் பூமி சபிக்கப்பட்டதாயிருக்கும். உன் வாழ் நாட்கள் முழுவதும் சிரமமான உழைப்பின் மூலமே நீ அதிலிருந்து உண்பாய்."

முதல் படைப்பைப் பற்றிய இஸ்லாத்தின் கொள்கை திருக்குர்ஆனின் பல இடங்களில் காணப்படுகின்றது. உதாரணமாக :

ஆதமே நீரும் உம்முடைய மனைவியும் இச்சுவனத்தில் தங்கியிருங்கள். நீங்கள் விரும்பிய இடத்தில் விரும்பியதைப் புசியுங்கள். ஆனால் இம்மரத்தின் அருகில் நெருங்காதீர்கள். அவ்வாறு நெருங்கினால், நீங்கள் இருவரும் அக்கிரமக்காரர்களில் சேர்ந்து விடுவீர்கள். ஆனால் அவ்விருவரை விட்டும் பரஸ்பரம் மறைந்திருந்த அவர்களின் வெட்கத் தலங்களை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக ஷைத்தான் அவர்களின் உள்ளங்களில் ஊசலாட்டத்தை ஏற்படுத்தினான் : மேலும் இவ்வாறு கூறினான் : உங்கள் இறைவன் இம்மரத்தின் அருகே செல்லக் கூடாது என்று உங்கள் இருவரையும் தடுத்தற்கான காரணம், நீங்கள் இருவரும் வானவர்கள் ஆகிவிடக் கூடாது: அல்லது உங்களுக்கு நிரந்தர வாழ்வு கிடைத்து விடக்கூடாது என்பதற்காகத்தான். மேலும், அவன் அவர்களிடம் சத்தியம் செய்து கூறினான் : நான் உங்கள் இருவருக்கும் உண்மையான நலம் நாடுபவனாவேன்." இவ்வாறு அவ்விருவரையும் ஏமாற்றி படிப்படியாக தன் வசப்படுத்தினான். கடைசியில் அவர்கள் அம்மரத்தி(ன் கனியி)னைச் சுவைத்ததும் அவர்களின் வெட்கத்தலங்கள் பரஸ்பரம் அவர்களுக்கு வெளிப்பட்டு விட்டன. பிறகு, அவர்கள் தங்கள் உடல்களை சுவனத்தின் இலைகளால் மூடிக்கொள்ளலாயினர். (அப்போது) அவர்களின் இறைவன் அவர்களை அழைத்துக் கூறினான்: இம்மரத்(தின் அருகில் செல்வ)தை விட்டு உங்களிருவரையும் நான் தடுக்கவில்லையா? மேலும், ஷைத்தான் உங்களின் பகிரங்கமான பகைவன் என்றும் நான் உங்களுக்குக் கூறவில்லையா?" அதற்கு அவர்களிருவம் கூறினார்கள்: எங்கள் இறைவனே எங்களுக்கு நாங்களே அக்கிரமம் செய்து கொண்டோம். எங்களை நீ மன்னித்து எங்களுக்குக் கிருபை செய்யாவிடில் நிச்சயமாக நாங்கள் இழப்பிற்குரியவர்களாகி விடுவோம்." (7: 19-23)

படைப்பைப் பற்றிய இந்த இரு வேறு விபரங்களையும் கவனமாக பார்த்தால் அவைகளில் சில அடிப்படையான வேறுபாடுகள் இருப்பது தென்படும். திருக்குர்ஆனோ பைபிளுக்கு மாற்றமாக ஆதம் ஏவாள் ஆகிய இருவருமே குற்றத்தில் சம பங்காளிகள் எனக் கூறுகிறது. ஆதாமை ஏவாள் அந்த கனியை உண்ணும்படி தூண்டினாள் என்றோ ஆதாமிற்கு முன்னேயே அவள் அந்தக் கனியை உண்டாள் என்றோ திருக்குர்ஆனில் எங்கும் கூறப்படவில்லை. திருக்குர்ஆனைப் பொறுத்த வரையில் ஏவாள் தீமை செய்யத் தூண்டுபவளோ, மயக்குபவளோ, ஏமாற்றுபவளோ அல்ல. மேலும், மகப்பேறின் போது ஏற்படும் வேதனைக்காக ஏவாள் குற்றம் சுமத்தப்படக் கூடாது. ஏனெனில், ஒருவரின் குற்றத்திற்காக மற்றவரை இறைவன் தண்டிக்கமாட்டான் என திருக்குர்ஆன் கூறுகிறது. ஆதாம் ஏவாள் ஆகிய இருவருமே குற்றமிழைத்தனர்: பின்பு இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரினர்: இறைவன் அவர்களை மன்னித்தான்.

Top Top

- ## ஏவாள் விட்ட சொத்து

தீமை புரியத்தூண்டுபவள் என்று பைபிளில் ஏவாளைப்பற்றி கூறப்பட்டிருப்பது யூத-கிறிஸ்தவ மதத்திலுள்ள பெண்களுக்கு எதிராக தொடர்ந்து மிகவும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தியுள்ளது. எல்லா பெண்களும் அவர்களின் தாயாரான ஏவாளிடமிடமிருந்து அவளுடைய குற்றத்தையும் கபடத்தனத்தையும் பரம்பரையாகப் பெற்றுள்ளனர் என்று நம்பப்படுகின்றனர். அதனால், அவர்கள் அனைவரும் நம்பத்தகாதவர்களாக, ஒழுக்க ரீதியாக தாழ்ந்தவர்களாக,

தீயவர்களாக கருதப்படுகின்றனர். மாதவிடாய், கர்ப்பம், குழந்தைப்பேறு ஆகியவைகள் சபிக்கப்பட்ட பெண்ணினத்தின் என்றென்றும் நிலைத்திருக்கும் குற்றத்தின் தண்டனையாகவே கருதப்படுகின்றது. பைபிளிலுள்ள ஏவாள் அவளின் பெண் வாரிசுகளின் மீது எந்த வகையான எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறாள் என்பதை உணர்ந்து கொள்ள நாம் கடந்த காலத்திலுள்ள சில மிகவும் முக்கியமான யூத-கிறிஸ்தவர்களின் எழுத்துக்களை நோட்டமிட வேண்டும். பழைய ஏற்பாட்டிலிருந்து நாம் தொடங்குவோம். ஞான இலக்கியம் என்று கூறப்படுவதில் காணப்படுவதாவது :

மரணத்தை விட கசப்பானவள் பெண். அவள் சிக்கவைக்கும் வலையாவாள், அவளின் இதயமோ கண்ணியாகும் மேலும் அவளின் கைகள் விலங்குகளாகும். இறைவனை மகிழ்விப்பவனோ அவளை விட்டு தப்புவான், ஆனால் பாவியையோ அவள் தன் வலைக்குள் சிக்கவைத்துவிடுவாள்... நான் தேடி தேடி காணமுடியாமலிருக்கும்போது, ஆயிரம் பேரில் ஒரு நீதிமிக்கவனை கண்டுகொண்டேன். ஆனால் பெண்களிலோ அவர்களெல்லாரிலும் கூட ஒரு நீதிமிக்க பெண்ணை கூட காண முடியவில்லை. (நுஊஊடுநுளுஐயுளுவுநுளு 7:26-28)

கத்தோலிக்க பைபிளில் காணப்படும் ஹீப்ரு இலக்கியத்தின் மற்றொரு பாகத்தில் உள்ளதாவது:

பெண்ணின் தீமைக்கருகில் கூட வேறு எந்த தீமையும் வர முடியாது.... பாவம் பெண்ணிலேயே ஆரம்பித்தது. அவளாலேயே நாமெல்லோரும் இறப்பதால் அவளுக்கு நன்றிகள். (நுஊஊடுநுளுஐயுளுவுநுளு 7:26-28)

ஏவாளின் பாவத்தின் காரணமாக பெண்கள் மேல் சுமத்தப்பட்ட ஒன்பது வகையான சாபங்களை யூத அறிஞர்கள் பட்டியலிட்டுள்ளனர் :

பெண்ணிற்கு இறைவன் ஒன்பது சாபங்களையும் மரணத்தையும் விதித்தான்.

1. 1. மாத விடாய் இரத்தத்தின் மூலமான துயரம்
2. 2. பருவமடையும் போது இரத்தம் வருவதனால் ஏற்படும் துயரம்
3. 3. கர்ப்பத்தால் ஏற்படும் துன்பம்
4. 4. குழந்தை பெறும் போது ஏற்படும் துன்பம்
5. 5. குழந்தைகளை வளர்ப்பதில் ஏற்படும் துன்பம்
6. 6. துக்கித்தவள் போல அவள் தலையை மூடியிருத்தல்
7. 7. தன் எஜமானனிற்கு நிலையாக பணி புரியும் அடிமையைப் போல அவள் தன் காதை துளைத்துக் கொள்ளுதல்
8. 8. அவளின் சாட்சி நம்பப்படாதிருத்தில்
9. 9. எல்லாவற்றிற்கும் பிறகு ..... மரணம்.[2]

இப்போதுங் கூட மதப்பிடிப்புள்ள யூத ஆண்கள் தங்களுடைய பிரார்த்தனையின் போது **என்னை பெண்ணாக ஆக்காதிருந்த அகிலத்தின் அரசனான இறைவனே தூயவன்**'' என்று கூறுகின்றனர். பெண்கள் தங்களின் பிரார்த்தனையின் போது என்னை உன் விருப்பத்திற்கேற்ப படைத்த''[3] என்று கூறி இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றனர். பல யூத

புத்தகங்களில் காணப்படும் மற்றொரு பிரார்த்தனை என்னவெனில் அந்நிய மதத்தவனாக என்னைப் படைக்காத இறைவன் புகழப்படுவாராக் பெண்ணாக என்னைப் படைக்காத இறைவன் புகழப்படுவாராக் என்னை அறிவீனனாக படைக்காத இறைவன் புகழப்படுவாராக."[4] என்பதாகும்.

பைபிளினுடைய ஏவாளின் பங்கு யூத மதத்தை விட கிறிஸ்துவ மதத்தில் மிகவும் அதிகம். அவளுடைய பாவம் முழு கிறிஸ்தவ மத நம்பிக்கைக்கே மையமானதாகும் ஏனெனில் இவ்வுலகில் இயேசுவின் பணியைப் பற்றிய கிறிஸ்தவ கொள்கைக்கான காரணமே ஏவாள் இறைவனிற்கு_கீழ்படியாதது என்பதினாலேயாகும். அவள் பாவம் செய்தாள்இ மேலும் அவளை பின்பற்றும்படி ஆதமையும் தூண்டினாள். அதன் விளைவாகஇ இறைவன் அவர்களிருவரையும் சுவனத்திலிருந்துஇ அவர்களின் காரணமாக சபிக்கப்பட்டஇ பூமிக்கு வெளியேற்றினான். இறைவனால் மன்னிக்கப்படாத அவர்களின் பாவத்தை அவர்கள் தங்களின் சந்ததிகளுக்கு விட்டுச் சென்றனர்இ அதன் காரணமாக எல்லா மனிதர்களுமே பாவத்தில் பிறக்கின்றனர். மனிதர்களை இந்த ஆதி பாவத்திலிருந்து நீக்கி பரிசுத்தப்படுத்துவதற்காக இறைவன்இ தேவ குமாரன் எனக் கருதப்படும்இ இயேசுவை சிலுவையில் பலி கொடுக்க வேண்டியதிருந்தது.

ஆகவே ஏவாள் தன்னுடைய சொந்த பாவத்திற்கும்இ அவளுடைய கணவனின் பாவத்திற்கும்இ முழு மனித இனத்தின் ஆதி பாவத்திற்கும் மற்றும் தேவ குமாரனின் மரணத்திற்கும் காரணமாவாள். வேறு வார்த்தைகளில் சொல்வதனால்இ ஒரு பெண் தன்னிச்சையாக செய்த செயலின் விளைவாக முழு மனித இனத்தையுமே பாவமுள்ளதாக்கி விட்டாள்.[5] அவளின் பெண் மக்களில் நிலை என்ன? அவர்கள் அவைளைப் போலவே அவர்களும் பாவிகளாவார்கள் அவர்களை பாவிகளாகவே நடத்தப்படவேண்டும். புனித பவுலடியாரின் கடும் கண்டனத்தை கேளுங்கள்

ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷனின்மேல் அதிகாரங் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை, அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். (1 திமோத்தி 2:11-14)

புனித தர்த்தலியன் தன்னுடைய 'மிகச் சிறந்த நேசத்திற்குரிய சகோதரிகளிடம்' பேசும் போது அவர்களை பவுலடியாரை விட கடுமையாக சாடுகிறார் :

நீங்கள் ஒவ்வொருவரும் ஏவாள் என்பது உங்களுக்கு தெரியாதா? இறைவனின் தண்டனை உங்களின் பெண் இனத்தின் மீது இந்தக் காலத்திலும் இருந்து வருகிறது. ஆகவே அதற்கான குற்றமும் (இப்பொழுதும்) இருந்தே தீர வேண்டும். நீங்கள் சாத்தான் நுழையக்கூடிய நுழைவாயில்: தடுக்கப்பட்ட மரத்தை திறந்தவர்கள் நீங்கள் தெய்வீக கட்டளையை முதன் முதலில் மீறியவர்கள் நீங்கள் எவரைத் தாக்குவதற்கு சாத்தான் போதுமான வலிமையற்றவனாக இருந்தானோ அவரையே மயக்கிய பெண் நீங்கள்தான் கடவுளின் சாயலான மனிதனையே நீங்கள் அழித்தீர்கள். நீங்கள் வரம்பு மீறியதாலேயே இறைமகன் கூட சாக நேர்ந்தது.[6]

தன் முன்னோர்கள் விட்டுச் சென்ற (இத்தகைய கருத்து) சொத்திற்கு விசுவாசமானவராக புனித ஆகஸ்டின் விளங்கினார். தன்னுடைய ஒரு நண்பருக்கு அவர் இவ்வாறு எழுதுகிறார்:

"பெண் அவள் மனைவியாயிருந்தால் என்ன தாயாக இருந்தால் என்ன, அதில் எந்த வித்தியாசமுமில்லை. பாவத்திற்கு தூண்டக் கூடிய ஏவாளாகவே எந்தப் பெண்ணும் இருக்கிறாள் என நாம் எச்சரிக்கையாக இருக்க

வேண்டும்.... பெண்ணிற்கு பிள்ளை பெறும் வேலை இல்லாவிட்டால் அவளால் ஆணுக்கு வேறு எந்தப் பயனும் இருப்பதாக என்னால் காண முடியவில்லை. 4

இதற்கு பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் கூட புனித தாமஸ் அக்யுனாஸ் பெண்களை குறைபாடுள்ளவர்களாகவே கருதினார்:

''பெண்ணின் தனிப்பட்ட குணத்தைப் பொறுத்த வரை அவள் *தேவடியாளாகவே* இருக்கிறாள். **ஏனெனில் ஆணுடைய விந்திலுள்ள வீரியமுள்ள சக்தி அவனைப் போன்ற முழுமையான ஆணை உருவாக்குகிறது. ஆனால் அந்த வீரிய சக்தியில் ஏற்ப்பட்ட ஏதோ குறைவினாலோ அல்லது பலவீனத்தாலோ அல்லது சில வெளிப்புற செல்வாக்கின் விளைவினாலோதான் பெண் பிறக்கிறாள்.** ''

இறுதியாக, புகழ் பெற்ற சீர்திருத்தவாதியான மார்டின் லூதரும் பெண்கள் குழந்தை பெறுவதைத்தவிர அவர்களால் வேறு எந்த நன்மையும் இருப்பதாக கருதவில்லை. பெண்கள் எத்தனை அதிகமான குழந்தைகள் பெற முடியுமோ அவ்வளவு குழந்தைகள் பெற வேண்டும். அதனால் அவர்களுக்கு எவ்வளவு பாரதூரமான விளைவு ஏற்பட்டாலும் சரியே.

''அவர்கள் (குழந்தை பெறுவதில்) வெறுப்புற்றாலும் ஏன் அதனால் இறந்து போக நேரிட்டாலும் ஒன்றும் பெரிதல்ல. அவர்கள் அதனால் (சாக நேரிடின்) சாகட்டும். ஏனெனில் அதற்காகத்தான் (குழந்தை பெறுவதற்காகத்தான்) அவர்கள் இருக்கிறார்கள். ''

பாவம் செய்யத் தூண்டிய ஏவாள்தான் இவர்கள் என நினைத்துக் கொண்டும் பெண்கள் மீண்டும் மீண்டும் இழிவுக்குள்ளாக்கப்படுகின்றனர். (ஏவாளைப் பற்றிய) ஆதியாகமத்தின் கதைக்கு நன்றிகள். மொத்தத்தில் யூத-கிறிஸ்தவ மதத்தில் பெண்களைப் பற்றிய கருத்தோட்டம் ஏவாளும் அவளின் பெண் சந்ததிகளும் பாவம் செய்யும் இயல்புள்ளவர்கள் என்ற நம்பிக்கையால் விஷமாக்கப்பட்டுள்ளது.

பெண்களைப் பற்றி திருக்குர்ஆன் என்ன சொல்கிறது என நாம் இப்போது கவனிப்போமாகில், பெண்களைப் பற்றிய இஸ்லாத்தின் கருத்தோட்டம் யூத-கிறிஸ்தவ மதத்திலுள்ளதை விட மிகவும் அடிப்படையான வேறுபாட்டைக் கொண்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ளலாம். அது பற்றி திருக்குர்ஆனே பேசட்டும்:

ஆண்கள் மற்றும் பெண்களில் எவர்கள் முஸ்லிம்களாகவும், நம்பிக்கையாளர்களாகவும், கீழ்ப்படிபவர்களாகவும், வாய்மையாளர்களாகவும், பொறுமையுடையோராகவும், தானதர்மம் செய்பவர்களாகவும், நோன்பு நோற்பவர்களாகவும், தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இன்னும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருபவர்களாகவும் இருக்கின்றார்களோ, திண்ணமாக, அவர்களுக்காக அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான். (33:35)

இறை நம்பிக்கை கொண்ட ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாளர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் நன்மை புரியுமாறு ஏவுகிறார்கள்: தீமையிலிருந்து தடுக்கிறார்கள். மேலும், தொழுகையை நிலைநாட்டுகிறார்கள்: ஜகாத்தும் கொடுக்கிறார்கள். மேலும், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிகிறார்கள். அத்தகையோர் மீதுதான் அல்லாஹ்வின் கருணை பொழிந்து கொண்டிருக்கும். திண்ணமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனாகவும், நுண்ணறிவாளனாகவும் இருக்கிறான். (9:71)

அவர்களுடைய அதிபதி அவர்களுக்கு இவ்வாறு மறுமொழி கூறினான் : உங்களில் எவருடைய நற்செயலையும் நான் வீணாக்கவே மாட்டேன் - அவர் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி - நீங்கள் ஒருவர் மற்றவரிலிருந்து தோன்றிய(ஒரே இனத்த)வர்களே. (3:195)

தீய செயல் புரிந்தவனுக்கு அவன் செய்த தீமைக்கேற்பவே கூலி கிடைக்கும். எவர்கள் நற்செயல் புரிகின்றார்களோ அவர்கள் ஆணாயினும், பெண்ணாயினும் சரி - இறைநம்பிக்கை கொண்டவராய் இருக்கும் பட்சத்தில் - அனைவரும் சுவனம் செல்வார்கள். அங்கு அவர்களுக்குக் கணக்கின்றி உணவு வழங்கப்படும். (40:40)

ஆணாயினும் பெண்ணாயினும் எவர் இறைநம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல் புரிகின்றாரோ அவரை (இவ்வுலகில்) தூய வாழ்வு வாழச் செய்வோம். (மறுமையிலும்) அத்தகையோர்க்கு அவர்களின் உன்னதமான செயல்களுக்க ஏற்ப நாம் கூலி வழங்குவோம். (16:97)

பெண்களைப் பற்றிய திருக்குர்ஆனின் கண்ணோட்டம் ஆண்களிலிருந்து மாறுபட்டதல்ல என்பது தெளிவு. அவர்கள் இருவரும் இறைவனின் படைப்புக்களே. அவர்களின் ரப்பை வணங்குவதும்இ நற்செயல்கள் புரிவதும்இ தீய செயல்களை தவிர்ப்பதுவுமே பூமியில் அவர்களின் உன்னத இலட்சியமாகும். அவர்கள் இதை எந்த அளவிற்கு சரியாக நிறைவேற்றுகிறார்கள் என்பதை வைத்தே மதிப்பிடப்படுவார்கள். பெண் சாத்தானின் நுழைவாயில் என்றோ அல்லது அவள் இயல்பிலேயே ஏமாற்றுக்காரி என்றோ திருக்குர்ஆன் ஒரு போதும் குறிப்பிடவில்லை. மேலும் ஆண் இறைவனின் சாயல் என்று திருக்குர்ஆன் ஒரு போதும் குறிப்பிடவில்லை: ஆண்கள் பெண்கள் அனைவரும் இறைவனின் படைப்புக்களே. அவ்வளவுதான். திருக்குர்ஆனைப் பொறுத்தவரை இவ்வுலகில் பெண்களின் பங்களிப்பு குழந்தை பெறுவதோடு நின்று விடுவதல்ல. மற்ற ஆண்கள் எந்த அளவிற்கு நற்காரியங்கள் செய்ய வேண்டுமோ அது போலவே அவர்களும் செய்ய வேண்டும். நேர்மையான பெண்களே இருந்ததில்லை என்று திருக்குர்ஆன் ஒருபோதும் சொன்னதில்லை. அதற்கு மாறாக, கன்னி மரியாள், பிர்அவுனின் மனைவி போன்றவர்களின் உயர்ந்த முன் மாதிரிகளை எல்லா நம்பிக்கையாளர்களும்இ பெண்களும் ஆண்களும்இ பின்பற்ற வேண்டும் என திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது:

பிர்அவ்னுடைய மனைவியை அல்லாஹ் இறை நம்பிக்கையாளர்களுக்கான உதாரணமாக எடுத்துக்காட்டுகின்றான். ஒரு போது அவர் இறைஞ்சினார்: என் அதிபதியே எனக்காக உன்னிடத்தில் - சுவனத்தில் ஓர் இல்லத்தை அமைத்துத் தருவாயாக! மேலும், பிர்அவ்னை விட்டும் அவனுடைய செயலை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாகஸ மேலும் கொடுமை புரியும் சமூகத்திலிருந்து எனக்கு விடுதலை அளிப்பாயாகஸ மேலும்இ இம்ரானின் மகள் மர்யத்தை (மற்றொரு) உதாரணமாக எடுத்துக்காட்டுகிறான்: அவர் தம்முடைய வெட்கத்தலத்தைப் பாதுகாத்தார். பிறகு, நாம் நம்மிடமிருந்து ரூஹை அவருள் ஊதினோம். மேலும் அவர் தம்முடைய அதிபதியின் அறிவுரைகளையும் அவனுடைய வேதங்களையும் மெய்ப்படுத்தினார். மேலும், அவர் கீழ்ப்படிந்து வாழ்வோரில் ஒருவராயும் இருந்தார். (66 11-12)

Top Top

- ## இழிவிற்குரிய பெண் மக்கள்

உண்மையில், பெண் குழந்தையைப் பற்றிய பைபிள், திருக் குர்ஆன் ஆகியவற்றின் கண்ணோட்டாங்களுக்கிடையேயுள்ள வித்தியாசங்கள் பெண் குழந்தை பிறந்திதிலிருந்தே தொடங்கி விடுகிறது. உதாரணமாக, பெண் குழந்தை பிறந்து விட்டால் தாய் தூய்மையடையும் காலம் ஆண் குழந்தைக்கு அனுசரிக்கும் காலத்தைப் போல் இரு மடங்காகும் என பைபிள் கூறுகிறது. (லேவியராகமம் 12: 2-5). கத்தோலிக்க பைபிள் வெளிப்படையாகவே கூறுகிறது:

“பெண் குழந்தையின் பிறப்பு நக்ஷ்டமேயாகும். ” (Ecclesiasticus 22:3)

இந்த அதிர்ச்சியூட்டும் கருத்திற்கு எதிராக ஆண் குழந்தை புகழப்படுகின்றான்.

“தன் மகனிற்கு கல்வி புகட்டுபவன் எதிரியையே பொறாமைப்பட வைத்த காரியத்தை செய்தவனாவான். ” (Ecclesiasticus 30:3)

இனத்தை விருத்தியடையச் செய்யும் பொருட்டு சந்ததிகளை பெருக்கும் செயலை ஆண்களுக்கு யூத அறிஞர்கள் கட்டாயமாக்கினார்கள். ஆனால் அதே நேரத்தில் ஆண் குழந்தைகள்தான் உயர்ந்தவர்கள் என்பதை அவர்கள் மறைக்கவில்லை. ” எவர்களுக்கு ஆண் குழந்தைகள் இருக்கின்றனவோ அது அவர்களுக்கு நல்லதாகும். ஆனால் எவர்களுக்கு பெண் குழந்தைகள் இருக்கின்றவோ அது அவர்களுக்கு கெட்டதாகும். ” ஆண் குழந்தை பிறப்பின் போது எல்லோரும் மகிழ்கிறார்கள்... பெண் குழந்தை பிறக்கும் போது எல்லோரும் துக்கமாக இருக்கிறார்கள்இ ஒரு ஆண் குழந்தை இவ்வுலகிற்கு வரும் போது சமாதானம் இவ்வுலகிற்கு வருகிறது .... பெண் குழந்தை இவ்வுலகிற்கு வரும்போது ஒன்றும் வருவதில்லை. ”[7]

உன் மகள் தான்தோன்றித்தனமாக இருக்கிறாளா? உன் எதிரிகள் உன்னைப் பார்த்து இகழ்ந்து சிரிக்கும்படி, நகரத்தின் பிராதான பேச்சாக அவள் ஆகி, எல்லோரும் அவளைப்பற்றி குசுகுசுத்து பேசும் வகையில் அவள் நடந்து உன்னை அவமாமப்படுத்திடாமலிருக்கும் வகையில் நீ அவளை எப்பொழுதும் கண்காணித்திரு. (Ecclesiasticus 42: 11)

தான்தோன்றித்தனமாக இருக்கும் மகளை கடும் கட்டுப்பாட்டில் வைத்திரு இல்லையேல் அவளுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தை தவறாக பயன்படுத்தி விடுவாள். அவளின் வெட்கமற்ற கண்களின் மேல் ஒரு கவனம் வைத்திரு. அவள் உன்னை அவமானப்படுத்தியும் விடுவாளா என்று வியந்து (இதை செய்யாமல்) இருக்காதே. (Ecclesiasticus 26:10-11)

பெண்களை இழிவின் ஊற்றாக கருதும் இது போன்ற எண்ணம்தான் இஸ்லாத்திற்கு முந்திய அரேபியர்களை பெண் கொலை புரியத் தூண்டியது. திருக்குர்ஆன் இந்த மோசமான செயலை கடுமையாக கண்டிக்கிறது :

இவர்களில் ஒருவருக்கு பெண் குழந்தை (பிறந்திருப்பது) பற்றி நற்செய்தி சொல்லப்பட்டால் அவரது முகத்தில் கருமை கவ்விக் கொள்கின்றது. துக்கத்தால் அவர் தொண்டை அடைத்துக் கொள்கின்றது. இந்தக் கேலவமான செய்தி கிடைத்து விட்டதே என்பதற்காக இனி யார் முகத்திலும் விழிக்கக்கூடாது என்று மக்களை விட்டு ஒதுங்கிச் செல்கின்றார். அவமானப்பட்டுக்கொண்டு அப்பெண் குழந்தையை வைத்திருப்பதா அல்லது அதனை மண்ணில் புதைத்து விடுவதா என்று சிந்திக்கின்றார் - பாருங்கள்! இறைவனைப் பற்றி இவர்கள் எடுத்த முடிவு எத்தனை கெட்டது. (16:59)

இந்தச் செயலை கண்டிப்பதற்காக திருக்குர்ஆனில் உபயோகிக்கப்பட்டுள்ள (16:59, 43:17, 81:8-9) சுடும் வார்த்தைப் பிரயோகங்களின் சக்தி இல்லையென்றால் இந்தக் கொடிய குற்றம் அரேபியாவில் ஒரு போதும் நிறுத்தியிருக்கப்படமாட்டாது என்பதை நினைவில் வைக்க வேண்டும். மேலும், ஆனுக்கும் பெண்ணிற்குமிடையே எந்த வித்தியாசத்தையும் திருக்குர்ஆன் கற்பித்திடவில்லை. பைபிளில் கூறப்பட்டிருப்பதற்கு எதிராக, திருக்குர்ஆன் ஆனுடைய பிறப்பைப் போலவே பெண்ணின் பிறப்பும் இறைவனின் கொடை, அருள் என்றுதான் கருதுகிறது. பெண் குழந்தை கொடையை திருக்குர்ஆன் முதலில் குறிப்பிடுகின்றது :

அல்லாஹ் பூமி மற்றும் வானங்களுடைய ஆட்சியின் உரிமையாளனாவான்: தான் நாடுகின்றவற்றைப் படைக்கின்றான்: தான் நாடுவோருக்குப் பெண் மக்களை வழங்குகின்றான்: தான் நாடுவோருக்கு ஆண் மக்களை வழங்குகின்றான். (42:49)

ஆரம்ப கட்டத்திலிருந்த முஸ்லிம் சமுதாயத்தில் நிலவியிருந்த பெண் சிசுக்கொலையை முற்றாக, ஏன் அது பற்றிய தடயங்களைக் கூட அழித்தொழிக்கும் நோக்குடன் நபி (ஸல்) அவர்கள் பெண் குழந்தை கொடுக்கப்பட்டு அருள்புரியப்பட்டவர்களுக்கு அப்பெண் குழந்தைகளை அன்பான முறையில் வளர்த்தால் இறைவனிடத்தில் மிகப் பெரும் நற்கூலி பெறுவார்கள் என்று வாக்குறுதியளித்தார்கள்:

"எவர் பெண் குழந்தைகளை வளர்ப்பதில் ஈடுபட்டு, அவர்களை இரக்கத்துடன் நடத்தினால் அப் பெண் குழந்தைகள் நரக இநருப்பிலிந்து அவரை காப்பவர்களாக ஆகி விடுவார்கள்." என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

எவர்கள் இரு பெண்களை பருவமடையும் வரை நல்ல முறையில் வளர்க்கின்றார்களோ அவரும் நானும் மறுமை நாளில் இது போன்று வருவோம் என்று கூறி நபி (ஸல்) அவர்கள் தங்களின் இரு விரல்களை சேர்த்துக் காட்டினார்கள்." (முஸ்லிம்)

Top Top

- ## பெண் கல்வி

பெண்களைப் பற்றிய பைபிள்-திருக்குர்ஆன் ஆகியவற்றிற்கிடையே உள்ள கொள்கை வித்தியாசங்கள் புதிதாக பிறந்த பெண் சிசு பற்றியதோடு மாத்திரம் நின்று விடவில்லை அதையும் தாண்டி அது ஆழமாக செல்கிறது. தன் மதத்தை பற்றி கற்க முயற்சிக்கும் ஒரு பெண்ணின் நிலைமை பற்றி ஒப்பிட்டுப் பார்க்கலாம். யூத மதத்தின் இதயமே தவ்ராத் - கட்டளைகள் (-Commandments) ஆகும். ஆனாலும் பெண்கள் தவ்ராத்தை வாசிப்பதிலிருந்து விலக்கப்படுகிறார்கள்" என்று தல்மூது கூறுகிறது. சில யூத மத குருமார்கள் உறுதியாக அறிவித்துள்ளதாவது பெண்களுக்கு தவ்ராத்தின் வார்த்தைகளை கற்றுக் கொடுப்பதை விட அதை இநருப்பில் போட்டு அழிப்பது நல்லது." யார் யார் தன் மகளுக்கு தவ்ராத்தை கற்றுக் கொடுக்கிறானோ அவன் அவளுக்கு அசிங்கத்தையே கற்றுக் கொடுக்கிறான்."[8]

புதிய ஏற்பாட்டில் பவுலடியாரின் இது பற்றிய கண்ணோட்டம் கூட பிரகாசனமானதாக இல்லை:

சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்: பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை: அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்: வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்: ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே. (1 கொரிந்தியர் 14:34-35)

பெண் பேச அனுமதிக்கப்படவில்லையென்றால் எவ்வாறு கற்க முடியும்? அவள் முழு அடிமைத்தனத்திலேயே இருந்தால் அவள் வளர்ச்சி எவ்வாறு அறிவுப்பூர்வமாக அமையும்? அவள் தகவல் பெறுவதற்குரிய ஒரே மார்க்கம் அவளின் கணவனாக மாத்திரம் இருந்தால் அவளின் சிந்தனை வானத்தை எவ்வாறு அவள் விரிவடையச் செய்ய முடியும்?

இருபக்கமும் சமநீதியோடு இருக்கும் வகையில் இது பற்றி திருக்குர்ஆனின் நிலை வேறுபட்டுள்ளதா என்றும் நாம் கேட்க வேண்டும். திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஒரு சிறிய சம்பவமே இது பற்றி அதனுடைய நிலையை சுருக்கமாக விளக்க போதுமானது. கவுலா என்ற முஸ்லிம் பெண்மணியின் கணவர் ஒரு போது கோபத்தில் அவளிடம் நீ என் தாயின் முதுகைப் போன்றவள்'' என்று கூறி விடுகிறான். இது திருமணக் கடமைகளிலிருந்து ஒரு கணவனை விடுவிக்கக் கூடிய ஆனால் மனைவியை கணவனின் வீட்டிலிருந்து வெளியேறிச் செல்லவோ அல்லது வேறு ஒருவனை மணக்கவோ அனுமதிக்காத ஒரு வகையான விவாஹரத்து சொல்லாக அரபிகளால் கருதப்பட்டது. தன் கணவன் இவ்வாறு சொல்லக்கேட்ட கவுலா மிகவும் துக்ககரமாகி விட்டாள். தன் நிலைமையைக் கூறி வாதாட நபி (ஸல்) அவர்களிடமே அவள் நேராக போய் விட்டாள். இதற்கு வேறு வழி தெரியாததால் அவள் பொறுமையைக் கையாள வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நிறுத்தி வைக்கப்பட்ட தன் திருமண பந்தத்தை காப்பதற்காக கவுலா நபி (ஸல்) அவர்களிடம் தொடர்ந்து வாதாடிக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில்தான் திருக்குர்ஆன் இதில் தலையிட்டது: கவுலாவின் வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த கெட்ட பழக்கத்தை தெய்வீக தீர்ப்பு அழித்தொழித்து விட்டது. இந்தச் சம்பவம் தொடர்ந்து ஒரு முழு அத்தியாயமே அல் முஜாதிலா'' அல்லது வாதாடும் பெண்'' என்று பெயரிடப்பட்டது:

தன்னுடைய கணவர் விஷயத்தில் உம்மிடம் விவாதித்துக் கொண்டும், அல்லாஹ்விடத்தில் முறையிட்டுக் கொண்டும் இருக்கின்ற பெண்ணின் சொல்லைத் திண்ணமாக அல்லாஹ் கேட்டுக்கொண்டான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் கேட்பவனும் பார்ப்பவனும் ஆவான் (58:1)

திருக்குர்ஆனின் கொள்கையைப் பொறுத்தவரை ஒரு பெண் இஸ்லாத்தின் நபி (ஸல்) அவர்களிடமே நேரடியாக வாதாடும் உரிமை பெற்றிருக்கிறாள். மௌனமாயிருக்கும்படி அவளைச் சொல்ல எவருக்கும் உரிமை கிடையாது. சட்டம், மதம் ஆகியவற்றை கற்பதற்கு அவளின் கணவனை மாத்திரம் சார்ந்திருக்க வேண்டும் என்ற எந்த கட்டுப்பாடும் கிடையாது.

Top Top

- ## தூய்மையற்ற தீட்டுப்பட்ட பெண்

மாதவிடாய் வரும் பெண்கள் சம்பந்தமாகவுள்ள யூத சட்டங்களும் கட்டுப்பாடுகளும் மிகவும் கடுமையானவை. மாதவிடாய் வந்த பெண்ணை பழைய ஏற்பாடு தூய்மையற்றவளாகவும் தீட்டுப்பட்டவளாகவும் கருதுகிறது. மேலும் அவளின் தீட்டு மற்றவர்களையும் தொற்றிக்கொள்கிறது.'' அவள் தொடும் எந்தப் பொருளும் எந்த மனிதரும் அன்றைய முழு தினமும் தீட்டுப்பட்டவைகளாகி விடுகின்றன.

சூதகஸ்திரீ தன் சரீரத்திலுள்ள உதிர ஊறலினிமித்தம் ஏழு நாள் தன் விலக்கத்தில் இருக்கக்கடவள்: அவளைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. **அவள் விலக்கலாயிருக்கையில் எதின் மேல் படுத்துக்கொள்ளுகிறாளோ எதின் மேல் உட்காருகிறாளோ அதெல்லாம் தீட்டாயிருக்கும். அவள் படுக்கையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து தண்ணீரில் முழுகி சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. அவள் உட்கார்ந்த மணையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. அவள் படுக்கையின் மேலாகிலும், அவள் உட்கார்ந்த மணையின் மேலாகிலும் இருந்த எதையாகிலும் தொட்டவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.** (லேவியராகமம் 15: 19-23).

அவளிடம் இந்த அசுத்தப்படுத்தும்'' தன்மை இயல்பாகவே இருப்பதனால் அவளுடனான தொடர்பை தவிர்த்துக் கொள்ளும் நோக்குடன் சில நேரங்களில் மாதவிடாய்ப் பெண் தள்ளி வைக்கப்பட்டாள்''. அசுத்தமான அந்த காலம் முழுவதுமே அவள் அசுத்தமானவர்களின் வீடு'' என்றழைக்கப்பட்ட வீட்டிற்கு அனுப்பப்பட்டாள். மாதவிடாய்ப் பெண்ணோடு எந்த தொடர்பில்லாவிட்டாலும் கூட அவள் மிக ஆபத்தானவள் என தல்மூது கூறுகிறது :

''நம்முடைய அறிஞர்கள் நமக்கு கற்பித்துள்ளதாவது ... ஒரு மாதவிடாய்ப் பெண் இரு ஆண்களுக்கிடையே கடந்து செல்வாளானால், அக்காலம் அவளின் மாதாவிடாய்க் காலத்தின் ஆரம்ப நாட்களாக இருந்தால் அவள் அவர்களில் ஒருவரை (இதனால்) கொன்று விடுவாள். அதன் இறுதி நாட்களில் அவள் சென்றாளானால் அவர்களுக்கிடையே பிணக்கை உண்டாக்கி விடுவாள்'' (nPes. 111a.)

மாதவிடாய் காலத்திலிருக்கும் தன் மனைவியின் காலடி மண்ணின் மூலம் கூட ஒருவன் தீட்டாகி விட்டால் அவன் ஆலயத்தில் நுழைய தடை விதிக்கப்பட்டான். ஆலய குருவின் வீட்டிலுள்ள அவரின் மனைவியோ, மகளோ, தாயோ கூட மாதவிடாய் காலத்திலிருந்தால் அவன் ஆலயத்தில் அவன் கடமையை செய்ய முடியாது.[10] யூதப் பெண்கள் இன்றளவும் கூட மாதவிடாயை சாபம்'' என்றே குறிப்பிடுகின்றார்கள்.[11]

மாதவிடாய் வந்துள்ள பெண் எந்த விதமான தொற்றும் அசுத்தத்தை''யும் தன்னுள் கொண்டிருப்பதாக இஸ்லாம் கூறவில்லை. அவள் ''தீண்டத்தகாதவளோ'' அல்லது சபிக்கப்பட்டவளோ'' அல்ல. அவள் தன்னுடைய தினசரி வாழ்க்கையை வழக்கம்போல் ஆனால் ஒரே ஒரு கட்டுப்பாட்டுடன் நடத்துகிறாள்: அதாவது அவள் திருமணமானவளாயிருந்தால் அவள் கணவனுடன் உடலுறவு கொள்ளக்கூடாது. மற்ற எல்லா உடல் தொடர்புகளும் அனுமதிக்கப்பட்டவையே. மாதவிடாய் ஏற்படும் கால கட்டத்தில் பெண் தொழுவது நோன்பு வைப்பது போன்றவைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறாள்.

Top Top

- ## சாட்சி கூறுதல்

திருக்குர்ஆனும் பைபிளும் வேறுபடும் மற்றொரு விசயம் பெண்கள் சாட்சி கூறுவதைப் பற்றியேயாகும். **பண விவகாரங்கள் சம்பந்தப்பட்ட விசயங்களில்** இரண்டு ஆண்களுடைய சாட்சிகளையோ அல்லது ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண்களின் சாட்சிகளையும் பெற வேண்டுமென்ற சட்டத்தை நம்பிக்கையாளர்கள் மேல் திருக்குர்ஆன் விதித்துள்ளது என்பது உண்மை (2:282) இருப்பினும், மற்ற சந்தர்ப்பங்களில் ஒரு பெண்ணின் சாட்சியை ஆணின் சாட்சிக்கு சமமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனவும் திருக்குர்ஆன் கட்டடையிட்டுள்ளது என்பதும் உண்மை. **உண்மையில், பெண்ணின் சாட்சியம் ஆணின் சாட்சியத்தையே வலுவில்லாததாகக் கூட ஆக்கி விடும்.** ஒருவன் தன் மனைவியின் மீது ஒழுக்கக் கேட்டுக் குற்றத்தை சாட்டினால், அவன் மனைவியின் குற்றத்திற்கு ஆதராமாக ஐந்து முறை சத்தியம் செய்ய வேண்டுமென திருக்குர்ஆன் கட்டளையிடுகின்றது. மனைவி அதை மறுத்து ஐந்து முறை சத்தியம் செய்தால் அவள் குற்றவாளியாக கருதப்படமாட்டாள் மேலும் இந்த இரண்டில் எது நடந்தாலும் திருமணபந்தம் இல்லாமலாக்கப்படுகிறது. (24: 6-11)

மற்றொரு புறம், யூத சமுதாயத்தில் பெண்கள் சாட்சி சொல்லவே அனுமதிக்கப்படுவதில்லை.[12] ஏவாள் செய்த பாவத்தினால் அவள் மீது விழுந்த ஒன்பது வகையான சாபங்களில் சாட்சி சொல்ல முடியாததும் ஒன்று என்று யூத அறிஞர்கள் கூறுகின்றனர். ( ஏவாள் விட்ட சொத்து'' என்ற அத்தியாயம் காண்க). இஸ்ரேலிலுள்ள யூத மத நீதி மன்றங்களில் இன்றளவும் பெண்கள் சாட்சி சொல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பெண்கள் ஏன் சாட்சி சொல்ல முடியாது

என்பதற்கு ஆப்ராஹாமின் மனைவியான சாரா பொய் சொன்னதாக ஆதியாகமம் 18:9-16ல் பதியப்பட்டிருப்பதை காரணமாக சுட்டிக்காட்டி யூத அறிஞர்கள் நியாயப்படுத்துகின்றனர். சாட்சி சொல்வதற்கு தகுதியற்றவளாக பெண் ஆகி விடுகிறாள் என்பதற்கு ஆதாரமாக இந்த சம்பவத்தை யூத அறிஞர்கள் கூறுகின்றனர். ***ஆதியாகமம் 18:9-16ல் சொல்லப்பட்ட இந்தக் கதை திருக்குர்ஆனில் ஒன்றிற்கு அதிகமான தடவை (11:69-74இ51:24-30) சொல்லப்பட்டிருந்தும் சாரா பொய் சொன்னதாக கூறப்படும் அந்தச் சம்பவம் தவிர்க்கப்பட்டிருப்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.*** கடந்த நூற்றாண்டு வரை கிறிஸ்தவ மேற்குலகு பெண்களை மத மற்றும் சிவில் விவகாரங்கள் இரண்டிலுமே சாட்சி சொல்வதிலிருந்து தடுத்து வந்தது.

பைபிளின்படி, ஒருவன் தன் மனைவியை ஒழுக்கக் கேட்டு குற்றம் சாட்டினால், அதற்கு எதிரான அவளின் சாட்சி ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. குற்றம் சாட்டப்பட்ட மனைவி மதச் சோதனைக்குட்படுத்தப்பட்டாள். மனைவியின் குற்றத்தையோ அல்லது பரிசுத்தத்தன்மையையோ நிரூபிக்கும் என நம்பப்படும் இந்தச் சோதனையில், மனைவி சிக்கலான அவமானகரமான சடங்குகளை எதிர்கொள்கிறாள். (எண்ணாகமம் 5:11-31) இந்தச் சோதனைக்குப்பின் அவள் குற்றவாளியென காணப்பட்டால் அவள் மரண தண்டனை விதிக்கப்படுவாள். அவ்வாறு அவளில் எந்த குற்றமும் காணப்படாவிட்டால் அவள் கணவனை எதுவும் செய்யப்படமாட்டாது.

இது தவிர, ஒருவன் ஒரு பெண்ணை மணந்த பிறகு அவள் கன்னியல்ல என்று அவன் குற்றங்சாட்டினால், அவளின் சொந்த சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவளின் பெற்றோர்கள் நகரத்து பெரியோர்களின் முன்னிலையில் அவளின் கன்னித்தன்மைக்கான ஆதாரத்தை கொண்டு வர வேண்டும். அவளின் பெற்றோர்களால் அவளின் பரிசுத்தத் தன்மையை நிரூபிக்க முடியாவிடில் அவள் அவளின் தந்தையின் வீட்டின் முன்னிலையிலேயே கல்லால் எறிந்து கொல்லப்படுவாள். அவளின் பெற்றோர்கள் அவளின் கன்னித்தன்மையை நிரூபித்து விட்டால், அவளின் கணவனுக்கு நூறு வெள்ளிப்பணம் அபராதமாக விதிக்கப்படும் மேலும் அவன் தான் உயிர்வாழும் வரை அவனின் மனைவியை விவாஹரத்து செய்ய முடியாது.

ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணின ஒருவன் அவளிடத்தில் பிரவேகசித்தபின்பு அவளை வெறுத்து நான் இந்த ஸ்திரீயை விவாகம் பண்ணி, அவளிடத்தில் சேர்ந்தபோது கன்னிமையைக் காணவில்லை என்று அவள் மேல் ஆவலாதியான விசேக்ஷங்களைச் சாற்றி அவளுக்கு அவதூறு உண்டாக்கினால் அந்த ஸ்திரீயின் தகப்பனும் அவள் தாயும் அவளுடைய கன்னிமையின் அடையாளத்தைப் பட்டணத்து வாசலிலுள்ள மூப்பரிடத்தில் (-தலைவரிடத்தில்) கொண்டுவரக்கடவர்கள். அங்கே அந்தப் பெண்ணின் தகப்பன் என் மகளை இந்த மனிதனுக்கு மனைவியாகக் கொடுத்தேன். இவன் அவளை வெறுத்து, நான் உன் மகளிடத்தில் கன்னிமையைக் காணவில்லைவென்று ஆவலாதியான விசேக்ஷங்களை அவள்மேல் சாற்றுகிறான்: என் மகளுடைய கன்னிமையின் அடையாளம் இங்கே இருக்கிறது என்று மூப்பரிடத்தில் சொல்வானாக. பின்பு பட்டணத்து மூப்பருக்கு (-தலைவருக்கு) முன்பாக அந்த வஸ்திரத்தை விரிக்கக்கடவர்கள். அப்பொழுது அந்தப் பட்ணத்து மூப்பர் (-தலைவர்) அந்த மனிதனைப் பிடித்து, அவனைத் தண்டித்து அவன் இஸ்ரவேலில் ஒரு கன்னியை அவதூறு பண்ணினதினாலே, அவன் கையில் நூறு வெள்ளிக்காசை அபராதமாக வாங்கி பெண்ணின் தகப்பனுக்குக் கொடுக்கக்கடவர்கள். அவளோ அவனுக்கு மனைவியாயிருக்கவேண்டும் அவன் தன் ஜீவனுள்ளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது. அந்தப் பெண்ணிடத்தில் கன்னிமை காணப்படவில்லையென்னும் சங்கதி மெய்ப்பட்டதேயானால், அந்தப் பெண்ணை அவள் தகப்பனுடைய வீட்டுவாசலுக்கு முன்பாகக் கொண்டு வந்து, அவள் இஸ்ரவேலில் மதிகெட்ட காரியத்தைச் செய்து தன் தகப்பன் வீட்டிலே வேசித்தனம் பண்ணினபடியினாலே, அவளுடைய பட்டணத்து மனிதர் அவளைக் கல்லெறிந்து கொல்லக்கடவர்கள் இப்படியே தீமைய உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய். (உபாகமம் 22:13-21)

Top Top

- ## கள்ள உறவு (விபசாரம்)

கள்ள உறவை பாவமானதாக எல்லா மதமும் கருதுகின்றன. விபச்சாரம் செய்த ஆண், பெண் ஆகிய இருவருமே மரண தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டுமென பைபிள் தீர்ப்பு கூறுகிறது. (லேவியராகமம் 20:10). இஸ்லாமும் விபச்சாரம் செய்த ஆணையும் பெண்ணையும் சமமாக தண்டிக்கிறது. இருப்பினும், விபச்சாரத்திற்கான திருக்குர்ஆனின் வரையறையும் பைபிளின் வரையறையும் வித்தியாசப்படுகின்றது. திருக்குர்ஆனைப் பொறுத்த வரையில் விபச்சாரம் என்பது திருமணமான ஆணோ அல்லது திருமணமான பெண்ணோ திருமணபந்தத்திற்கு அப்பால் கள்ள தொடர்பு கொள்வது என்பதாகும். ஆனால் பைபிளோ மணமான பெண் கள்ள உறவு கொள்வதை மாத்திரம் விபச்சாரமாக கருதுகின்றது. (லேவியராகமம் 20:10, உபாகமமம் 22:22, பழமொழிகள் 6:20, 7:27)

புருஷனுக்கு விவாகம்பண்ணப்பட்ட ஸ்திரீயோட ஒருவன் சயனிக்கக் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த ஸ்திரீயோட சயனித்த மனிதனும் அந்த ஸ்திரீயும் இருவரும் சாகவேண்டும்: இப்படியே தீமையை இஸ்ரவேலிலிருந்து விலக்கக்கடவாய். (உபாகமம் 22:22)

ஒருவன் பிறனுடைய மனைவியோட விபசாரம் செய்தால், பிறன் மனைவியோட விபசாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலை செய்யப்படக்கடவர்கள். (லேவியராகமம்20:10).

பைபிளின் வரையறைப்பிரகாரம், ஒரு திருமணமான ஆண் திருமணமாகாத பெண்ணுடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்தால் அது குற்றமாக ஒரு போதும் கருதப்படமாட்டாது. திருமணமான ஆண் திருமணமாகாத பெண்களுடன் உறவு கொண்டால் அவன் விபச்சாரகன் அல்ல மேலும் அவனுடன் சம்மந்தப்பட்ட திருமணமாகாத பெண்களும் விபச்சாரிகள் அல்லர். திருமணமான அல்லது திருமணமாகாத ஒருவன் திருமணமான பெண்ணுடன் உறவு கொள்ளும் போதுதான் விபச்சாரக் குற்றம் நிகழ்ந்ததாக கருதப்படுகின்றது. இந்த சம்பவத்தில் ஆண் திருமணமாகாதவனாக இருந்தாலும் விபச்சாரகனாகவே கணிக்கப்படுகின்றான் மேலும் பெண் விபச்சாரியாக கணிக்கப்படுகின்றாள். சுருக்கமாக சொல்லப்போனால், விபச்சாரம் என்பது திருமணமான பெண் சம்பந்தப்பட்ட கள்ள உறவு. பைபிளின் படி திருமணமான ஆணின் கள்ள உறவு விபச்சாரமேயல்ல. ஏன் இத்தகைய ஒரு தலைப்பட்சமான ஒழுக்க நியதி? மனைவி கணவனின் சொத்தாக கணிக்கப்பட்டாள்: ஆகவே அவளின் கள்ள தொடர்பு கணவனுக்கு அவளின் மேலிருக்கும் தனிப்பட்ட உரிமையை மீறுவதாக அமையும். கணவன் சொத்தான மனைவிக்கு அவனின் மேல் எந்த உரிமையும் இல்லை.[15] அதாவது, ஒருவன் திருமணமான பெண்ணுடன் கள்ள உறவு கொண்டால், அவன் மற்றவனின் சொத்தின் மீது வரம்பு மீறுவதாகவே கணிக்கப்பட்டு தண்டிக்கப்படுவான்.

இஸ்ராயீலில் இன்று வரை, ஒரு ஆண் திருமணமாகாத பெண்ணுடன் கள்ளத்தொடர்பு கொண்டு அதன் மூலம் குழந்தை பெற்றால் அவனுடைய குழந்தைகள் சட்ட பூர்வமான குழந்தைகளாக கருதப்படும். ஆனால், ஒரு திருமணமான பெண் திருமணமான அல்லது ஆகாத ஆணுடன் உடலுறவு கொண்டு அதன் மூலம் குழந்தைகள் பெற்று விட்டால் அவளுடைய அக்குழந்தைகள் சட்ட விரோதமானதாக மாத்திரமல்லாமல் தேவடியாள் பிள்ளைகள் என்றும் கணிக்கப்பட்டு மற்ற யூதர்களால் திருமணம் செய்ய தடுக்கப்பட்டு விடுகிறார்கள். அவர்களை அவர்களைப்போன்ற தேவடியாள் மக்களோ அல்லது புதிதாக மதம் மாறியவர்களோ திருமணம் செய்யலாம். இந்த தடை அந்தக் குழந்தைகளின் பத்து தலைமுறை வரை விபச்சாரத்தின் கறை நீங்கும் வரை நீடிக்கிறது.[16]

ஆனால் திருமறை குர்ஆனோ இதற்கு நேர்மாறாக எந்தப் பெண்ணையும் எந்த ஆணின் சொத்தாக கருதிடவில்லை. திருமணமானவர்களுக்கிடையேயுள்ள உறவை திருமறை குர்ஆன் உன்னதமான முறையில் விவரிக்கிறது.

அவனுடைய சான்றுகளில் இதுவும் ஒன்றாகும். அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே மனைவியரைப் படைத்தான்: நீங்கள் அவர்களிடம் அமைதி பெற வேண்டும் என்பதற்காக! மேலும், உங்களிடையே அன்பையும், கருணையையும் தோற்றுவித்தான். திண்ணமாக, சிந்திக்கும் மக்களுக்கு இதில் நிறையச் சான்றுகள் உள்ளன. (30:21)

இதுதான் திருமணத்தைப்பற்றி திருக்குர்ஆனின் கொள்கை: அன்பு, இரக்கம், அமைதி, ஆகியவையேயாகும். மனைவி கணவனின் சொத்தாவதும் போன்ற ஒருதலைப்பட்சமான ஒழுக்க நியதிகளல்ல.

Top Top

- ## நேர்ச்சை சபதம்

இறைவனுக்கு செய்யும் நேர்ச்சைகளை ஒருவன் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டுமென பைபிள் கூறுகின்றது. அவன் தன் வார்த்தைகளை முறிக்கக் கூடாது. ஆனால் மறுபுறம், ஒரு பெண்ணின் நேர்ச்சையோ அவளை கட்டுப்படுத்துவதல்ல. தந்தையின் வீட்டில் வாழ்ந்து வந்தால் அது அவளின் தந்தையால் அங்கீகரிக்கப்பட வேண்டும், அவள் திருமணமானவளானால் கணவனால் அங்கீகரிக்கப்பட வேண்டும். தந்தையாரோ∴கணவனோ மகளின்∴மனைவியின் நேர்ச்சையை அங்கீகரிக்காவிட்டால் அவளின் எல்லா சபதங்களும் ஒன்றுமில்லாமலாகி விடும்.

அவள் செய்த பொருத்தனைகளையும் அவள் செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்தின நிபந்தனையையும் அவளுடைய தகப்பன் கேட்கிற நாளில் அவன் வேண்டாம் என்று தடுத்தால், அதை நிறைவேற்ற வேண்டியதில்லை, அவளுடைய புருஷன் அதைக் கேட்கிற நாளில் அவன் வேண்டாம் என்று தடுத்து, அவள் செய்த பொருத்தனையும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்ட நிபந்தனையும் செல்லாதபடி செய்தானேயானால், அப்பொழுது கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார். (எண்ணாகமம் 30: 2-15)

ஏன் பெண்ணின் வார்த்தை அவளை கட்டுப்படுத்தவில்லை? பதில் மிகவும் எளிது. திருமணத்திற்கு முன்பு அவள் தந்தையின் சொத்தாகவும் திருமணத்திற்கு பின் அவள் கணவனின் சொத்தாகவும் மாறிவிடுவதால் அவள் வார்த்தைகளுக்கு எந்த மதிப்புமில்லை. மகளின் மேல் தந்தையின் கட்டுப்பாடு எந்த அளவிற்கென்றால் அவர் விரும்பினால் அவளை விற்றுவிடக் கூடச் செய்யலாம்! இது பற்றி அறிஞர்களின் எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. ஆண் தன் மகளை விற்கலாம். ஆனால் பெண் தன் மகளை விற்க முடியாது. ஆண் தன் மகளின் திருமணத்தை நிச்சயிக்கலாம் ஆனால் பெண் அவள் மகளின் திருமணத்தை நிச்சயிக்க முடியாது.''[17] திருமணம் என்பது பெண்ணின் மேலுள்ள ஆதிக்க மாற்றம்தான் என்பது அறிஙர்களின் எழுத்துக்கள் சுட்டிக்காட்டுகின்றன : திருமண நிச்சயதார்த்தம் என்பது, ஒரு பெண்ணை கணவனின் புனிதமான -வரம்பு மீற முடியாத- சொத்தாக மாற்றுவது என்பதுதான்....'' பெண் ஒருவரின் சொத்து என கருதப்பட்டதால் அவளின் உரிமையாளர் அனுமதிக்காத எந்த நேர்ச்சையும் செய்ய முடியாது என்பது தெளிவு.

பெண்களின் நேர்ச்சை சம்பந்தமான பைபிளின் கட்டளை அவர்கள் மீது இந்த நூற்றாண்டின் ஆரம்பம் வரை எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தியிருந்தது என்பது கவனிக்கப்பட வேண்டியது. மேற்கத்திய உலகில் திருமணமான பெண்ணிற்கு எந்த சட்ட அந்தஸ்தும் இருந்ததில்லை. அவளின் எந்த செயலும் சட்ட பூர்வமானதல்ல. அவள் செய்த எந்த ஒப்பந்தத்தையும், பேச்சுவார்த்தைகளையும் கணவன் இல்லாமலாக்க முடியும். மேற்கத்திய பெண்கள், (யூத-கிறிஸ்தவத்தின் வாரிசுகளின் பெரும்பாலானோர்) அவர்கள் மற்றவரின் சொத்தாக இருப்பதனால் (மற்றவர்களை) கட்டுப்படுத்தும் எந்த ஒப்பந்தத்தையும் செய்ய சக்தியற்றவர்களாக கருதப்பட்டனர். அவர்களின் தந்தையர்கள் மற்றும் கணவன்மார்கள் ஆகியோருடனான உறவு பற்றிய பைபிளின் கொள்கையால் பெண்கள் கடந்த இரண்டாயிரம் வருடங்களாக துன்பமனுபவித்து வருகின்றனர்.[18]

இஸ்லாத்தில் ஒவ்வொரு முஸ்லிமின் நேர்ச்சையும், அவர் ஆணாயினும் பெண்ணாயினும், அவரை கட்டுப்படுத்தும். ஒருவரின் வாக்குறுதியை மறுப்பதற்கு மற்றவர் எவருக்கும் உரிமையில்லை. ஆணாலோ பெண்ணாலோ செய்யப்பட்ட புனித நேர்ச்சையை∴சபதத்தை நிறைவேற்ற தவறினால் திருக்குர்ஆன் சுட்டிக்காட்டியவாறு அதற்கான பரிகாரம் செய்ய வேண்டும்.

நீங்கள் செய்த வீணான சத்தியங்களுக்காக அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிப்பதில்லை. ஆயினும் நீங்கள் உறுதிப்படுத்திச் செய்த சத்தியங்களுக்காக (அவற்றை நீங்கள் முறித்து விட்டால்) உங்களை அவன் அவசியம் தண்டிப்பான். (முறித்துவிட்ட) சத்தியத்திற்கான குற்றப்பரிகாரம் (இதுதான்): நீங்கள் உங்கள் குடும்பத்தாருக்கு அளிக்கின்ற உணவுகளில் நடுத்தரமான வகையிலிருந்து பத்து வறியவர்களுக்கு உணவளிக்க வேண்டும். அல்லது அவர்களுக்கு ஆடைகள் வழங்க வேண்டும். அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். ஆனால் (இவற்றில்) எதற்கும் சக்தி பெறாதவர்கள் மூன்று நாட்களுக்கு நோன்பு நோற்க வேண்டும். நீங்கள் செய்த சத்தியங்களை முறித்து விட்டால் இதுதான் அவற்றிற்குரிய குற்றப்பரிகாரமாகும். எனவே உங்கள் சத்தியங்களை (முறித்து விடாமல்) பேணுங்கள். (5:89)

நபித்தோழர்கள், தோழியர்கள் நேரடியாக வந்தே அவர்களிடம் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர். பெண்களும் ஆண்களும் தனித்தனியாக வந்து உறுதிப்பிரமாணம் செய்வர்:

நபியே! இறைநம்பிக்கை கொண்ட பெண்கள் உம்மிடம் விசுவாசப் பிரமாணம் செய்வதற்காக வந்து, அவர்கள் அல்லாஹ்வுடன் எதனையும் இணைவைக்கமாட்டார்கள் என்றும், திருடமாட்டார்கள் என்றும், விபச்சாரம் செய்ய மாட்டார்கள் என்றும், தம்முடைய குழந்தைகளை கொல்லமாட்டார்கள் என்றும் தங்களுடைய கை கால்களுக்கிடையே எந்த அவதூறையும் இட்டுக்கட்ட மாட்டார்கள் என்றும், எந்த ஒரு நல்ல காரியத்திலும் உமக்கு மாறு செய்ய மாட்டார்கள் என்றும் வாக்குறுதி அளித்தால், அப்போது அவர்களிடமிருந்து விசுவாசப் பிரமாணத்தை ஏற்றுக்கொள்ளும். மேலும், அவர்களுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரும். திண்ணமாக, அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் கருணை புரிபவனுமாய் இருக்கிறான். (60:12)

ஒரு ஆண் அவன் மகள் சார்பாகவோ அல்லது மனைவி சார்பாகவோ சத்தியப் பிரமாணம் செய்ய முடியாது. அது போல அவனின் பெண் உறவினர்களால் செய்யப்பட்ட சத்தியப் பிரமாணங்களை ரத்து செய்யவும் முடியாது.

Top Top

- ## மனைவியின் சொத்து

திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கையின் முக்கியத்துவத்தின் மேலுள்ள தீவிர நம்பிக்கையில் மூன்று மதங்களும் பங்கு கொள்கின்றது. குடும்பத்திற்கு கணவனே தலைவன் என்பதிலும் அவைகள் ஒத்துப்போகின்றன. இருப்பினும், கணவனின் இந்த தலைமைத்துவத்தின் வரையறையில்தான் மூன்று மதங்களுக்கிடையேயும் மிக முக்கியமான வித்தியாசங்கள் இருக்கின்றன. யூத-கிறிஸ்தவ வழக்கங்கள், இஸ்லாத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட விதமாக, இந்த கணவனின் தலைமைத்துவப் பொறுப்பை மனைவியின் உரிமையாளர் என்ற அளவிற்கு நீட்டி விடுகின்றன.

தன் அடிமைக்கு அவன் உரிமையாளனாக இருப்பது போலவே மனைவிக்கும் உரிமையாயிருக்கிறான் என்ற கொள்கையிலிருந்துதான் மனைவியை கணவன் எப்படி நடத்த வேண்டும் என்பது நிர்ணயிக்கப்படுகின்றது. கள்ளவுறவு பற்றிய ஒரு தலைப்பட்சமான சட்டம் மேலும் மனைவியின் நேர்ச்சையை ரத்து செய்ய கணவனுக்குள்ள அதிகாரம் ஆகியவைகள் இந்த கொள்கையின் விளைவே. மனவைியின் சொத்திலோ அல்லது அவளின் சம்பாத்தியத்திலோ அவளின் கட்டுப்பாடு மறுக்கப்படுவதற்கும் இதுதான் காரணம். யூதப் பெண்ணிற்கு திருமணமாகியவுடனே அவள் தன் சொத்து தன் சம்பாத்தியங்கள் ஆகியவற்றை கணவனிடம் இழந்து விடுகிறாள். மனைவியையே சொத்தாக பெற்றிருப்பதால் அவளுக்கிருக்கக் கூடிய அனைத்து சொத்துக்களும் அவனையே சேரும் என யூத அறிஞர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர்: மனைவியையே சொத்தாக பெறும் போது அவளின் சொத்துக்களும் அவனுக்குத்தான் என்பது இயல்பானதல்லவா?" என்றும் மனைவியை அவன் பெற்றிருப்பதால் அவளின் சொத்துக்களை மாத்திரம் அடையக்கூடாதா என்ன?" என்றும்

அவர்கள் கூறுகின்றனர். இதனால், பெரும் பணக்காரப் பெண்களைக்கூட திருமணம் சல்லிக்காசற்றவர்களாக ஆக்கிவிடுகின்றது. மனைவியின் பொருளாதார நிலையைப்பற்றி தல்மூது இவ்விதமாக விவரிக்கிறது:

மனைவியின் சொத்துக்களனைத்தும் கணவனுக்கே சேருவதால் மனைவிக்கென்று எப்படி எதுவுமிருக்க முடியும்? அவனுடையவைகளனைத்தும் அவனுடையவைகளே மேலும் அவளுடையவைகள் அனைத்தும் அவனுடையவைகளே.... அவளின் சம்பாத்தியங்களும் அவள் தெருவில் கண்டெடுத்தவைகளும் அவனுடையவைகளே. வீட்டுச் சாமான்களும் ஏன் மேசையிலிருக்கும் ரொட்டியின் சிதறியபாகம் முதற்கொண்டு அவனுடையவைகளே. அவள் எவரையாவது விருந்துக்கழைத்து அவருக்கு உணவளித்துவிட்டால், அவள் தன்னுடைய கணவனின் சொத்திலிருந்து திருடியவளாவாள்..." (San. 71a Git. 62a)

உண்மை நிலையென்னவெனில், யூதப்பெண்ணின் சொத்தே மாப்பிள்ளைகளைக் கவருவதற்காகவே இருந்தன. தங்களின் மகளுக்கு வரதட்சணையாக கொடுப்பதற்காக யூதக்குடும்பம் தன் சொத்திலிருந்து ஒரு பாகத்தை ஒதுக்கி வைக்கும். இந்த வரதட்சணை முறைதான் பெண்களை அவர்களின் தந்தைகளின் சுமையாக கருதும்படி செய்தது. தந்தை அவளை வளர்த்து மேலும் பெருஞ்சொத்தை கொடுத்து அவளை திருமணம் செய்து கொடுக்க வேண்டியதிருந்தது. ஆகவே பெண்ணானவள் யூதக் குடும்பத்தைப் பொறுத்தவரை கடனைப் போன்றவளேயல்லாமல் சொத்தைப்போன்றவளல்ல.[21] அவர்கள் கடன் போன்றவர்கள் என்கின்ற இந்த நிலை இருப்பதால்தான் பெண்களின் பிறப்பு சந்தோசமாக யூத சமூகத்தில் கொண்டாடப்படுவதில்லை. வரதட்சணை திருமணக்கொடையாக கணவனுக்கு, அதை அவன் காக்க வேண்டுமென்ற நிபந்தனையோடு, கொடுக்கப்படுகின்றது. கணவன் அதன் நடைமுறை உரிமையாளராகி விடுகிறான், ஆனால் அதை அவன் விற்க முடியாது. திருமணமானவுடனேயே தான் கொடுத்த வரதட்சனையின் மேலுள்ள கட்டுப்பாட்டை மனைவி முற்றிலும் இழந்து விடுகிறாள். மேலும் அவளை பாராமரிக்கும் கணவனின் கடமைக்கு கைமாறாக அவள் வேலைக்குப்போய் சம்பாதித்து அவளின் சம்பாத்தியங்கள் முழுவதையும் கணவனிடமே கொடுத்தும் விட வேண்டும். அவள் தன் சொத்தை விவாகரத்து பெறும் போதோ அல்லது கணவனின் மரணத்தின் போதோதான் திரும்பப்பெற்றிட முடியும். மனைவி இறந்து விடுவாளாயின் கணவன் அவளின் முழுச்சொத்திற்கும் வாரிசாகிவிடுவான். ஆனால் கணவன் முதலில் இறந்து விடுவானாயின் மனைவி முதலில் கொடுத்ததை மாத்திரம் திரும்பப்பெற முடியும் ஆனால் கணவனின் சொத்திலிருந்து அவளுக்கு எதுவும் கிடைக்காது. கணவன் மணக்கொடையாக மணமகளுக்கு ஏதேனும் கொடுக்க வேண்டும். ஆயினும் அவள் திருமணபந்தத்திலிருக்கும்வரை அதன் நடைமுறை உரிமையாளராக கணவனே இருப்பான்.[22]

சமீபகாலம் வரை கிறிஸ்தவமும் அதே யூத நடைமுறையைத்தான் பின்பற்றிவந்தது. (கான்ஸ்டான்டைனிற்கு பிறகு) கிறிஸ்தவ ரோமசாம்ராஜ்யத்திலிருந்த மத மற்றும் சிவில் அதிகாரிகள் திருமணத்தை அங்கீகரிப்பதற்கு சொத்துப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுவதை ஒரு நிபந்தனையாகவே வைத்திருந்தனர். குடும்பங்கள் பெண்களுக்கு (போட்டியின் காரணமாக) கூடுதல் கூடுதல் வரதட்சணையை வழங்கின அதன் காரணமாக ஆண்கள் சீக்கிரத்தில் திருமணம் செய்ய விரும்புவதும் அதே நேரத்தில் பெண்களின் குடும்பம் அவளின் திருமணத்தை (பொருளாதார குறைவின் காரணமாக) தள்ளிப்போடுவதும் வழக்கமாகிவிட்டது.[23] கானானிய சட்டத்தின் பிரகாரம் விவாகரத்தின்போதே மனைவி தன் வரதட்சணையை, அவள் விபச்சாரக்குற்றத்திருக்குரியவளாக இல்லாமலிருந்தால், திரும்பப் பெறுவாள். கானானிய மற்றும் சிவில் சட்டத்தின் பிரகாரம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் கிறிஸ்தவ ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருந்த பெண்கள் சொத்துரிமையை இழந்திருந்தனர். உதாரணத்திற்கு, 1632 ஆண்டு தொகுத்து வெளியிடப்பட்ட ஆங்கிலேயச் சட்டத்தில் அளிக்கப்பட்டிருந்து பெண்களின் 'உரிமைகள்' என்ற தலைப்பில் கணவனுக்குச் சொந்தமானது கணவனுக்கே. மனைவிக்குச் சொந்தமானதும் கணவனுக்கே." என்பதும் அடங்கியிருந்தது.[25] திருமணத்தால் பெண் அவளுடைய சொத்துரிமையை மாத்திரம் இடிக்கவில்லை அவளின் தனித்தன்மையே இழந்து விடுகிறாள். அவளின் எந்தச் செயலும் சட்டபூர்வமானதாக கணிக்கப்படமாட்டாது. அவள் செய்த எந்த விற்பனை அல்லது அன்பளிப்பு ஆகியவற்றை அவளின் கணவன் சட்டபூர்வமற்றதாக ஆக்கிடமுடியும். அவளிடம் எந்த ஒப்பந்தமும் செய்து

கொண்டவன் மோசடி செய்த குற்றவாளியாக குற்றஞ்சாட்டப்படுவான். மேலும் அவள் யார் மேலும் வழக்குத் தொடரவோ அவள் மீது யாரும் வழக்குத் தொடரவோ முடியாது மேலும் அவள் தன் கணவனின் மீதும் வழக்குத் தொடர முடியாது. [26] திருமணமான பெண்ணை சட்டம் ஒரு குழந்தையைப் போலவே நடத்தியது. மனைவி அவள் கணவனின் சொத்தாக மாறிவிடுகிறாள் ஆகவே அவள் தன் சொத்துரிமை, சட்டபூர்வ தனித்தன்மை மற்றும் குடும்பப் பெயர் ஆகியவற்றை இழந்து விடுகிறாள். [27]

யூத-கிறிஸ்தவ மதங்கள் தற்காலம் வரை திருமணமான பெண்களுக்கு மறுத்திருந்த சுதந்திர தனித்தன்மையை இஸ்லாம் ஏழாம் நூற்றாண்டே அவர்களுக்களித்து அவர்களை கண்ணியப்படுத்திவிட்டது. இஸ்லாத்தில் மணப்பெண்ணோ அல்லது அவளின் குடும்பமோ மாப்பிள்ளைக்கு எந்த சொத்தையும் அளிக்கவேண்டியதில்லை. முஸ்லிம் குடும்பத்தில் பெண்ணானவள் ஒரு சுமையல்ல. நல்ல கணவன்களை அடையும் பொருட்டு பணத்தை வைத்துக்கொண்டு தேடித் திரியவேண்டியதில்லை என்னும் அளவிற்கு இஸ்லாம் பெண்களை கண்ணியப்படுத்தியுள்ளது. இங்கே மாப்பிள்ளைதான் பெண்ணுக்கு மணக்கொடையை அளிக்க வேண்டும். இந்தக்கொடை பெண்ணின் சொத்தாகும். இதில் மாப்பிள்ளைக்கோ அல்லது பெண்ணின் குடும்பத்திற்கோ எந்த உரிமையும் கட்டுப்பாடும் இல்லை. இன்றைய முஸ்லிம் சமுதாயங்களில் சிலவற்றில் திருமணக்கொடைகள் லட்சக்கணக்கான டாலர்கள் வரையும் போய் விடுவது அசாதாரணமல்ல. [28] மனைவியின் சொத்தில் கணவனுக்கு, அவள் மனமுவந்து தருவதைத் தவிர, வேறு எந்த உரிமையும் இல்லை. இது சம்பந்தமாக திருக்குர்ஆன் தன் நிலையை மிகத் தெளிவாக தெரிவித்துள்ளது:

நீங்கள் (திருமணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹர்களை (திருமணக் கொடைகளை) மகிழ்வோடு கொடுத்து விடுங்கள். அதிலிருந்து ஒரு சிறிதை, அவர்கள், (தங்கள்) மனமார உங்களுக்கு விட்டுக் கொடுத்தால் அதனை நீங்கள் தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள். (4:4)

மனைவியையும் குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பு கணவனையே சார்வதால் அவளிடம் இருக்கும் சொத்துக்களும் அவளின் சம்பாத்தியங்களும் அவளின் முழு கட்டுப்பாட்டிலேயும் அவளின் உபயோகத்திற்காகவுமே இருக்கும். [30] மனைவி எவ்வளவு செல்வமுடையவளாக இருந்தபோதிலும் அவளும் குடும்பச் செலவிற்கு பங்களிக்கவேண்டுமென்ற கடமை, அவள் விரும்பிக் கொடுத்தாலே தவிர, அவள் மீது இல்லை. கணவனுக்கும் மனைவிக்கும் ஒருவர் சொத்திலிருந்து மற்றவருக்கு வாரிசுரிமை உண்டு. மேலும், திருமணமான பெண் இஸ்லாத்தில் அவளின் தனித்தன்மையையும் குடும்பப் பெயரையும் தக்கவைத்துக்கொள்கிறாள். [31] முஸ்லிம் பெண்களின் உரிமைகள் பற்றி ஒரு அமெரிக்க நீதிபதி இவ்வாறு தெரிவித்தார்: ஒரு முஸ்லிம் பெண் பத்து முறை கூட திருமணம் செய்யலாம், அவளின் பல்வேறு கணவர்களால் அவளின் தனித்தன்மை மறைந்திடுவதில்லை. தன் பெயருடனும் சட்டபூர்வ தனித்தன்மையுடனும் அவள் ஒரு சூரியமண்டலத்திலுள்ள கிரகம் போலத் திகழ்கிறாள்.”

Top Top

- விவாகரத்து

விவாகரத்தைப் பொறுத்தவரையில் மூன்று மதங்களும் முக்கியமான வித்தியாசங்களை கொண்டுள்ளன. கிறிஸ்தவம் விவாகரத்தை முற்றிலும் தடை செய்கிறது. திருமணபந்தம் கலைக்கப்படமுடியாதது என புதிய ஏற்பாடு திட்டவட்டமாக கூறுகிறது. இயேசு சொன்னதாக கூறப்படுவதாவது, விபச்சாரக்குற்றத்திற்கல்லாமல் வேறெதற்காகவும்

தன் மனைவியை விவாகரத்து செய்பவன் அவளை விபச்சாரியாக்குவதற்கு காரணமாகிவிடுகிறான் மேலும் விவாகரத்து செய்யப்பட்டவளை மணப்பவனும் விபச்சாரம் செய்தவனாவான்.'' (மத்தேயு 5:32)

நீக்குப்போக்கற்ற இந்தக்கொள்கை சந்தேகமில்லாமல் நிறைவேற்ற முடியாத ஒன்றே. மனிதர்கள் ஒழுக்கமாண்புகளில் பரிபூரணமாகியிருப்பது போன்றதொரு நிலையை இக்கொள்கை தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால் அத்தகையதொரு நிலையை மனித சமூகம் இதுவரை எட்டியதில்லை. தங்களின் திருமண வாழ்வு சீர்செய்ய முடியாத அளவிற்கு ஆகிவிட்டதென்று ஒரு தம்பதி உணரும் பட்சத்தில் அவர்களை விவாகரத்து செய்யவிடாமல் தடுப்பது அவர்களுக்கு எந்த நன்மையையும் ஏற்படுத்திவிடாது. ஒருவருக்கொருவர் விரும்பாத தம்பதிகளை அவர்களின் விருப்பத்திற்குமாறாக ஒன்றாக இருக்க கட்டாயப்படுத்துவது பயனற்றதும் அறிவுக்கு உகந்தது அல்லாததுமாகும். ஆகவே, முழு கிறிஸ்தவ உலகமும் விவாகரத்தை அனுமதிக்க கட்டாயப்படுத்தப்பட்டிருப்பது வியப்பிற்குரியதல்ல.

மற்றொருபுறம், யூத மதமோ எந்த காரணமுமின்றி, கணவன் மனைவியை சிறிதளவேனும் விரும்பாவிட்டாலும், விவாகரத்து செய்ய அனுமதித்துள்ளது.

ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணிக்கொண்டபின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளை தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம். அவள் அவனுடைய வீட்டை விட்டுப் போனபின்பு வெறொருவனுக்கு மனைவியாகலாம். அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டாலும், அவளை விவாகம்பண்ணின அந்த இரண்டாம் புருஷன் இறந்து போனாலும், அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. (உபாகமம் 24: 1-4)

மேலுள்ள வசனத்திலுள்ள இலச்சையான'' பிரியமற்ற'' என்ற வார்த்தைகளை புரிந்து கொள்வதில் யூத அறிஞர்களிடையே கணிசமான வேறுபாடு உள்ளது. அவர்களின் கருத்து வேறுபாடுகளை தல்மூது குறிப்பிடுகிறது.

தன் மனைவியின் விபச்சாரக் குற்றம் இருந்தால்தான் அவளை விவாகரத்து செய்யலாமென ஷமாமி பிரிவு கருதுகிறது ஆனால் அவனுடைய ஏதேனுமொரு உணவை பாழ்படுத்தி விட்டால் கூட அவளை விவாகரத்து செய்யலாமென ஹில்லெல் பிரிவு கருதுகிறது. அவளை விட அதிக அழகுள்ள பெண்ணை காணும் போது கூட அவளை விவாகரத்து செய்யலாம் என அகீபா அறிஞர் கூறுகிறார்கள். (Gittin 90a-n)

புதிய ஏற்பாடு ஷமாமி பிரிவின் கருத்தையும் யூதச் சட்டம் ஹில்லெல், அறிஞர் அகீபா ஆகியோர்களின் கருத்தையும் பின்பற்றுகின்றன. ஹில்லெல் பிரிவின் கருத்து மேலோங்கியதால் எந்த காரணமுமின்றி மனைவியை விவாகரத்து செய்யும் சுதந்திரத்தை யூதச் சட்டம் கணவனுக்கு அளித்துள்ளது. பிரியமற்ற'' மனைவியை விவாகரத்து செய்யும் உரிமையை அளிப்பதோடு மாத்திரம் பழையஏற்பாடு நின்று விடாமல் கெட்ட மனைவியை'' விவாகரத்து செய்வதை கடமையாகவும் ஆக்குகிறது.

கெட்ட மனைவியானவள் அவமானத்தையும் தலைகுனிவையும் மனவேதனையையுமே கொண்டு வருகிறாள். எவனுடைய மனைவி கணவனை மகிழ்விக்கத் தவறுகிறாளோ அவனின் கை தளர்ந்தும் முட்டு வலுவிலந்தும் போகும். பாவத்தின் தொடக்கம் பெண்ணேயாவாள், அவளாலேயே நாமெல்லாம் சாகிறோம். ஓழுக்குள்ள கலத்தை சொட்டவோ அல்லது கெட்ட மனைவி அவள் விரும்பியதை சொல்லவே அனுமதிக்காதே. உன் கட்டுப்பாட்டை அவள் ஏற்றுக்கொள்ளவில்லையெனில் அவளை விவாகரத்து செய்தனுப்பிவிடு. (Ecclesiasticus 25:15)

மனைவியிடம் காணப்படும், கணவர்களால் விவாகரத்து செய்யப்படவேண்டிய அளவிற்குள்ள குணங்களாக, சில குணங்களை தல்மூது குறிப்பிட்டுச் சொல்கிறது: 'தெருவில் சாப்பிட்டாலோ, அவள் தெருவில் முழுமூச்சாக குடித்தாலோ, தெருவில் குழந்தைக்கு பாலூட்டினாலோ அவள் தன் கணவனை விட்டு விலகி விட வேண்டுமென அறிஞர் மேயர் கூறுகிறார். (பத்து வருடம் குழந்தை பெறாத) மலட்டு மனைவியை விவாகாரத்து செய்வதையும் தல்மூது கடமையாக்கியுள்ளது. ஒருவன் மணம் செய்து பத்து வருடமான பின்பும், மனைவி குழந்தையேதும் பெறவில்லையெனில் அவன் அவளை விவாகரத்து செய்து விட வேண்டும்." (Yen. 64a).

கணவர்களுக்குள்ள உரிமைகள் இவ்வாறிருக்கையில் மனைவிகள் இதுபோன்ற கணவன்களை விவாகரத்து செய்திட முடியாது. இருப்பினும், யூத மனைவி மிகவும் வலுவான காரணங்கள் இருந்தால் மாத்திரம் விவாகரத்திற்காக கோர்ட்டில் வழக்கு தொடர முடியும். மிகவும் குறிப்பிட்ட சில காரணங்கள் இருந்தால் மாத்திரமே அவள் விவாகரத்து கோர முடியும். அவைகள் : உடல் கோளாறுகள், தோல் வியாதிகள், குடும்ப வாழ்க்கையில் ஈடுபடமுடியாமை போன்றவைகளாகும். மனைவியின் விவாகரத்து கோரிக்கையை நீதிமன்றம் ஆதரிக்கத்தான் முடியுமே தவிர திருமணபந்தத்தை ரத்து செய்வதற்கான அதிகாரம் அதற்கில்லை. ஆனாலும் நீதிமன்றம் விவாகரத்து செய்ய நிர்ப்பந்திக்கும் வகையில் கணவனை கண்டிக்க, அபராதமிட, சிறையிலிட மேலும் சமூகவிலக்கம் செய்யலாம். இருந்தும், கணவன் விரும்பினால் பிடிவாதமாக இருந்தால், அவளை விவாகரத்து செய்ய மறுத்து காலவரையற்று கட்டுண்டு கிடக்கச்செய்ய முடியும். இதைவிட மோசமானதென்னவெனில், அவன் அவளை கணவனுமில்லாதவளாக விவாகரத்தும் செய்யப்படாதாவளாக இந்த நிலையிலேயே விட்டுவிட்டு சென்றும் விடலாம். அவன் வேறு பெண்ணை திருமணம் செய்யலாம் அல்லது திருமணம் செய்யாமலேயே வேறொரு பெண்ணை வைத்துக்கொண்டு அவள் மூலம் குழந்தைகள் பெறலாம் (இத்தகைய குழந்தைகள் யூதச் சட்டத்தின்படி சட்டபூர்வமானதாகவே கருதப்படுகின்றன.) இவ்வாறு விடப்பட்ட மனைவி அவள் இன்னும் மற்றொருவனின் சட்டபூர்வமான மனைவியாக இருப்பதால் வேறு எவனையும் திருமணம் செய்ய முடியாது மேலும் மற்ற எவனோடு வாழவும் முடியாது அப்படி வாழ்ந்தால் அவள் விபச்சாரியாக கணிக்கப்படுவாள் மேலும் அதன் மூலம் பிறக்கும் குழந்தைகள் பத்து தலைமுறைவரை தேவடியாள் மக்களாகவே கணிக்கப்படுவர். இவ்வாறு விவாகரத்தும் கிடைக்காமல் கணவனுமில்லாமல் இருக்கும் பெண் அகூனா (விலங்கிடப்பட்ட பெண்) என்றழைக்கப்படுகிறாள். அமெரிக்காவில் இத்தகைய யூத அகூனாத்கள் (அகூனாவின் பன்மை) சுமார் 1000 பேர் முதல் 1500 பேர் வரையும் இஸ்ராயீலில் 16000 பேர் வரையுமுள்ளனர். இவ்வாறு மாட்டிக்கொண்ட மனைவிகளிடம் விவாகரத்திற்காக யூத கணவன்மார்கள் ஆயிரக்கணக்கான டாலர்களை வாங்குகிறார்கள்.[35]

விவாகரத்து சம்பந்தமாக இஸ்லாம் கிறிஸ்தவம் யூதம் ஆகிய மதங்களுக்கிடையே நடு நிலைமையை வகிக்கிறது. இஸ்லாத்தில் திருமணம் பந்தம் என்பது மிகவும் புனிதமானதாக இருப்பதால், நிர்ப்பந்தமான காரணங்களுக்காகவேயல்லாமல் முறிக்கப்படக்கூடாது. தங்களின் திருமணபந்தம் ஆபத்தான நிலையிலிருக்கும் போது அதை சீர்செய்வதற்காக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இஸ்லாம் தம்பதிகளை வலியுறுத்துகிறது. வேறு வழியே இல்லையெனும் பட்சத்திலல்லாது விவாகாரத்து செய்யப்படக்கூடாது. சுருக்கமாகச் சொல்லப்போனால், இஸ்லாம் விவாகரத்தை அங்கீகரித்துள்ளதெனினும் அதை முடிந்த அளவிற்கு தடுக்கிறது. முதலில் அதனுடைய அங்கீகார பக்கத்தை நாம் ஆராயலாம். தங்களின் திருமணபந்தத்தை முறித்துக் கொள்வதற்கு இஸ்லாம் இருவருக்குமே உரிமை வழங்கியுள்ளது. கணவனுக்கு தலாக் (விவாகரத்து) உரிமையை கொடுத்துள்ளது. மேலும், யூத மதத்தைப் போலல்லாமல், மனைவிக்கும் கு லா என்று சொல்லப்படும் விவாகரத்து உரிமையை கொடுத்துள்ளது. கணவன் விவாகரத்தின் மூலம் திருமணபந்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தால் அவன் கொடுத்த திருமணகொடையிலிருந்து எதையும் அவன் திரும்பப் பெற முடியாது. தான் கொடுத்த திருமண கொடை எத்துணை விலையுயர்ந்ததாயிருப்பினும் மதிப்பு மிக்கதாயிருப்பினும் அதை திரும்ப வாங்கக்கூடாதென விவாகரத்து செய்யும் கணவன்மார்களை திருக்குர்ஆன் மிகத் தெளிவாக தடைசெய்கிறது :

நீங்கள் ஒரு மனைவிக்குப் பதிலாக வெறொருத்தியை மனைவியாகக் கொண்டு வர நாடினால், நீங்கள் அவளுக்கு பணக்குவியலையே (மஹ்ராக)க் கொடுத்திருந்தாலும் கூட, அதிலிருந்து கொங்சங்கூட திரும்பப் பெறாதீர்கள்: நீங்கள் அவதூறு கூறியும், பகிரங்கமாக கொடுமை இழைத்தும் அதனைத் திரும்பப் பெறுவீர்களா? (4:20)

மனைவி திருமணபந்தத்தை முறிக்கும் பட்சத்தில் அவள் கணவனிடமிருந்து வாங்கிய திருமணக் கொடைகளனைத்தையும் திரும்பக்கொடுத்திடல் வேண்டும். தன் மனைவி தன்னோடு தொடர்ந்து இருக்கவேண்டும் என்று விரும்பும் கணவனை விட்டுப்பிரிந்து போகும் மனைவி அவன் அளித்தவைகளை திரும்பக்கொடுப்பதென்பது நியாயமான ஈடுதான். மனைவிக்கு கொடுத்த மணக்கொடைகளை எந்த சந்தர்ப்பத்திலும், அவர்களாகவே திருமண பந்தத்தை முறிக்கும்போது தவிர, திருப்பி வாங்கக்கூடாது என முஸ்லிம் ஆண்களுக்கு திருக்குர்ஆன் கட்டளையிடுகின்றது:

அல்லாஹ்வின் வரம்புகளுக்குள் நிலைத்திருக்க முடியாது என (கணவன் மனைவியாகிய இருவரும்) அஞ்சினால், மேலும் அவ்விருவரும் அல்லாஹ்வின் வரம்புகளுக்குள் நிலைத்திருக்கமாட்டார்கள் என்று (நடுவர்களாகிய) நீங்களும் அஞ்சினால், மனைவி கணவனுக்கு ஏதேனும் ஈடாகக் கொடுத்து பிரிந்து விடுவதில் அவர்கள் மீது தவறில்லை. இவை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள வரம்புகளாகும். எனவே, நீங்கள் அவற்றை மீறிச் செல்லாதீர்கள். மேலும் யார் அல்லாஹ்வின் வரம்புகளை மீறுகிறார்களோ அவர்களே அக்கிரமக்காரர்கள் ஆவர். (2:229)

ஒரு பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தன்னுடைய திருமணபந்தத்தை கலைத்துவிடும்படி கூறினாள். தன் கணவனின், குணம் பழக்கவழக்கங்களில் எந்த குறையும் இல்லை என்றும் ஆனாலும், அவருடன் வாழ முடியாத அளவிற்கு அவரை வெறுக்கிறாள் என்பதுதான் அவளின் பிரச்னை என்றும் கூறினாள். (அவர் உனக்கு மணக்கொடையாக கொடுத்த) தோட்டத்தை திருப்பி கொடுப்பாயா? என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டபோது அவள் அதற்கு ஒப்புக்கொண்டாள். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் தோட்டத்தை வாங்கிக் கொண்டு மணமுறிவை ஏற்றுக்கொள்ளுமாறு (கணவருக்கு) உத்தரவிட்டனர். (புஹாரி)

சில சமயங்களில் முஸ்லிம் மனைவி தன் திருமண பந்தத்தை முறிக்க விரும்பாமல் அதே நேரத்தில் கணவனின் கொடுமை, காரணமில்லாமல் விட்டு விட்டுச் செல்லுதல், குடும்ப வாழ்க்கையை நிறைவேற்றாமலிருப்பது போன்ற ஒரு சில நிர்ப்பந்தமான சூழ்நிலையின் காரணமாக விவாகரத்து கோரினால் இது போன்ற சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய நீதிமன்றம் திருமணபந்தத்தை கலைத்து விடுகிறது.

சுருக்கமாக, பெண்களுக்கு இஸ்லாம் நிகரற்ற உரிமைகளை கொடுத்துள்ளது. அவள் குலா வின் மூலம் திருமணபந்தத்தை முறிக்க முடியும் அல்லது விரும்பினால் விவாகரத்திற்காக நீதிமன்றத்திலும் வழக்குத்தொடர முடியும். விவாகரத்து வழங்க மறுக்கும் பிடிவாதமான கணவனால் முஸ்லிம் பெண் ஒரு போதும் விலங்கிடப்படமுடியாது. முஸ்லிம் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இத்தகைய உரிமைகள்தான் ஏழாம் நூற்றாண்டின் ஆரம்ப கால இஸ்லாமிய சமுதாயத்தில் வாழ்ந்த வந்த - தங்களின் கணவர்களிடமிருந்து பிரிய விரும்பிய யூதப் பெண்களை முஸ்லிம் நீதிமன்றங்களிலிருந்து தங்களின் விவாகரத்து சீட்டை வாங்கத் தூண்டியது. இந்த விவாகரத்து சீட்டு செல்லாதது என அறிஞர்கள் அறிவித்தனர். யூதப்பெண்கள் இஸ்லாமிய நீதிமன்றங்களுக்கு செல்வதை தடுக்கும்முகமாக யூத அறிஞர்கள் அவர்களுக்கு புதிய சலுகைகளையும் உரிமைகளையும் வழங்கினர். கிறிஸ்தவ நாடுகளில் வழக்கிலிருந்த ரோமானியச் சட்டங்கள் யூதச்சட்டங்களை விட எந்தவகையிலும் சிறந்தாக இல்லாமலிருந்ததால் அங்கிருந்த யூதப்பெண்களுக்கும் (இஸ்லாம் அளித்த) இது போன்ற சலுகைகள் அளிக்கப்படவில்லை.

விவாகரத்தை எவ்வாறு இஸ்லாம் வெறுக்கிறது என்பதில் இப்போது நம் கவனத்தை திருப்பலாம். நபி (ஸல்) அவர்கள் விசுவாசிகளிடம் கூறுவதாவது.

அனுமதிக்கப்பட்ட காரியங்களிலேயே, இறைவனிடம் மிகவும் வெறுப்பிற்குரியது விவாகரத்துதான். ( அபூதாவூத்)

பிடிக்கவில்லையென்ற ஒரே காரணத்தால் ஒரு முஸ்லிம் மனைவியை விவாகரத்து செய்யக்கூடாது. ஏதேனும் சிறிய வெறுப்புணர்வுகள் இருந்தாலும் மனைவிகளிடம் அன்பாகவே நடந்துகொள்ள வேண்டுமென திருக்குர்ஆன் முஸ்லிம் ஆண்களுக்கு கட்டளையிடுகின்றது.

அவர்களோடு நல்லமுறையில் வாழ்க்கை நடத்துங்கள். அவர்களுடன் சேர்ந்து வாழ நீங்கள் விரும்பாவிட்டாலும் பொறுமையைக் கைக்கொள்ளுங்கள். ஏனெனில் உங்களுக்கு ஒரு விஷயம் பிடிக்காமல் போகலாம். ஆனால் அல்லாஹ் அதில் அநேக நன்மைகளை வைத்திருக்கக்கூடும். (4:19)

நபி (ஸல்) அவர்களும் இது போன்ற கட்டளையையே தந்தருளியுள்ளனர்.

முஃமினான ஆண் முஃமினான பெண்ணை (மனைவியை) வெறுக்கக்கூடாது. அவளின் ஏதேனுமொரு குணத்தை அவன் வெறுத்தாலும் மற்றொன்று அவனை மகிழ்விக்கும். (முஸ்லிம்)

தங்கள் மனைவிகளிடம் மிகச்சிறந்த முறையில் நடப்பவர்களே முஸ்லிம்களில் மிகச் சிறந்தவர்களாவார்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

உங்களில் சிறந்த குணமுடையவர்களே ஈமானில் பரிபூரமாணவர்கள். தங்கள் மனைவிகளிடம் சிறந்த முறையில் நடப்பவர்களே உங்களில் மிகச்சிறந்தவர்கள். (திர்மிதி)

இருப்பினும், இஸ்லாம் ஒரு நடைமுறைக்குகந்த மார்க்கமாக இருப்பதால் திருமணபந்தத்தை முறிக்கக்கூடிய சில சந்தர்ப்பங்களும் இருக்கின்றன என்பதை அது அங்கீகரிக்கின்றது. அது போன்ற சூழ்நிலைகளில் அன்பாக அல்லது கட்டுப்பாடாக இருக்கும்படி உபதேசம் புரிவது சரியான தீர்வாகாது. இது போன்ற சூழ்நிலைகளில் என்ன செய்துகொள்வது? தவறு செய்பவர்களிடம் நடந்து கொள்ளும் முறைபற்றி நடைமுறைக்குகந்த சில அறிவுறைகளை திருக்குர்ஆன் தருகின்றது. திருமணபந்தத்தை முறிக்குமளவிற்கு சரியற்ற நடைமுறைகளுள்ள மனைவியிடம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென திருக்குர்ஆன் அறிவுறுத்துகிறது:

மேலும் எந்தப் பெண்கள் குறித்து அவர்கள் (தம் கணவருக்கு) மாறு செய்வார்கள் என்று நீங்கள் அஞ்சுகின்றீர்களோ 1) அந்தப் பெண்களுக்கு நல்லறிவு புகட்டுங்கள். 2) படுக்கைகளிலிருந்தும் அவர்களை ஒதுக்கி வையுங்கள் 3) மேலும் அவர்களை அடியுங்கள் ஆனால் அவர்கள் உங்களுக்கு கீழ்ப்படிந்து விட்டால் பிறகு அவர்களுக்கு எதிராகக் கை நீட்ட எந்த சாக்குபோக்குகளையும் தேடாதீர்கள். திண்ணமாக நம்புங்கள்: அல்லாஹ் மேலே இருக்கின்றான்: அவன் உயர்வானவனும் பெரியோனுமாய் இருக்கின்றான். 4) மேலும் கணவன், மனைவிக்கிடையே உறவு முறியுமோ என நீங்கள் அஞ்சினால் கணவனின் உறவினரிலிருந்து ஒரு நடுவரையும், மனைவியரின் உறவினரிலிருந்து மற்றொரு நடுவரையும் நியமியுங்கள். அவ்விருவரும் உறவைச் சீர்படுத்த நாடினால் அல்லாஹ்வும் அவ்விருவருக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவான். (4:34-35)

முதல் மூன்று வகைகளிலும் முதலில் முயற்சி செய்யப்படவேண்டும். அவைகள் சரியான பலனை அளிக்கவில்லையெனில் சம்பந்தப்பட்ட குடும்பங்களின் உதவிகள் நாடப்படவேண்டும். கீழ்ப்படியாத மனைவியை அடித்து அறிவுறுத்துவதென்பது, மிகவும் தவிர்க்க முடியாத அவசியத்தின் நிமித்தமேயாகும், அவளின் தவறுகளை இந்த நடவடிக்கை களைந்து விடும் என்ற நம்பிக்கையில் தற்காலிகமான நடவடிக்கையாக, மூன்றாம் கட்டமாகவே செய்யப்படவேண்டியது என்பதை மேற்கண்ட வசனத்திம் மூலம் உணர்ந்து கொள்ளலாம். இந்த நடவடிக்கை பலனளித்து விட்டதெனில் கணவன்

மேற்கொண்டு எந்தவகையில் மனைவியை தொந்தரவு செய்வது, மேற்கண்ட வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல், அனுமதியில்லாதது. இந்த நடவடிக்கையும் பலனளிக்கவில்லையென்றாலும் கணவன் இதை தொடர்வதற்கு அனுமதியில்லை. இறுதி கட்ட முயற்சியாக குடும்பத்தின் உதவியோடு சமரசம் முயற்ச்சிக்கப்படவேண்டும்.

மனைவி மிகவும் வெளிப்படையான மானக்கேடான தவறுகளை செய்யும் போதல்லாது இந்த மூன்றாம்கட்ட நடவடிக்கையை உபயோகிக்கக்கூடாதென முஸ்லிம் கணவன்மார்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அவ்வாறு அடிக்கும்போது கூட அது கடுமையில்லாத முறையிலிருக்கவேண்டுமெனவும் அதன் பிறகு மனைவி திருந்திவிட்டாளெனில் அதன் பிறகு (இது போன்ற நடவடிக்கையை தொடர்வதன் மூலம்) அவளின் கோபத்தை தூண்டுமளவிற்கு நடக்கக்கூடாது எனவும் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அவர்கள் பகிரங்கமான மானக்கேடான குற்றத்திற்குறியவர்களாயிருந்தால் அவர்களை தங்களின் படுக்கையில் தனியாக விட்டுவிடுங்கள் (அதற்கும் திருந்தாவிடில்) அவர்களை இலேசாக அடியுங்கள். அவர்கள் உங்களுக்கு (இத்துடன்) கீழ்படிந்துவிட்டால் அவர்களை துன்பப்படுத்தும் நோக்கத்துடன் வேறெதையும் தேடாதீர்கள். (திர்மிதி)

மேலும் நபி (ஸல்) அவர்கள் வரம்புமீறும் வகையிலான எத்தகைய அடியையும் கண்டனம் செய்துள்ளார்கள். தங்களின் கணவன்மார்கள் தங்களை அடித்து விட்டதாக சில முஸ்லிம் மனைவிமார்கள் நபி (ஸல்) அவர்களிடம் புகார் செய்த போது அவ்விதம் செய்பவர்கள் (மனைவிகளை அடிப்பவர்கள்) உங்களில் சிறந்தவர்களல்ல'' நபி (ஸல்) அவர்கள் உரைத்தார்கள். (அபூதாவூத்)

இது சம்பந்தமாக நபி (ஸல்) அவர்கள் மேலும் கூறியுள்ளதாவது:

உங்களின் குடும்பத்தோடு மிகவும் நல்லமுறையில் நடப்பவரே உங்களில் மிகச்சிறந்தவர். நான் என் குடும்பத்தினரோடு மிகவும் நல்லமுறையில் நடக்கிறேன். (திர்மிதி)

பெண்களை அடிப்பதற்கு பெயர்போன ஒருவரை குறித்து அவரை திருமணம் செய்ய வேண்டாமென பாத்திமா பின்த் கைஸ் என்ற நபித்தோழிக்கு நபி (ஸல்) அவர்கள் அறிவுரை கூறினார்கள்:

அபுல்ஜஹ்மும் முஆவியாவும் என்னை பெண் கேட்டுள்ளனர், (நான் யாரை திருமணம் செய்து கொள்ளலாம்?) என நபி ஸல் அவர்களிடம் நான் கேட்டபோது: (எனக்கு அறிவுரையாக) முஆவியா மிகவும் ஏழை, அபுல்ஜஹ்ம் பெண்களை அடிப்பவர் என்று கூறினார்கள். (முஸ்லிம்)

ஒழுக்கத்தின் நிமித்தம் தண்டனையாக மனைவியை அடிப்பதை தல்மூது அங்கீகரிக்கிறது. மானக்கேடான காரியத்திற்கு இட்டுச்செல்வது போன்ற மிக மோசமானஈ டுபடும்போதுதான் அடிக்க வேண்டும் என்ற எந்த கட்டுப்பாடும் இல்லை. அவள் தன் வீட்டு வேலையை செய்ய மறுத்தாலும் அவளை அடிப்பதற்கு அவன் அனுமதிக்கப்பட்டுள்ளான். மேலும் இலேசாகத்தான் அடிக்கவேண்டும் என்ற வரையும் கிடையாது. **சாட்டையால் அடித்தோ அல்லது பட்டினி போட்டோ மனைவியின் பிடிவாதத்தை முறிக்க அவனுக்கு அனுமதியுண்டு.** [40]

கணவனின் தவறான நடவடிக்கைகளால் திருமணபந்தம் முறியுமளவிற்கு வருமெனில், அது குறித்து திருக்குர்ஆன் அறிவுறுத்துவதாவது:

ஒரு பெண், தன்னிடம் கணவன் நல்ல முறையில் நடந்து கொள்ளமாட்டான் என்றோ, புறக்கணித்து விடுவான் என்றோ அஞ்சினால் கணவன்-மனைவி இருவரும் (தம் உரிமைகளில் சிலவற்றை பரஸ்பரம் விட்டுக்கொடுத்து)

தமக்கிடையே சமாதானம் செய்து கொள்வதில் தவறேதும் இல்லை: எந்நிலையிலும் சமாதானம் செய்துகொள்வதே நலம் தரக்கூடியதாகும் (4:128)

இது போன்ற நிலைகளில் மனைவி கணவனோடு சமாதானமாக நடந்து கொள்ள வேண்டிய வழிகளை தேடும்படி (குடும்பத்தின் ஆதரவுடனோ இல்லாமலோ) அறிவுறுத்தப்பட்டுள்ளாள். (கணவனை) படுக்கையிலிருந்து விலகியிருக்கவோ அல்லது அடிக்கவோ திருக்குர்ஆன் அறிவுறுத்தவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இந்த ஒருதலைப்பட்சமான சட்டத்திற்கு காரணமென்னவெனில் ஏற்கனவே தவறான முறையில் நடந்து கொண்டிருக்கும் கணவனின் கொடூரத்தாக்குதலிருந்து மனைவியை காப்பதற்கேயாகும். அத்தகைய கொடூரத்தாக்குதல் மனைவிக்கும் ஏன் திருமணபந்தத்திற்குக் கூட தீங்கு ஏற்படுத்திவிடக்கூடும். ஆனாலும், இத்தகைய நடவடிக்கைகளை மனைவியின் வேண்டுகோளின்படி நீதிமன்றம் அமுல்படுத்தலாம் என்று சில முஸ்லிம் அறிஞர்கள் கூறுகின்றனர். அதாவது, முதலில் நீதிமன்றம் கணவனை கண்டிக்கவும், பிறகு மனைவியிடம் கூடுவதை தடுக்கவும் இறுதியாக ஒப்புக்காக அடிக்கவும் செய்யலாம்.[41]

திருமணமான தம்பதிகள் தங்களின் திருமணபந்தம் குழப்பத்திலும் மோசமான நிலையிலும் இருக்கும் போது அதை காப்பதற்காக நடைமுறைக்கு சாத்தியமான மிகச்சரியான அறிவுறைகளை இஸ்லாம் வழங்குகிறது. தம்பதிகளில் யாரேனும் ஒருவர் திருமணபந்தத்தை குலைக்குமளவு நடந்தால் அப்புனித பந்தத்தை காப்பதற்கு சாத்தியமான பலனளிக்கக்கூடிய எல்லா வழிகளிலும் முயற்சிக்கவேண்டுமென மற்றவரை திருக்குர்ஆன் அறிவுறுத்துகிறது. எல்லா வழிகளுமே பயனளிக்கத்தவறும் பட்சத்தில் அவர்கள் சமாதானமாகவும் இணக்கமான முறையிலும் பிரிந்து செல்ல இஸ்லாம் அனுமதிக்கிறது.

Top Top

- ## தாய்மார்கள்

பெற்றோர்களை மிகவும் அன்போடும் பணிவோடும் நடத்த வேண்டுமென பழைய ஏற்பாடு பல இடங்களில் கட்டளையிடுகிறது. எவரேனும் தன் தந்தையையோ அல்லது தாயையோ சபிப்பானாயேகில் அவன் மரணத்திற்குள்ளாக்கப்படவேண்டும்." (லேவியராகமம் 20:9) என்றும் அறிவுள்ளவன் தந்தையை மகிழ்விக்கிறான் ஆனால் முட்டாளோ தாயை கனவீனம் பண்ணுகிறான்" (நீதிமொழிகள் 15:20) தந்தையை கண்ணியப்படுத்துவது மாத்திரம் சில இடங்களில் அறிவுள்ளவன் தந்தையின் சொல்லை கேட்கிறான்." (நீதிமொழிகள் 13:1), தனித்து குறிப்பிடப்பட்டிருப்பது போல தாயை மாத்திரம் அது போல் எங்கேயும் தனித்து குறிப்பிடப்படக்காணோம். மேலும், தாய் மகப்பேறின் போதும் பாலூட்டும் காலத்திலும் அடைந்த துன்பத்தை போற்றுவதற்கு அடையாளமாக அவளை அன்பாக நடத்தவேண்டும் என்ற சிறப்பாக எங்கும் வலியுறுத்தப்படவில்லை. இதல்லாமல், தந்தை மகனின் சொத்திலிருந்து வாரிசாக பெறும் அதே வேளையில் தாய்க்கோ ஒன்றுமில்லை.[42]

அன்னையை கௌரவிக்கச்சொல்லும் ஒரு வேதமாக புதிய ஏற்பாட்டை கூறுவது கடினம். அதற்குமாறாக, தாய்மார்களை அன்புடன் நடத்துவது இறைவழியில் செல்வதிலிருந்து தடுக்கும் என்றொரு மனோபாவத்தை அதை படிக்கும் ஒருவருக்கு ஏற்படுத்துகிறது. ஒருவன் தன் தாயை வெறுக்காவிட்டால் கிறிஸ்துவின் சீடராகுமளவிற்கு நல்ல கிறிஸ்தவனாக ஆக முடியாதென புதியஏற்பாடு கூறுகிறது :

யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான். (லூக்கா 14:26)

மேலும் இயேசுகிறிஸ்துவே தன் தாயைப்பற்றிய அக்கரையில்லாதவர் போன்றும் ஏன் அவரை அவமதிப்பவர் போன்றும் புதிய ஏற்பாடு எடுத்துக்காட்டுகிறது. ஒரு கூட்டத்தினருக்கு அவர் போதித்துக்கொண்டிருந்த சமயம் அவரின் தாயார் அவரைத்தேடி வந்தபோது அவரை வெளியில் சென்று பார்க்க அக்கரை எடுக்கவில்லை:

அப்பொழுது அவருடைய சகோதரரும் தாயாரும் வந்து, வெளியே நின்று, அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த ஜனங்கள் அவரை நோக்கி: இதோ உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி தம்மை சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப்பார்த்து இதோ என் தாயும் என் சகோதரரும் இவர்களே. தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றார். (மாற்கு 3:31-35)

மதத்தின் மேலிருக்கவேண்டிய பிடிப்பு குடும்பத்தின் மேலுள்ள பிடிப்பை விட எவ்வகையிலும் குறைந்திருக்கக்கூடாது என்பதை கூட்டத்தினர் அறியும்படிச் செய்யவே இயேசு அவ்வாறு சொன்னார் என சிலர் வாதிக்கலாம். இருப்பினும் இத்தகைய அலட்சியப்போக்கை மேற்கொள்ளாமலேயே அவர் அத்தகைய பாடத்தை அவர்களுக்கு போதித்திருக்க முடியும். தம் தாயை தன்னை பெற்று வளர்த்ததை கூட்டத்தில் ஒரு பெண் போற்றியபோது அதை ஏற்றுக்கொள்ள மறுத்து அவமரியாதை செய்யும்போதும் இதே போக்குத்தான் அவரிடம் காணப்படுகின்றது :

அவர் இவைகளைச் சொல்லுகையில், ஜனக்கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீ அவரை நோக்கி: உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்று சத்தமிட்டுச் சொன்னாள். அதற்கு அவர்: அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையை கேட்டு அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார். (லூக்கா 11:27-28)[*]

கன்னிமரியாள் போன்ற உயர்ந்த அந்தஸ்துள்ள தாயாரே இவ்விதம் கண்ணியக்குறைவாக இயேசு கிறிஸ்து போன்ற உயர்ந்த அந்தஸ்துள்ளவரால் நடத்தப்படுகிறார்கள் என்றால் சாதாரண கிறிஸ்துவர்கள் ஒரு சாதாரணமான தாயை எவ்வாறு நடத்துவார்கள்?

தாய்மைக்கு இஸ்லாத்தில் தரப்படும் கண்ணியம், மரியாதை உயர்வு ஈடு இணையற்றது. இறைவனை வணங்குவதற்கு அடுத்தபடியான மிக உயர்ந்த செயலாக பெற்றோர்களிடம் அன்பாயிருத்தலையே இஸ்லாம் கூறுகிறது :

அவனையே வணங்கிவருமாறும் பெற்றோர்களிடம் அன்பாயிருக்கும்படியும் உம்முடைய ரப்பு உமக்கு கட்டளையிடுகிறான். அவர்கள் இருவருமோ அல்லது இருவரில் ஒருவரோ முதுமையடைந்து விட்டால் அவர்களை வெறுத்தொரு வார்த்தையேனும் சொல்லாதீர் மேலும் அவர்களை விரட்டவும் செய்யாதீர். அவர்களை கண்ணியத்துடனும் அன்புடனும் அழைப்பீராக. பணிவெனும் இறக்கையைத் தாழ்த்துவீராக. மேலும் அவர்கள் என்னை சிறுபிள்ளையில் பரிவோடு வளர்த்தது போல் அவர்களுக்கு நீ அருள் செய்வாயாக என்றும் பிரார்த்திப்பீராக (17:23-24).

---

**[*] இயேசு தன் தாயிடம் இந்த முறையில் நடந்திருப்பார் என முஸ்லிம்கள் நம்புவதில்லை. இதற்கு மாறாக திருக்குர்ஆன் என் தாயிடம் அன்பாக இருக்கும்படி இறைவன் என்னை போதித்துள்ளான்" என்று இயேசு சொன்னதாக கூறுகிறது.**

பிரசவத்திலும் குழந்தை வளர்ப்பிலும் தாய்க்குள்ள மிகப்பெரும் பங்கை திருக்குர்ஆன் பல இடங்களில் விசேஷமாக வலியுறுத்திக்கூறுகிறது:

பெற்றோர்களிடம் நல்லமுறையில் நடக்கும்படி மனிதனுக்கு நாம் கட்டளையிட்டுள்ளோம். துன்பத்திற்கு மேல் துன்பமனுபவித்து அவள் அவனை பெற்றாள் மேலும் அவனுக்கு பாலூட்டும் காலமோ இரண்டாண்டுகளாயிருந்தது. (ஆகவே) எனக்கும் உன் பெற்றோர்களுக்கும் நன்றி செலுத்து. என்னிடமே இறுதியில் (நீங்களனைவரும்) திரும்பி வரவேண்டியவர்கள் (31:14)

தாய்க்குள்ள மிகச்சிறந்த இடத்தை நபி (ஸல்) அவர்கள் மிகவும் அழகான முறையில் விவரித்துள்ளார்கள்:

நான் யாரை கண்ணியப்படுத்தவேண்டும் என ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டபோது உம்முடைய தாயை என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். அடுத்து யார்? என அந்த மனிதர் மீண்டும் வினவ 'உன்னுடைய தாய்' என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். அடுத்து யார்? என மூன்றாம் முறையும் அவர் வின 'உன்னுடைய தாய்' என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். அடுத்து யார்? என அம்மனிதர் கேட்ட போது 'உன்னுடைய தந்தை' என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

முஸ்லிம்கள் இன்னும் நல்லமுறையில் இன்று வரை பின்பற்றி வரும் சில கொள்கைகளில் தாய்மார்களை அக்கறையோடு கவனிப்பதும் ஒன்றாகும். முஸ்லிம் தாய்மார்கள் தங்களின் மகன்கள் மகள்கள் ஆகியோரிடமிருந்து பெரும் கண்ணியம் முன்மாதிரியானவை. முஸ்லிம் தாய்மார்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்குமிடையேயிருக்கும் தீவிர அன்பும் அவர்கள் தாய்மார்களை எப்பொழுதும் மிகவும் மரியாதையோடு பேணுவதும் மேற்கத்தியர்களை வியப்பிலாழ்த்தியுள்ளது. [43]

Top Top

## • பெண்களுக்கு சொத்துரிமை

பெண்கள் சம்பந்தமாக பைபிளுக்கும் திருக்குர்ஆனுக்குமிடையேயுள்ள மிகவும் முக்கியமான வித்தியாசம் தங்கள் இறந்த உறவினரின் சொத்தில் அவர்களுக்குள்ள வாரிசுரிமை பற்றியதேயாகும். இது பற்றிய பைபிளின் போக்கு அறிஞர் எப்ஸ்டீன் அவர்களால் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது: வீட்டிலிருக்கும் பெண்கள் மனைவி பெண் குழந்தைகள் ஆகியோருக்கு குடும்பச்சொத்தை வாரிசாகப் பெறும் உரிமை இல்லையென்பதுதான் பைபிளின் ஆரம்ப காலத்திலிருந்து தொடர்ந்து மாறாமல் இருந்துவரும் பழக்கம். மிகவும் பழமையான வாரிசுரிமை பழக்கத்தின்படி, அக்குடும்பத்திலுள்ள அடிமைகள் எவ்வாறு குடும்பத்தின் சொத்தாக கருதப்பட்டனரோ அது போலவே பெண்களும் குடும்பத்தின் சொத்தாகவே கருதப்பட்டனர். ஆனால், ஆண் வாரிசு இல்லாத பட்சத்தில் பெண்களுக்கு சொத்து உண்டு எனவும் ஆனால் மனைவிக்கோ ஆண் வாரிசு இல்லாத பட்சத்திலும் சொத்து இல்லை என்பதுதான் மோசேயின் சட்டமாகும். [44] **ஏன் பெண்கள் குடும்பச்சொத்தின் பங்காக கருதப்பட்டனர்? என்பதற்கு அறிஞர் எப்ஸ்டீன் விளக்கம் தருகிறார் திருமணத்திற்கு முன்பு அவர்கள் தந்தையின் சொத்தாகவும் திருமணத்திற்கு பிறகு கணவனின் சொத்தாகவும் அவர்கள் இருக்கின்றனர். "**[45]

பைபிள் எண்ணாகமம் 27:1-11ல் வாரிசுரிமைக்கான சட்டம் விளக்கப்பட்டுள்ளது. அதில் கணவனின் சொத்திலிருந்து மனைவிக்கு எந்த பங்கும் கொடுக்கப்படவில்லை அதே நேரத்தில் கணவன் அவளின் (அவள் வரதட்சணையாக கொண்டு வருவது போன்ற) சொத்திற்கு மகன்களுக்கு முன்னதாக உரிமையாளன் ஆகி விடுகிறான். தந்தைக்கு சொத்துரிமை இருக்கும் அதே நேரத்தில் தாய்க்கு சொத்துரிமை இல்லவே இல்லை. ஆண் குழந்தைகள் உயிரோடிருக்கும் பட்சத்தில் விதவைகளும் பெண்குழந்தைகளும் தங்கள் உணவிற்குக் கூட ஆண் குழந்தைகளின் கருணையை வேண்டி நிற்க

வேண்டியதிருந்தது. அதனால்தான் யூத சமூகத்தில் விதவைகளும் அநாதை பெண்களும் மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையில் இருந்தனர்.

கிறிஸ்தவ மதமும் இதை நீண்டகாலமாக பின்பற்றி வந்தது. கிறிஸ்தவ மத மற்றும் சிவில் சட்டங்கள் பெண் குழந்தைகளை தந்தையின் சொத்தை வாரிசாக பெறுவதை தடுத்தது. கணவனின் சொத்திலிருந்தும் மனைவிகளின் வாரிசுரிமை பிடுங்கப்பட்டிருந்தது. **கடந்த நூற்றாண்டு வரை இந்த தீய சட்டம் அமுலில் இருந்துவந்தது.**[46]

இஸ்லாத்திற்கு முந்திய அரேபியர்கள் வாரிசுச் சொத்தை தங்களின் ஆண்மக்களுக்கு மாத்திரம் என வரையிறுத்திருந்தனர். திருமறைகுர்ஆன் இந்த நீதியற்ற பழக்கங்களை அழித்தொழித்து எல்லா பெண் உறவினர்களுக்கும் வாரிசுச்சொத்தில் பங்களித்தது:

(மரணமடைந்த) தாய், தந்தையரும் நெருங்கிய உறவினரும் விட்டுச் சென்ற சொத்தில் ஆண்களுக்குப் பங்குண்டு. (அது போல) தாய், தந்தையரும் நெருங்கிய உறவினரும் விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பங்குண்டு: அச்சொத்து குறைவாகவோ, அதிகமாகவோ இருந்தாலும் சரியே. இந்தப்பங்கு அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்டதாகும். (4:7)

**பெண்களுக்கும் சொத்துரிமை இருக்கிறதென ஐரோப்பா அங்கீகரிப்பதற்கு பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரிலிருந்தே முஸ்லிம் தாய்மார்கள், மனைவிகள், மகள்கள், சகோதரிகள் வாரிசுச் சொத்தில் பங்கு பெற்று வந்தனர்.** வாரிசுச் சொத்துப்பிரிவு ஏராளமான விபரங்களைக் கொண்ட மிகவும் பரந்த தலைப்பாகும். (4:7, 11,12, 176). தாய் தந்தையருக்கு கிடைக்கும் சமபங்கை ஒதுக்கி விட்டு பொதுவாக பெண்களுக்கு கிடைக்கும் வாரிசுரிமை சட்டம் என்னவெனில் பெண்ணின் பங்கு ஆணின் பங்கை விட அரைபாதி என்பதாகும். ஆண்களுக்கும் பெண்களுக்குமான இந்த பொதுச் சட்டம் மற்ற சட்டங்களோடு இணைத்துப் பார்க்கப்படாவிட்டால் அநீதியான ஒன்றாக தோன்றலாம். இதன் பிண்ணனியில் இருக்கும் ஞானத்தை விளங்கவேண்டுமெனில் பெண்ணை விட ஆணுக்கு மிகவும் அதிகமான பொருளாதார கடமைகள் இருக்கின்றன என்பதை கவனிக்கவேண்டும். (மனைவிக்கு சொத்து? என்ற பகுதியை பார்க்க) ஆண் பெண்ணிற்கு திருமணக்கொடை அளிக்கவேண்டும். இது அவளின் தனிப்பட்ட சொத்தாக, அவள் விவாகரத்து செய்யப்பட்டால் கூட, ஆகிவிடுகின்றது. ஆனால் பெண்ணுக்கோ மணக்கொடை எதுவும் கொடுக்கவேண்டிய கடமையில்லை. மேலும், மனைவியையும் குழந்தைகளையும் பராமரிப்பது கணவனின் கடமையாக்கப்பட்டுள்ளது. இதில் அவனுக்கு உதவ வேண்டியது மனைவியின் கடமையல்ல. அவள் மனமுவந்து கொடுப்பதைத்தவிர அவளின் சொத்துக்களும் சம்பாத்தியங்களும் அவளின் தனிப்பட்ட உபயோகத்திற்குத்தான். இஸ்லாம் குடும்ப வாழ்க்கையை மிகவும் வலியுறுத்துகிறது என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இளைஞர்களை மணம் புரியும்படி மிகவும் ஆர்வமூட்டுகிறது, விவாகரத்தை வெறுக்கிறது மேலும் சன்னியாசத்தை அது நற்செயலாக அங்கீகரிக்கவில்லை. ஆகவே, உண்மையான இஸ்லாமிய சமுதாயத்தில் குடும்ப வாழ்க்கையே சகஜமானதாகவும் குடும்பமற்ற வாழ்க்கை மிகவும் அரிதானதாகவேயிருக்கும். இஸ்லாமிய சமூகத்தில் திருமண வயது வந்த அனைத்து ஆண் பெண்களும் திருமணம் செய்திருப்பர். இவற்றை கருத்தில் கொண்டு பார்த்தால், முஸ்லிம் பெண்களை விட ஆண்களுக்கு அதிக பொருளாதார சுமைகள் இருக்கின்றன ஆகவே அதனால் ஏற்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வை தவிர்த்து சமூகம் பால் மற்றும் இனப்போர்களற்ற வாழ்க்கை நடத்தத்தான் இத்தகைய வாரிசுரிமை சட்டம் என்பது நன்கு புரிய வரும். முஸ்லிம் பெண்களுக்கிருக்கும் பொருளாதார உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை சற்றே ஒப்பிட்டுப்பார்த்த பிறகு இஸ்லாம் பெண்களை நியாயமாக மாத்திரம் நடத்திடவில்லை ஆனால் மிகவும் அதிகமாகவே வழங்கியுள்ளது என ஒரு பிரிட்டன் முஸ்லிம் பெண்மணி முடிவுக்குவந்துள்ளார்.[47]

Top Top

- ## விதவைகளின் துன்பநிலைகள்

பழைய ஏற்பாடு விதவைகளுக்கு கணவனின் சொத்திலிருந்து எந்த பங்கையும் அங்கீகரிக்காததனால், அவர்கள் யூத ஜனங்களிலேயே மிகவும் பாதிப்பிற்குள்ளானவர்களாக இருந்தனர். அவளுடைய இறந்த கணவனின் சொத்தில் பங்கு பெற்ற கணவனின் ஆண் உறவினர்கள் அச்சொத்திலிருந்து அவளுக்கு சாப்பாட்டிற்கு கொடுக்கவேண்டும். ஆயினும், அதை பெற்றுத்தருவதற்கு எந்த அமைப்பும் இல்லாததால் அவர்களின் வாழ்க்கை மற்றவர்களின் கருணையையே சார்ந்திருக்கவேண்டியதாயிருந்தது. ஆகவே விதவைகள் மிகவும் தாழ்ந்த வர்க்கமாகயிருந்தனர் விதவைத்துவமே மிகப்பெரும் இழிவின் அடையாளமாக கருதப்பட்டது. (ஏசாயா 54:4). ஆனால் சொத்திலிருந்து அவளை விலக்கி வைத்திருப்பதனால் விதவைக்கு துன்பநிலை தருவதோடு மாத்திரம் நின்றுவிடாமல், இறந்த சகோதரனுக்கு சந்ததியை உருவாக்கி அவன் பெயர் மங்காமலிருக்கச் செய்வதற்காக, குழந்தையற்ற விதவை இறந்த கணவனின் சகோதரனை, அவன் ஏற்கனவே மணமானவனாக இருந்தால் கூட திருமணம் செய்ய வேண்டும் என்றும் கூறி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறது. (ஆதியாகமம் 38).

அப்பொழுது யூதா ஓனானை நோக்கி நீ உன் தமையன் மனைவியைச் சேர்ந்து, அவளை மைத்துனச் சதந்தரமாய்ப் படைத்து உன் தமையனுக்கு சந்ததி உண்டாக்கு என்றான். (ஆதியாகமம் 38:8)

இந்த திருமணத்திற்கு விதவையின் சம்மதம் அவசியமில்லை. விதவை இறந்த கணவனின், அவனின் சந்ததியை உறுதிசெய்யக்கூடிய, சொத்தாகவே கருதப்பட்டாள். பைபிளின் இந்தச்சட்டம் இன்னமும் இஸ்ரவேலில் பின்பற்றப்பட்டு வருகின்றது.[48] குழந்தையற்ற விதவை அவன் சகோதரனுக்கு சொத்தாக கொடுக்கப்பட்டாள். அச்சகோதரன் திருமணம் செய்யும் வயதையடையாத சிறுவனாக இருந்தால் அவன் திருமண வயதையடையும் வரை அவள் காத்திருக்க வேண்டும். இறந்த கணவனின் சகோதரன் அவளை மணக்க மறுத்தால் மாத்திரம் அவள் விடுவிக்கப்படுவாள். அப்போது தான் விரும்பியவனை அவள் மணந்து கொள்ளலாம். இதிலிருந்து விடுதலை பெற விரும்பும் விதவைகளை அவர்களின் கணவனின் உடன் பிறந்தவர்கள் பிளாக்மெயில் செய்வது இன்றைய இஸ்ராயிலில் சாதாரணமாக நடக்கும் விசயமாகும்.

இஸ்லாத்திற்கு முந்திய அரபிகளும் இது போன்ற நடைமுறையையே பின்பற்றி வந்தனர். விதவை தகப்பனின் சொத்தாக கருதப்பட்டு மகனால் வாரிசுச்சொத்தாகப் பெறப்பட்டாள். சாதாரணமாக, இறந்த தந்தையின் மற்ற மனைவியின் மூலம் பிறந்த மூத்த மகனுக்கு அவள் திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள். இந்த பழக்கத்தை திருக்குர்ஆன் கடுமையான முறையில் கண்டித்து அழித்தது:

மேலும் உங்கள் தந்தையர் மணமுடித்திருந்த பெண்களை நீங்கள் ஒருபோதும் மணமுடித்துக்கொள்ளாதீர்கள். முன்னால் நடந்தது நடந்துவிட்டது. உண்மையில் இது ஒரு மானக்கேடான, வெறுக்கத்தக் செயலாகும். கீழ்த்தரமான நடத்தையுமாகும். (4:22)

மத குருவானவன் விதவைகளையோ விவாகரத்து செய்யப்பட்ட பெண்களையோ அல்லது விபச்சாரிகளையோ திருமணம் செய்யக் கூடாது என தடுக்கப்படும் அளவிற்கு விதவைகளும் விவாகரத்து செய்யப்பட்டவர்களும் பைபிளினால் கீழ்த்தரமானவர்களாக கணிக்கப்பட்டார்கள்:

கன்னிகையாயிருக்கிற பெண்ணை அவன் (ஆசாரியன்) விவாகம் பண்ண வேண்டும். விதவையையானாலும் தள்ளப்பட்டவளையானாலும் கற்புகுலைந்தவளையானாலும் வேசியையானாலும் விவாகம்பண்ணாமல் தன் ஜனங்களுக்குள்ளே ஒரு கன்னிகையை விவாகம்பண்ணக்கடவன். அவன் தன் வித்தைத் தன் ஜனங்களுக்குள்ளே பரிசுத்தக் குலைச்சலாக்காமல் இருப்பனாக. (லேவியராகமம் 21: 13-15)

இன்றைய இஸ்ராயிலில் கோஹன் இனத்தைச் சேர்ந்தவர்கள் (ஆலயத்தின் பிரதான ஆச்சாரிய குலத்தை சேர்ந்தவர்கள்) விதவையையோ விவாஹரத்து செய்யப்பட்ட பெண்ணையோ அல்லது விபச்சாரியையோ திருமணம் செய்ய முடியாது.[49] கணவர்கள் இயற்கை காரணங்களால் ஒன்றன் பின் ஒன்றாக இறந்து மூன்று முறை ஒரு பெண் விதவையாக்கப்பட்டுவிட்டால் அவள் 'மிகவும் அபாயகரமானவள்' திருமணம் செய்ய தடுக்கப்பட்டவள் என யூதச்சட்டம் கூறுகிறது.[50] ஆனால் திருக்குர்ஆனோ சாதிகளையோ அல்லது 'அபாயகரமானவர்கள்' எனப்படுவர்களையோ (அப்படியானவர்கள் இருப்பதாக) அங்கீகரிகப்பதில்லை. விதவைகளும் விவாகரத்து செய்யப்பட்டவர்களும் தாங்கள் விரும்பியவர்களை மணப்பதற்கு சுதந்திரம் உண்டு. விதவையின் மேலோ அல்லது விவாகரத்து செய்யப்பட்வளின் மீதோ எந்தவித கறையும் படிவதில்லை. திருக்குர்ஆன் அருள்கின்றது:

நீங்கள் பெண்களை விவாகரத்து செய்து அவர்களின் (இத்தா) தவணை முடியும் தருவாயை அடைந்து விட்டால், நல்லமுறையில் அவர்களை உங்களுடன் வாழச்செய்யுங்கள் அல்லது நல்ல முறையில் அவர்களை அனுப்பி விடுங்கள். ஆனால் வரம்பு மீறும் எண்ணத்துடனும் தொல்லை கொடுக்கும் எண்ணத்துடனும் அவர்களை நீங்கள் தடுத்து நிறுத்தாதீர்கள். அப்படி எவரேனம் செய்தால், உண்மையில் அவா் தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொண்டவராவார். அல்லாஹ்வுடைய வசனங்களைப் பரிகாசமாக எடுத்துக்கொள்ளாதீர்கள். (2:231)

உங்களில் எவரேனும் மனைவியரைவிட்டு மரணமடைந்து விட்டால், அந்த அவருடைய மனைவியர் நான்கு மாதம் பத்து நாட்கள் தாமாகக் காத்திருக்க வேண்டும். தங்கள் தனிப்பட்ட விக்ஷயத்தில் (தம் விருப்பத்துக்கொப்ப) ஒழுங்கான முறையில் செயல்பட அவர்களுக்கு உரிமையுண்டு. அதில் உங்கள் மீது எந்தத் தவறும் இல்லை. நீங்கள் செய்வதனைத்தையும் அல்லாஹ் நன்கறிபவனாக இருக்கிறான். (2:234)

உங்களின் மனைவியரை விட்டு மரணமடைவோர், தம் மனைவியரின் நலன் கருதி, (வீட்டை விட்டு) அவர்கள் வெளியேற்றப்படாமல் ஓராண்டு வரை அவர்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதி அளிக்கப்பட வேண்டுமென மரண சாஸனம் செய்ய வேண்டும். ஆனால் அவர்களாகவே வெளியேறிய பிறகு அவர்கள் தங்களின் தனிப்பட்ட விசயத்தில் ஒழுங்கான முறையில் செயல்பட்டால் உங்கள் மீது எந்தப்பொறுப்புமில்லை. மேலும் அல்லாஹ் யாவற்றின் மீதும் வல்லமை மிக்கோனும், பேரறிவாளனுமாயிருக்கின்றான். (2:240).

Top Top

- பலதாரமணம்

இப்போது பலதாரமணத்தை பற்றிய கேள்வியை தீர்க்க முயற்ச்சிப்போம். பலதாரமணம் என்பது மனித சமூகங்களில் பலவற்றில் காணப்பட்ட மிகத்தொன்மையான பழக்கமாகும். பைபிள் பலதாரமணத்தை தடைசெய்யவில்லை. அதற்கு மாறாக, பழைய ஏற்பாடும் அறிஞர்களின் எழுத்துக்களும் பலதாரமணத்தை மீண்டும் மீண்டும் அங்கீகரிப்பதையே நாம் காண்கிறோம். மன்னன் சாலோமோனிற்கு எழுநூறு மனைவிகளும் முன்னூறு வைப்பாட்டிகளும் இருந்தாக சொல்லப்படுகிறது. (1 இராஜாக்கள் 11:3) மேலும், மன்னன் தாவீதிற்கும் பல மனவைிகளும் பல வைப்பாட்டிகளும் இருந்ததாக சொல்லப்படுகின்றது. (2 சாமுவேல் 5:13). பல்வேறு மனைவிகளுக்கு பிறந்த மகன்களுக்கிடையே எவ்வாறு சொத்துக்களை விநியோகிப்பது என்பது பற்றிய கட்டளைகளும் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றது. (உபாகமம் 22:7): மனைவியின் சகோதரியை போட்டி மனைவியாக்கிக் கொள்வதற்குத்தான் இதில் தடையுள்ளது. (லேவியராகமம் 18:8) அதிகப்பட்சம் நான்கு மனைவிகள் இருக்கலாம் என தல்மூது பரிந்துரைக்கிறது.[51] பதினாறாம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய யூதர்கள் பலதாரமணப் பழக்கத்தை பின்பற்றியே வந்தனர். கிழக்கத்திய யூதர்கள், அவர்கள் இஸ்ராயீலிற்கு வந்து குடியேறும் வரை, தொடர்ந்து பலதாரமணத்தை அனுசரித்து வந்தனர். இஸ்ராயிலில் சிவில் சட்டத்தின் கீழ் அங்கே அது

தடைசெய்யப்பட்டது. இருப்பினும், சிவில் சட்டத்தை மிஞ்சும் மதச்சட்டத்தின் கீழ் பலதாரமணத்திற்கு அனுமதி இருக்கவே செய்கிறது.[52]

புதியஏற்பாடு இதுபற்றி என்ன கூறுகிறது? பாதர் ஊஜீன் ஹில்மேன் என்பவரின் 'பலதாரமணம் பற்றி மறுஆய்வு' என்ற ஆழ்ந்த ஆராய்ச்சி புத்தகத்தில் கூறுவதாவது: ஒருவர் ஒரு பெண்ணைத்தான் மணக்க வேண்டுமென்ற வெளிப்படையான கட்டளையோ அல்லது பலதாரமணம் செய்யக்கூடாது என்ற தடையோ புதிய ஏற்பாட்டில் எங்குமே இல்லை.''[53] மேலும், யூத சமூகத்தில் பலதாரமணம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தபோதிலும் இயேசுகிறிஸ்து அதற்கு எதிராக எதையும் சொல்லவில்லை. கிரேக்க-ரோம கலாச்சாரத்தை (ஒரே ஒரு சட்டபூர்வ மனைவியை மாத்திரம் மணக்க வேண்டுமென்ற, ஆனால் வைப்பாட்டிகளையும் விபச்சாரத்தையும் அனுமதித்த) அனுசரித்தே சர்ச் பலதாரமணத்தை தடை செய்தது என்ற உண்மையை பாதல் ஊஜீன் ஹில்மேன் கவனத்திற்கு கொண்டு வருகிறார். நம்முடைய இக்காலத்தில், ரோம பழக்கவழக்கத்திற்கு ஏற்ப மற்றொரு திருமணம் செய்வது தடைசெய்யப்படுகின்றது.''[54] என்ற புனித அகஸ்டினின் அவர்களின் கட்டளையை எடுத்துக்காட்டுகிறார். பலதார மணத்தை சர்ச் தடைசெய்தது மற்ற கலாச்சாரத்தை பின்பற்றி செய்ததேயல்லாது அது கிறிஸ்தவ மதத்தின் கட்டளையல்ல என ஆப்பிரிக்க சர்ச்சுகளும் ஆப்பிரிக்கக் கிறிஸ்தவர்களும் அவர்களின் ஐரோப்பிய சகோதரர்களுக்கு அடிக்கடி நினைவூட்டுகின்றனர்.

திருக்குர்ஆனும் பலதாரமணத்தை அனுமதித்துள்ளது, ஆனால் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமலல்ல:

அநாதை(ப்பெண்)களுடன் நீதமாக நடக்க இயலாது என்று நீங்கள் அஞ்சினால் உங்களுக்கு விருப்பமான பெண்களை இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நான்கு நான்காக மணமுடித்துக் கொள்ளுங்கள். ஆனால் (அவர்களிடையே) நீதமாக நடந்திட முடியாது என்று நீங்கள் அஞ்சுவீர்களாயின் ஒரு பெண்ணை மட்டும் மணமுடித்துக் கொள்ளுங்கள் அல்லது உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்ட பெண்களையே மனைவியாக்கிக் கொள்ளுங்கள். நீதி தவறாமலிருப்பதற்கு இதுவே மிக நெருக்கமானதாகும். (4:3)

பைபிளிற்கு எதிராக திருக்குர்ஆன் அதிகப்பட்சம் நான்கு மனைவிகள் வரை மணந்து கொள்ள, அதுவும் அவர்களை சமமாகவும் நீதமாகவும் நடத்தவேண்டும் என்ற கடும் நிபந்தனையின் கீழ், அனுமதித்துள்ளது. திருக்குர்ஆன் பலதாரமணத்தை கடைப்பிடிக்க வலியுறுத்துகிறது என்றோ அல்லது அது மிகவும் முன்மாதிரியான எல்லோரும் பின்பற்றியாகவேண்டிய பழக்கம் என்று கருதுவதாகவோ எவரும் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது. திருக்குர்ஆன் பலதாரமணத்தை சகித்துக்கொண்டுள்ளது'' அல்லது அனுமதித்துள்ளது'' அவ்வளவுதான். அதுவும் ஏன்? ஏன் பலதாரமணம் அனுமதிக்கப்பட்டது? பதில் மிகவும் எளிது: பலதார மணத்தை நிர்ப்பந்திக்கும் சமூக மற்றும் ஒழுக்க காரணங்கள் கொண்ட சில நேரங்கள், சில சந்தர்ப்பங்கள் இருக்கவே செய்கின்றன என்பதுதான் அதற்குரிய பதிலாகும். மேற்காணும் திருமறைவசனம் குறிப்பிடுவது போல் அநாதைகள், விதவைகள் ஆகியோருக்கு சமூகம் செய்ய வேண்டிய கடமைகளில் பலதாரமணம் எத்தகைய பங்கு வகிக்கிறது என்பதை கவனிக்காமல் அதை தனியாக புரிந்துகொள்வதென்பது இயலாத ஒன்றாகும். **எல்லா இடங்களுக்கும் காலங்களுக்கும் பொருத்தமான மார்க்கமான இஸ்லாம் இவைகள் போன்ற நிர்ப்பந்திக்கும் சூ ழ்நிலைகளை அலட்சியப்படுத்தவே முடியாது.**

மனித சமூகங்களில் பலவற்றில் பெண்கள் ஆண்களை விட அதிகமாக இருக்கின்றனர். அமெரிக்காவில் ஆண்களை விட குறைந்த பட்சம் எட்டு மில்லியன் பெண்கள் அதிகமாக இருக்கின்றனர். குயினா போன்ற நாடுகளில் 100 ஆண்களுக்கு 122 பெண்கள் வீதம் இருக்கின்றனர். தான்ஸானியாவில் 100 பெண்களுக்கு 95.1 ஆண்களே இருக்கின்றனர். இப்படி சமமற்ற பால் விகிதம் இருக்கும் போது ஒரு சமூகம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அதற்கு பல தீர்வுகள், சிலர் சன்னியாசத்தையும் சிலர் பெண் சிசுக்கொலையையும் சிபாரிசு செய்கின்றனர். (இன்றைய உலகில் இது நடந்து கொண்டுதான் வருகின்றதூ) விபச்சாரம், திருமணமின்றி உடலுறவு கொள்ளுதல், ஓரினப்புணர்ச்சி போன்றவைகள்

அனைத்தையும் சமூகம், சகித்துக்கொள்வதுதான் ஒரே வழி என மற்றும் சிலர் நினைக்கின்றனர். பல ஆப்பிரிக்க சமூகத்தைப் போன்றவைகளுக்கோ மிகவும் கண்ணியத்திற்குரிய வழி என்பது எதுவெனில் பலதாரமணத்தை கலாச்சாரரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாகவும் சமூக ரீதியில் மதிப்பிற்குரிய முறையாகவும் ஏற்றுக்கொள்வதுமேயாகும். **மற்ற கலாச்சாரத்தை சேர்ந்த பெண்கள் பலதாரமணத்தை தங்களின் இழிவின் அடையாளமாக கருதுவதில்லை என்பதை மேற்கத்திய உலகம் அடிக்கடி தவறாகபுரிந்து கொள்கின்றது என்பதே பிரச்னையாகும்.** உதாரணமாக, பல ஆப்பிரிக்க பெண்கள் அவர்கள் கிறிஸ்தவர்களோ அல்லது முஸ்லிம்களோ அல்லது மற்ற மதங்களைச் சார்ந்தவர்களோ ஏற்கனவே திருமணமாகி தான் பொருப்புள்ள கணவன் என செயல்பட்டுக்காட்டிய ஆணையே திருமணம் செய்ய அதிகம் விரும்புகின்றனர். தாங்கள் தனிமையை உணராதிருப்பதற்காக இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ளும்படி பல ஆப்பிரிக்க மனைவிகள் தங்கள் கணவனை தூண்டுகின்றனர்.[56] நைஜீரியாவின் இரண்டாம் பெரிய நகரத்தில் 15 முதல் 59 வயது வரையுள்ள சுமார் 6000 பெண்களிடம் நடத்தப்பட்ட புள்ளிவிவரத்தின்படி அவர்களில் 60 சதவிகிதம் பேர் தங்கள் கணவன்மார்கள் இரண்டாம் திருமணம் செய்வதை பெரிதும் விரும்புகின்றனர். 23 சதவிகிதம் பெண்களே தங்கள் கணவன்மார்கள் இரண்டாம் மணம் செய்வதை விரும்பாமல் கோபிப்பவர்களாவார்கள். கென்யாவில் நடத்தப்பட்ட புள்ளிவிவரத்தின்படி 67 சதவிகிதம் பெண்கள் பலதாரமணத்தை சரியானதெனவே கருதுகின்றனர். கென்யாவின் கிராமப்புறங்களில் நடத்தப்பட்ட புள்ளிவிவரத்தின்படி 27 பெண்களில் 25 பேர் ஒருதாரமணத்தை விட பலதாரமணம் மிகச் சிறந்தது எனக் கருதினர். கூட இருக்கும் சக்களத்திகள் ஒத்துழைத்தால் பலதாரமணம் மகிழ்ச்சிகரமானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்குமெனவும் இந்தப்பெண்கள் உணர்ந்துள்ளனர். சில புரட்டாஸ்டாண்டு சர்ச்சுகளும் கூட அதை சகித்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு பெரும்பாலான ஆப்பிரிக்க சமூகத்தில் பலதாரமணம் மிகவும் மரியாதைக்குரிய ஒரு முறையாக ஆகியுள்ளது. கணவன் மனைவிக்கிடையேயுள்ள அன்பின் வெளிப்பாட்டிற்கு ஒரு முன்மாதிரியாக ஏகதாரமணம் இருக்கலாமென்றாலும், சில சமூகங்களில் பலதாரமணம் சமூகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்பதையும் பலதாரமணம் கிறிஸ்தவத்திற்கு எதிரானது என்ற நம்பிக்கை இனிமேலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்ற கருதப்படுவதையும் சர்ச் ஏற்றுக்கொள்ள வேண்டும் என கென்யாவிலுள்ள ஆங்கிலிக்கன் சர்ச்சசைச் சேர்ந்த ஒரு பிஷப் கூறினார்.[58] ஆப்பிரிக்காவின் பலதார மணத்தை பற்றி கவனமாக ஆராய்ந்த ஆங்கிலிக்க சர்ச்சை சேர்ந்த புனித டேவிட் கிட்டாரி அவர்கள் விவாகரத்து செய்து மீண்டும் திருமணம் செய்து கொள்ளும் முறையை விட, இதனால் கைவிடப்பட்ட மனைவி குழந்தைகள் ஆகியோரை கவனத்தில் கொள்ளும் போது, பலதார மணமென்பது கிறிஸ்தவ கொள்கைகளுக்கு மிகவும் உகந்தது என தீர்மானித்துள்ளார்.''[59] மேற்கத்திய நாடுகளில் பல வருடங்கள் வாழ்ந்த பிறகும் பலதாரமணத்திற்கெதிராக எந்தவித ஆட்சேபமும் இல்லாத பல உயர் கல்வி கற்ற ஆப்பிரிக்க மனைவிகளை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன். அமெரிக்காவில் வாழ்ந்து வரும் அவர்களில் ஒருத்தி, குழந்தைகளை வளர்ப்பதில் அவளுக்கு துணையாயிருக்கும் வகையில், இரண்டாம் திருமணம் செய்து கொள்ளும்படி கணவனை வற்புறுத்துகின்றாள்.

சமமற்ற பால் விகித பிரச்னை போர்க்காலங்களில் மிகவும் சிக்கலாகின்றது. அமெரிக்க பூர்விக செவ்விந்தியர்கள் யுத்த காலத்தில் மிக அதிக ஏற்றத்தாழ்வு மிக்க பால் விகிதத்தினால் மிகவும் துன்பத்திற்குள்ளாகினர். மிகவும் உயர்ந்த அந்தஸ்திலிருந்த இந்த குலப் பெண்கள், இதன் விளைவாக, கெட்ட ஆபசமான காரியங்களில் ஈடுபடுவதற்கு மாறாக பலதாரமணத்தை தங்களுக்கு சிறந்த பாதுகாப்பளிக்கும் ஒன்றாக ஏற்றுக்கொண்டனர். அங்கு வந்தேறிய அமெரிக்கர்களோ, இத்தகைய ஏற்றத்தாழ்வு மிக்க பால்விகிதத்தின் போது வேறு என்ன முறையை கடைப்பிடிப்பது என்பதை கூறாமல், பலதாரமண நடைமுறையை மாத்திரம் 'காட்டுமிராண்டித்தனம்' என்று கண்டனம் செய்தனர்.[60] இரண்டாம் உலகப்போருக்குப்பின், ஜெர்மனியில் மாத்திரம் ஆண்களை விட பெண்கள் 7,300,000 அதிகமாகயிருந்தனர் (அவர்களில் 3.3 மில்லியன் பேர் விதவைகள்.) 20 வயதிலிருந்து 30 வயதிற்குட்டவர்களில் 100 ஆண்களுக்கு 167 பெண்கள் இருந்தனர்.[61] இத்தகைய பல பெண்களுக்கு ஒரு ஆண் தோழனாக மாத்திரமல்லாமல் முன்னெப்போதும் ஏற்பட்டிராத துன்பம் கஷ்டம் ஆகியவை ஏற்பட்டிருக்கும் இக்கால கட்டத்தில் குடும்பத்திற்கு தேவையானதை அளித்து பாதுகாக்கக்கூடியவர்கள் தேவைப்பட்டனர். ஐக்கிய இராணுவ வீரர்கள் இந்தப் பெண்களின் இத்தகைய பலவீனத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். பல இளம் பெண்களும் விதவைகளும் இந்த ஆக்ரமிப்புப் படையுடன் (குடும்பத் தேவைகளுக்காக)

கட்டுப்பாடற்ற உடலுறவு கொண்டனர். பல அமெரிக்க, பிரிட்டன் வீரர்கள் தாங்கள் பெறும் இந்த சுகத்திற்கு பதிலாக சிகெரட்டுக்கள், மிட்டாய்கள், ரொட்டிகள் ஆகியவற்றை கொடுத்தனர். இந்த அன்னியர்கள் கொடுத்த பொருட்களால் குழந்தைகள் மிகவும் மகிழ்ந்தனர். மற்ற குழந்தைகளுக்கு கிடைக்கும் இந்தப் பொருட்களை கண்ட ஒரு பத்து வயதுப்பையன் தன் தாய் இனிமேல் பசிக்கொடுமைக்கு ஆளாகாமல் இருப்பதற்காக அவளுக்கும் ஒரு 'ஆங்கிலேயன்' இருந்தால் நன்றாகயிருக்கும் என மனப்பூர்வமாக ஆசைப்பட்டான்.[62] இந்தச் சந்தர்பத்தில் நாம் நம் மனச்சாட்சியை தொட்டு கேட்க வேண்டும்: இதை விட பெண்களுக்கு கண்ணியமளிப்பது எது? சிவப்பிந்தியர்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரியாதைக்குரிய இரண்டாம் மனைவியாக இருப்பது பெண்ணுக்கு கண்ணியமளிப்பதா அல்லது 'நாகரிக'ஐக்கிய இராணுவத்தினரிடம் இருந்தது போல் விபச்சாரியாக இருப்பது நல்லதா? வேறு வார்த்தைகளில் சொல்வதனால், திருக்குர்ஆன் முன்வைக்கும் தீர்வு பெண்ணுக்கு கண்ணியமளிப்பதா அல்லது ரோம சாம்ராஜ்யத்தின் கலாச்சார அடிப்படையிலமைந்த இறையியல் பெண்ணுக்கு கண்ணியமளிப்பதா?

1948 ஆம் ஆண்டில் மியூனிச்சில் நடந்த அகிலஉலக இளைஞர்கள் மாநாட்டில் மிகவும் ஏற்றத்தாழ்வு மிக்க பால்விகிதத்தால் ஏற்படும் பிரச்னை பற்றி விவாதிக்கப்பட்டது. எந்த தீர்விற்கும் வர முடியவில்லை என்பது அவர்களுக்கு தெளிவாகத் தெரிந்தவுடன், மாநாட்டில் கலந்து கொண்ட சிலர் பலதாரமணத்தை சிறந்த தீர்வாக முன்வைத்தனர். இதைக்கேட்டதும் ஆரம்பத்தில் மாநாட்டிற்கு வந்தோர் அதிர்ச்சிக்கும் வெறுப்பிற்குமுள்ளாயினர். ஆயினும், இதை கவனமாக ஆராய்ந்த மாநாட்டினர் இது ஒன்றுதான் சாத்தியமான தீர்வு என்பதை ஒப்புக்கொண்டனர். இறுதியாக, மாநாட்டின் இறுதித்தீர்மானங்களில் ஒன்றாக பலதாரமணமும் சேர்க்கப்பட்டது.[63]

பெரும் அழிவுகளை உண்டாக்கக்கூடிய ஆயுதங்களை முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உலக நாடுகள் தன்னகத்தே கொண்டுள்ளன. ஐரோப்பிய சர்ச்சுகள் இப்பொழுதோ பிறகோ பலதாரமணத்தை ஒரே தீர்வாக ஏற்றுக்கொள்வதைத்தவிர வேறு வழியிருக்காது. பாதர் ஹில்மேன் இந்த உண்மையை மிகவும் ஆழ்ந்து சிந்தனைக்குப்பிறகு அங்கீகரித்தேயுள்ளார், மனித கூட்டுக்கொலை தொழிற் நுட்பங்கள் (நியூக்லியர், பயாலாஜிகல், கெமிகல்...) பால் விகிதத்தில் மிகப்பெரும் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்திவிடும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. அப்பொழுது பலதாரமண முறைதான் மனித சமூகம் உயிர்பிழைத்திருக்க அவசியமான முறையாக ஆகிவிடும்... முன்னைய பழக்கம் சட்டம் ஆகியவற்றிற்கு எதிராக பலதாரமணம்தான் இயல்பிற்கும் ஒழுக்கமாண்புகளுக்கும் ஒத்தது என்ற மனவிருப்பம் அத்தகைய சூழ்நிலைகளில் அதிகப்பட்டுவிடும். அது போன்ற சூழ்நிலைகளில் இறையியல் வல்லுநர்களும் சர்ச் தலைவர்களும் இந்த புதிய பலதாரமண கொள்கையை நியாயப்படுத்தும் விதத்தில் வலுவான காரணங்களையும் பைபிள் ஆதாரங்களையும் முன்வைப்பர்.[64]

இன்று வரை, நவீன சமூகங்களில் நிலவிவரும் ஒரு சில சமூகக்கேடுகளுக்கான சிறந்த தீர்வாக பலதாரமணம் இருந்து வருகின்றது. பலதாரமணத்திற்கு தரும் அனுமதியின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய திருமறைகுர்ஆன் குறிப்பிடும் சமூகக்கடமைகள் (நிறைவேற்றப்படாமல்) ஆப்பிரிக்காவை விட மேற்கத்திய சமூகங்களில் அதிகமாக காணப்படுகின்றன. உதாரணமாக, கருப்பர் சமுதாயத்தில் மிக அதிக பால்விகிதம் காணப்படுகின்றது. ஆண்களில் இருபது பேர்களில் ஒருவர் 21 வயதையடையும் முன்பே இறந்து விடுகின்றனர். 20 முதல் 35 வயதிற்குட்பட்டவர்களில், ஒருவருக்கொருவர் கொலைசெய்து கொள்வதே சாவிற்கு முக்கிய காரணமாக இருந்து வருகின்றது.[65] மேலும், பல கருப்பு ஆண்கள் வேலை கிடைக்காதவர்களாகவும், ஜெயிலிலும் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகியுமுள்ளனர்.[66] இதன் விளைவாக நான்கில் ஒரு கருப்புப் பெண் 40 வயதிலும் கூட திருமணமாகாமல் இருக்கின்றனர். வெள்ளையரிடத்தில் இந்த விகிதம் பத்தில் ஒன்று.[67] மேலும் பல கருப்பு பெண்கள் இருபது வயதிற்கு முன்னரேயே (திருமண பந்தமின்றி கர்ப்பமாகி) ஒற்றை தாயாக (-முறையான தகப்பனில்லாமல்) ஆகி விடுகின்றார்கள். அவர்கள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வேறு ஆட்களை சார்ந்து நிற்க வேண்டியதிருக்கிறது. இத்தகைய துன்ப சூழ்நிலைகளின் விளைவாக பல கருத்த பெண்கள் 'ஆளை பகிர்ந்து கொள்ளுதல்' என்பதில் ஈடுபட்டு விடுகின்றனர். அதாவது, ஆதரவற்ற இந்த கருத்த பெண்கள்

திருமணமானவர்களுடன் கள்ள உறவு வைத்துக்கொள்கின்றனர். தங்களின் கணவனை வேறு பெண்களும் 'பங்கு' போட்டுக்கொள்கிறார்கள் என்ற இந்த விசயம் பெரும்பாலும் அவர்களின் மனைவிகளுக்கு தெரியாமல் போகின்றது. ஆப்பிரிக்க வழியிலான அமெரிக்க சமூகத்தினரின் 'ஆளை பங்குபோடுதல்' எனும் இந்த பிரச்னையை உற்று நோக்கி வரும் சிலர், அமெரிக்க சமூகத்தில் பரந்த சீர்திருத்தங்கள் செய்யப்படும் வரையிலாவது, இந்த கருத்த ஆண்கள் குறைவு பிரச்னைக்கு தற்காலிக தீர்வாக 'சம்மதப்பட்ட பலதாரமணத்தை' தீவிரமாக பரிந்துரைக்கின்றனர்.[69] 'சம்மதப்பட்ட பலதாரமணம்' என்பது என்னவெனில் மனைவிக்கும் மொத்தத்தில் சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய தற்போது நடந்து வரும் 'ஆளை பங்கிடும்' இரகசிய முறைக்கு எதிராக பலதாரமணமென்பது சமூகத்தில் அங்கீகரிக்கப்பட ஒன்றாக இருக்க வேண்டும் மேலும் அதில் சம்மந்தப்பட்ட அனைவரின் சம்மதமும் வேண்டும் என்பதாகும். ஆப்பிரிக்க வழி அமெரிக்க கருப்பர்களின் 'ஆணை பங்கிடுதல்' பிரச்னைதான் பிலாதெல்பியாவிலுள்ள டெம்பில் பல்கலைக்கலைக்கழகத்தில் 27 ஜனவரி 1993 அன்று நடந்த கருத்தரங்கின் முக்கிய, சிறப்பிற்குரிய பேச்சாளர்கள் அழைக்கப்பட்டிருந்த, தலைப்பாக இருந்தது.[70] இந்தப் பிரச்னைக்குரிய சரியான தீர்வாக பலதாரமணத்தை சில பேச்சாளர்கள் முன்வைத்தனர். பலதாரமணம் சமூகத்தில், குறிப்பாக விபச்சாரத்தையும் வைப்பாட்டிகளையும் அனுமதிக்கும் சமூகத்தில், தடைசெய்யப்படக்கூடாது என கூறினர். ஆப்பிரிக்காவில் மிகவும் பொறுப்பான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு ஆரவாரமான வரவேற்ப்பை பெற்றுவரும் பலதாரமணத்தை ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என கூட்டத்திற்கு வந்திருந்த ஒரு பெண் கருத்து தெரிவித்தார்.

ரோமன் கத்தோலிக்கத்தை சார்ந்த பிலிப் கில்ப்ரைட் எனும் அமெரிக்க மனிதவியல் ஆராய்ச்சியாளர் தன்னுடைய சிந்தனையைத் தூண்டும் 'நம் காலத்திற்கு பலதாரமணம்' என்ற புத்தகத்தில் அமெரிக்க சமுகத்தில் மொத்தத்தில் நிகழும் சில சமூகத்தீமைகளுக்கு சரியான தீர்வாக பலதாரமணத்தை முன்வைத்துள்ளார். பெரும்பாலான சமயங்களில் விவாகரத்துக்களுக்கு, அதன் விளைவால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்கும் மிகச்சிறந்த தீர்வாக பலதாரமணம் விளங்கும் என அவர் வாதிக்கின்றார். **திருமணத்திற்கு பிறகு நடக்கும் கள்ள உறவுகளே அமெரிக்க சமூகத்தில் பெரும்பாலான விவாகரத்திற்கு காரணமாக உள்ளன என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.** இந்த கள்ள உறவு (முந்திய துணையை) விவாகரத்து செய்வதில் முடிவதை விட இன்னுமொரு திருமணத்தில் முடியுமாகில், அது (முந்திய துணையின்) குழந்தைகளுக்கு மிகவும் சிறந்ததாக இருக்கும். இத்தகைய சூழ்நிலைகளில் குடும்பம் பிரிந்து இல்லாமலாகி போவதுதான் வழி என்றிருப்பதை விட குடும்பம் ஒன்றிணைந்து இருந்தால் அக்குடும்பத்தின் மூலம் குழந்தைகளை நல்ல முறையில் கவனித்திட முடியும் என கில்ப்ரைட் கூறுகிறார். மேலும், வயதாகியும் திருமணமாகா முடியாமல் இருக்கும் பெண்கள் போன்றவர்களுக்கும் 'ஆணை பங்கிடுதல்' முறையில் ஈடுபட்டிருக்கும் ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் போன்றவர்களுக்கும் அது மிகவும் பயனளிக்கக்கூடியதாக இருக்கும் என கில்ப்ரைட் ஆலோசனை தெரிவிக்கிறார். பேக்கரியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்களிடையே 1987 ஆம் ஆண்டு ஒரு செய்திப்பத்திரிக்கை 'திருமணம் செய்ய தகுதியுள்ள ஆண்கள் குறைவாக இருக்கும் நிலையில் பலதார மணத்தை சட்டம் அனுமதிக்கலாமா? என்ற தலைப்பில் கருத்துக்கணிப்பு நடத்தியது. இந்த பலதாரமண கருத்தை பெரும்பாலும் அனைத்து மாணவ மாணவிகளுமே ஏற்றுக்கொண்டனர். பலதாரமணம் தன்னுடைய உணர்வு மற்றும் பௌதீக தேவைகளை நிறைவேற்றி, ஒரே மனைவியாயிருப்பதினால் கிடைக்கும் சுதந்திரத்தை விட அதிக சுதந்திரத்தை அளிக்கும் என ஒரு மாணவி கூறினார்.[72] அமெரிக்காவில் இன்னும் பலதாரமணத்தை அனுசரித்து வரும் அடிப்படைவாத சில மோர்மேன் பெண்களும் இதே வாதத்தையே முன்வைக்கின்றனர். தங்களின் சக தோழி மனைவிகளும் தாங்களும் ஒருவரின் குழந்தைகளை மற்றவர்கள் கவனித்துக்கொள்ள முடிவதால் பலதாரமணமென்பது பெண்கள் தங்களின் வேலையை விட வேண்டிய அவசியமில்லாமல் தொடர்ந்து செய்து வரவும் குழந்தைகளை கவனிப்பதற்கும் மிகச்சிறந்த முன்மாதிரியான முறையென அவர்கள் நம்புகிறார்கள்.

பலதாரமணமென்பது இஸ்லாத்தில் ஒருவருக்கொருவர் சம்மதப்பட்டு செய்வதேயாகும். கல்யாணமான ஒருவரை கல்யாணம் செய்யும்படி எந்தப்பெண்ணையும் யாரும் நிர்ப்பந்திக்க முடியாது. மேலும், தான் மணக்கும் கணவன் வேறொரு பெண்ணை மணக்கக்கூடாது என நிபந்தனை விதிக்கவும் மனைவியாகப்போகின்றவளுக்கு உரிமையுண்டு.[74] இதற்கு எதிராக, பைபிள் சில நேரங்களில் நிர்ப்பந்த பலதாரமணத்திற்கு அனுமதிக்கிறது. குழந்தையற்ற விதவை மரணித்த கணவனின் சகோதரனை, அவன் திருமணமானவனாகி இருந்தால் கூட, அவளின் சம்மதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மணக்க வேண்டுமென அது கூறுகிறது. (ஆதியாகமம் 38: 8-10) (விதவையின் துன்பநிலைகள் என்ற பகுதி காண்க)

**இன்றைய முஸ்லிம் சமூகங்கள் பலவற்றில், அங்கே பால் விகித ஏற்றத்தாழ்வுகள் மிக அதிகமாக இல்லாமலிருப்பதால், பலதாரமணம் மிகவும் குறைவு என்பதையும் இங்கே நாம் கவனிக்கவேண்டும். மேற்கத்திய உலகில் திருமணத்திற்கப்பாலும் கள்ள உறவு வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையை விட முஸ்லிம் உலகில் பலதாரமணம் செய்திருப்பவர்களின் எண்ணிக்கை மிக மிக குறைவென அறுதியிட்டு கூறிட முடியும். வேறு வார்த்தைகளில் சொல்வதனால், முஸ்லிம் உலகிலுள்ள ஆண்கள் மேற்கத்திய ஆண்களை விட மிக அதிகம் கடுமையான ஒருதாரமணவாதிகளாக இருக்கிறார்கள் என்றே கூற வேண்டும்.**

புகழ்பெற்ற கிறிஸ்தவ அறிஞர் பில்லி கிரஹாம் இந்த உண்மையை ஏற்றுக்கொண்டுள்ளார்: கிறிஸ்தவமதம் பலதாரமணத்தை பொறுத்துப் போகமுடியாது. தற்கால கிறிஸ்தவமதம் அதை பொறுத்துப்போகவில்லையெனில் அது அதற்கு அழிவையே கொண்டு வரும். சமூகத்தீமைகளுக்கு பரிகாரமாக இஸ்லாம் பலதாரமணத்தை அனுமதித்துள்ளது இது சம்பந்தமாக மனித இயல்பு அவசியப்படும் சில சுதந்திரங்களை, ஆனால் மிகவும் கடுமையாக வரையறுக்கப்பட்ட சட்டத்தின் கீழேயே, அனுமதித்துள்ளது. தாங்கள் ஒருதாரமணவாதிகள் என கிறிஸ்தவ நாடுகள் மிகவும் வெறுமனே காட்டிக்கொள்கின்றன. ஆனால் அவைகள் பலதாரமணத்தையே பின்பற்றுகின்றனர். மேற்கத்திய சமூகத்தில் நடைபெறும் வைப்புக்களை பற்றி அறியாதவர் யாருமில்லை. இது விசயத்தில் இஸ்லாம் அடிப்படையில் நியாயமான மார்க்கம். அது முஸ்லிமை, தேவைப்பட்டால், இரண்டாம் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கிறது. ஆனால், ஒழுக்கம் சிறைந்திடாமல் பாதுகாப்பாக இருக்கும் வகையில் எல்லாவித கள்ள உறவுகளையும் கடுமையாக தடை செய்துள்ளது.''[75]

பல முஸ்லிமல்லாத மற்றும் முஸ்லிம் நாடுகள் பலதாரமணத்தை தடைசெய்துள்ளன என்பது மிகவும் சுவையானதாகும். இரண்டாம் திருமணம் செய்து கொள்வது, முதல் மனைவியின் சம்மதம் ரெுந்தால் கூட, சட்ட விரோதமானதாகும். ஆனால் மனைவியை தெரிந்தோ தெரியாமலோ ஏமாற்றுவது இந்தச் சட்டங்களைப் பொறுத்த வரை முற்றிலும் அனுமதிக்கப்பட்ட ஒன்றேஸ எப்படிப்பட்ட முரண்பாட்டிற்கு பின்னிருக்கும் சட்டஞானம்தான் என்ன? சட்டம் ஏமாற்றிற்கு வெகுமதியளிக்கவும் நேர்மையை தண்டிக்கவும்தான் யெற்றப்பட்டுள்ளதா? இது நவீன 'நாகரிக' சமூகத்தின் புரிந்து கொள்ளப்படமுடியாத முரண்பாடுகளில் ஒன்றேயாகும்.

Top Top

- ## திரை (பர்தா - ஹிஜாப்)

இறுதியாக, பெண்களின் அடிமைத்தனம் அடக்குமுறைத்தனம் ஆகியவற்றின் மிகப்பெரும் அடையாளம் என மேற்கத்திய உலகினால் கருதப்படும் திரை (பர்தா-ஹிஜாப்) பற்றி சற்று பார்ப்போம். பர்தா என்பது யூத-கிறிஸ்தவ மதத்தில் இல்லை என்பது உண்மையா? அது பற்றி ஆதாரங்களை முதலில் பார்க்கலாம். டாக்டர் மெனாகெம் பிரேயர் (பைபிள் இலக்கியப் பேராசிரியர், யேசுஷிவா பல்கலைக்கழகம்) தன்னுடைய 'ரப்பானிய நூல்களில் பெண்கள்' என்ற புத்தகத்தில் 'யூதப்பெண்கள் வெளியே செல்லும் போது தலையை மூடிக்கொண்டு செல்வார்கள் சில சமயங்களில் முகத்தையும் மூடிக்கொண்டு ஒரு கண்ணை மாத்திரம் திறந்திருப்பார்கள் என கூறுகிறார்.[76] சில புராதான அறிஞர்களின் வாக்குகளை

அவர் கோடிட்டு காட்டுகிறார், இஸ்ராயீலியப் பெண்கள் தலையை திறந்த வண்ணம் நடக்கக்கூடாது'' தன் மனைவியின் தலைமுடியை மற்றவர்களை பார்க்க விடுபவன் சபிக்கப்படுவானாக.... அலங்காரத்திற்காக தலைமுடியை தொங்கவிடுபவள் வறுமையை வரவழைப்பவளாவாள்'' பிரார்த்தனைகளையோ அல்லது அருள்மொழிகளையோ தலையைத் திறந்திருக்கும் பெண்ணின் முன்னால் ஓதுவதை ரப்பானிய சட்டம் தடுக்கிறது. ஏனெனில் தலையை திறந்திருப்பது நிர்வாணமாக'' இருப்பது போல் கணிக்கப்படுகின்றது.[77] தன்னயத்தியன் என்ற காலத்தின் போது தலையை மூடாத பெண் கற்பையே கேவலப்படுத்தியவளாக கருதப்பட்டாள் என டாக்டர் ப்ரேயர் மேலும் குறிப்பிடுகிறார். அவள் தலை திறந்திருந்தால் இக்குற்றத்திற்காக அவளுக்கு நானுஸறு ஸஹஸிம் அபராதம் போடப்படலாம்.'' ஆனால் இந்த யூதப் பெண்களின் இந்த திரை எப்பொழுதும் கற்பின் அடையாளமாக கருதப்படவில்லை என டாக்டர் ப்ரேயர் விளக்குகிறார். சில நேரங்களில் அது கற்பை குறிப்பதை விட உயர்ந்த நிலையையும் வசதியையுமே குறித்தது. கண்ணியமிக்க பெண்களின் கண்ணியத்திற்கும் உயர்வுக்கும் அடையாளமாக திரை திகழ்ந்தது. அவள் மற்றவர்கள் புக முடியாத தன் கணவனின் புனிதசொத்து என்பதிற்கு அடையாளமாகவும் அது திகழ்ந்தது.

திரை பெண்ணின் சுயமரியாதை மற்றும் சமூக அந்தஸ்தை குறித்தது. கீழ்சாதிப்பெண்கள் தங்களை மேல்சாதிப்பெண்களாக காட்டிக்கொள்வதற்காக அடிக்கடி திரையை அணிந்து வந்தனர். திரை என்பது கண்ணியத்தின் அடையாளம் என்பதால்தான் யூத சமுகத்தில் உள்ள விபச்சாரிகள் அதை அணிய அனுமதிக்கப்படவில்லை. இருப்பினும், விபச்சாரிகள் மரியாதைக்குரியவர்களாக தோற்றமளிக்கும் பொருட்டு வேறு விசேஷமான தலைமறைவை அணிந்து வந்தனர்.[79] ஐரோப்பாவிலுள்ள யூதப்பெண்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை, அவர்களின் வாழ்க்கை அவர்களைச் சுற்றியுள்ள உலக கலாச்சாரத்துடன் கலந்து போகும் காலம் வரை, திரையை அணிந்தே வந்தனர். ஐரோப்பிய வாழ்க்கையின் வெளிப்புற அழுத்தம் அவர்கள் தலையை திறந்து நடமாட நிர்ப்பந்தித்தது. தங்களின் வழமையான தலைமறைவை அணிவதற்குப் பதிலாக விக் அணிவது மிகவும் சௌகரியமானது எனக்கண்டனர். இன்று, மிகவும் பக்தியுள்ள யூதப்பெண்கள் கூட ஆலயத்திலல்லாது வேறு எங்கும் தலையை மறைப்பதில்லை.[80] அவர்களில் ஹாஸிதிக் பிரிவைச் போன்ற சிலர் இன்னமும் விக்கை உபயோகித்து வருகின்றனர்.[81]

இது சம்பந்தமாக கிறிஸ்தவ நடைமுறை என்ன? கத்தோலிக்க பெண் துறவிகள் பல நூற்றாண்டுகளாக தலையை மறைத்து வருகின்றனர் என்பது நன்கு அறியப்பட்டதே. புனித பவுல் திரையைப்பற்றி மிகவும் சுவையான செய்தியை கூறுகிறார்:

ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாறென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன். ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்: அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்: தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக்கொண்டிருக்கக் கடவள். புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ளவேண்டுவதில்லை: ஸ்திரியானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸதிரீக்காகச் சிருஷடிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்.

ஆகையால் (தென் காரணமாகவும்) மேலும் தூதர்களினிமித்தமும் ஸ்திரீயானவள் தலையின் மேல் (அதிகாரத்தின் அடையாளமாக) முக்காடிட்டுக்கொள்ளவேண்டும். (1 கொரிந்தியர் 11:3-10)

அது தேவனுடைய சாயலாயிருக்கும் ஆணிற்கு, அவனிலிருந்து, அவனுக்காக படைக்கப்பட்ட பெண்ணின் மேலிருக்கும் அதிகாரத்திற்கு அடையாளம்தான் திரை என்பதுதான் திரைக்கு புனித பவுலின் விளக்கம். புனித தர்த்தலியன் தன்னுடைய புகழ்பெற்ற கன்னிகள் திரையிடுதல்'' பற்றிய கட்டுரையில் வீதிகளில் செல்லும் போது திரையணியும் இளம் பெண்களே, நீங்கள் ஆலயத்திலும் அணியுங்கள், அன்னியர் முன் திரையணியும் நீங்கள் உங்கள் சகோதரருக்கிடையே இருக்கும் போதும் திரையணியுங்கள்....'' என்று கூறுகிறார். கத்தோலிக்க சர்ச்சின் கானானிய சட்டங்களில் பெண்கள் சர்ச்சிலிருக்கும் போது திரை அணிய வேண்டும் என்ற சட்டமும் ஒன்றாகும்.[82] இன்றளவு வரை ஆமிகூஷ், மென்னோமித் போன்ற சில கிறிஸ்தவ பிரிவுகள் தங்களின் பெண்களை திரையிட்டவர்களாக வைத்திருக்கின்றனர். திரைக்கு சர்ச் தலைவர்கள் கொடுக்கும் காரணம் பவுலடியார் புதிய ஏற்பாட்டில் கொடுக்கும் அதே காரணம்தான்: **தலைமறைவு என்பது பெண் ஆணுக்கும் கடவுளுக்கும் அடிமைப்பட்டிருப்பதன் அடையாளமாகும்''**[83]

தலைமறைவு என்பது இஸ்லாத்தால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒன்றல்ல என்பதை மேலுள்ள ஆதாரங்கள் தெளிவாக்கும். இருப்பினும், இஸ்லாமும் அதை அங்கீகரித்தது. விசுவாசம் கொண்ட ஆண்களும் பெண்களும் பார்வையை தாழ்த்துமாறும் கற்பை காத்து வருமாறும் பெண்கள் தங்களின் தலைமறைவை தங்கள் கழுத்து மார்பு ஆகியன வரை இழுத்து விடவும் இஸ்லாம் கட்டளையிடுக்கின்றது

(நபியே) இறைநம்பிக்கை கொண்ட ஆண்களிடம், அவர்கள் தங்கள் பார்வைகளைப் பேணிக் கொள்ளும்படியும் தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படியும் நீர் கூறும். .... மேலும் (நபியே) இறைநம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும்: அவர்கள் தங்களுடைய பார்வைகளை பேணிக் கொள்ளட்டும். தங்களுடைய வெட்கத்தலங்களை பாதுகாக்கட்டும்: அதிலிருந்து தாமாக வெளியே தெரிகின்றவற்றைத் தவிரஸ மேலும், தங்களுடைய மார்புகள் மீது தங்கள் முன்றானையைப் போட்டுக் கொள்ளட்டும். (24:30-31)

எதற்காக திரை அணிய வேண்டும்? இதை திருக்குர்ஆன் தெளிவாக விளக்குகிறது.

''நபியே, உம்முடைய மனைவிகளிடமும் பெண்களிடமும் மற்றும் மூ மினான பெண்களிடமும் கூறுவீராக: அவர்கள் (வெளியே அவசியத்தின் காரணமாக) செல்லும் போது தங்களின் முந்தானைகளை தங்களின் மேல் தொங்க விட்டுக்கொள்ளட்டும். **அதனால் அவர்கள் (கண்ணியமானவர்களென) அறியப்பட்டு துன்பத்திற்கு உள்ளாகாமல் இருப்பதற்காக.** (33:59)

இதுதான் முழு விசயமுமே. பிறரால் துன்பத்திற்குள்ளாவதிலிருந்து பெண்களை திரை பாதுகாக்கிறது. திரையின் முழு நோக்கமே பாதுகாப்பு என்பதற்காகத்தான். இஸ்லாமிய திரை, கிறிஸ்தவ திரையைப் போலல்லாமல் பெண்ணின் மேல் ஆணுக்குரிய அதிகாரத்தின் அடையாளமோ அல்லது பெண் ஆணுக்கு அடிமை என்பதற்கான அடையாளமும் அல்ல. இஸ்லாமிய திரை யூதப்பெண்களின் திரையைப் போலல்லாமல் செல்வச் செழுப்பின் அடையாளமோ அல்லது சில திருமணமான உயர்ந்த பெண்களின் தனிப்பட்ட தன்மையையோ காண்பிப்பதுமல்ல. **இஸ்லாமிய திரையென்பது பெண்கள்**

---

**(அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டிருக்கும் (இதன் காரணமாகவும்) (அதிகாரத்தின் அடையாளமாக) போன்ற வாக்கியங்கள் தமிழ் மொழி பெயர்ப்பு பைபிளில் தவிர்க்கப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கில மொழி பெயர்ப்பில் (FOR THIS CAUSE………… A SIGN OF AUTHORITY (POWER) என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது)**

**தங்களை பாதுகாக்கும் நோக்கத்திற்காக அணியப்படும் ஒழுக்கத்தின் அடையாளமே. நசுஷ்டப்பட்ட பிறகு வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதை விட எப்பொழுதும் பாதுகாப்பான முறையில் இருந்து கொள்வது சிறந்தது என்பதுதான் இஸ்லாமிய தத்துவமாகும். உண்மையில் திருக்குர்ஆன் பெண்ணின் உடலையும் அவள் கண்ணியத்தையும் பாதுகாப்பதில் எந்த அளவிற்கு அக்கறை எடுத்துள்ளதெனில், அவள் மீது எவரேனும் பொய்யாக களங்கம் சுமத்த முயலுவாரேயானால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறுகிறது:**

**எவர்கள் கற்புடைய பெண்கள் மீது அவதூறு சொல்லி பின்னர், நான்கு சாட்சிகளைக் கொண்டுவரவில்லையோ அவர்களுக்கு எண்பது சாட்டையடிகள் கொடுங்கள். இனி, அவர்கள் கூறும் சாட்சியத்தை என்றைக்கும் எற்றுக்கொள்ளாதீர்கள். மேலும், அவர்களே தீயவர்கள்.** (24:4)

இந்த தண்டனையை கற்பழிப்பு குற்றத்திற்கு பைபிள் தந்திருக்கும் மிகச்சிறிய தண்டனையோடு ஒப்பிட்டுப்பாருங்கள்:

நியமிக்கப்படாத கன்னியாஸ்திரீயாகிய ஒரு பெண்ணை ஒருவன் கண்டு, கையைப் பிடித்து அவளோட சயனிக்கையில், அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அவளோட சயனித்த மனிதன் பெண்ணின் தகப்பனுக்கு ஐம்பது வெள்ளிக்காசைக் கொடுக்கக்கடவன்: அவன் அவளைக் கற்பழித்தபடியினால், அவள் அவனுக்கு மனைவியாயிருக்கவேண்டும்: அவன் உரோடிருக்குமளவும் அவளைத் தள்ளிவிடக்கூடாது. (உபாகமம் 22: 28:29)

இங்கு யார் உண்மையிலேயே தண்டிக்கப்படுகிறார் என்பதை ஒருவர் சிந்திக்கவேண்டும். கற்பழித்ததற்காக அபராதம் விதிக்கப்படுவது ஆணா அல்லது தன்னைக்கற்பழித்தவனை மணக்குமாறும் அவன் சாகும் வரை அவனோடு வாழ நிர்ப்பந்திக்கப்படும் பெண்ணா? இங்கு கேட்கப்பட வேண்டிய மற்றொரு கேள்வி: பெண்ணுக்கு அதிக பாதுகாப்பளிப்பது எது? திருக்குர்ஆனின் கடுமையான போக்கா அல்லது பைபிளின் தளர்ந்த போக்கா?

சிலர், குறிப்பாக மேற்கத்தியர், பர்தா (பெண்ணை) பாதுகாக்கிறது என்பதை ஏளனம் செய்வர். கல்வியையும், நல்ல பண்பாடு நிறைந்த நடைமுறைகளையும், கட்டுப்பாடாக ரெுப்பதன் அவசியத்தையும் பரப்புவதுதான் மிகச்சிறந்த பாதுகாப்பு என அவர்கள் கூறுவர். அது மிகச் சிறந்ததுதான். ஆனால் போதுமானதல்ல என நாம் கூறுவோம். பண்பாடு மாத்திரம் பாதுகாப்பு தருவதற்கு போதுமானதென்றால், **ஏன் வட அமெரிக்காவிலுள்ள பெண்கள் இருட்டாக இருக்கும் தெருவில் தனியாக நடப்பதற்கோ ஏன் ஆட்கள் காலியாக இருக்கும் கார் நிறுத்துமிடங்களில் கூட நடப்பதற்கோ பயப்படுகின்றனர்? கல்வி மாத்திரம் தெற்கு தீர்வெனில், மிகவும் மதிக்கப்படும் குயீன்ஸ் பல்கலைக்கழகத்தில் கூட பெண்களுக்கென தனியாக கல்லுாரி வளாகத்திற்குள்ளேயே 'வீட்டிற்கு நடந்து செல்லும் வழி' ஏன் இருக்கிறது? மனக்கட்டுப்பாடு மாத்திரம் தீர்வெனில் ஏன் வேலை செய்யுமிடங்களில் பெண்கள் காமக்களியாட்டங்களுக்கு உட்படுத்தப்படுவதாக தினமும் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன?** கப்பற்படை அதிகாரிகள், நிர்வாக அதிகாரிகள், பல்கலைக்கழக பேராசியர்கள், சட்ட வல்லுனர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகள் மேலும் அமெரிக்க ஜனாபதியும் கூட காமக்களியாட்டங்களில் டேுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள். குயின்ஸ் பல்கலைக்கழகத்தின் முன் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட சிற்றேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த கீழ்காணும் புள்ளிவிவரத்தை நான் வாசித்த போது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை:

- ♦ கனடாவில் ஒவ்வொரு 6 நிமிடத்திலும் பெண்கள் பலாத்காரப் படுத்தப்படுகின்றனர்.
- ♦ கனடாவிலுள்ள மூன்று பெண்களில் ஒருவர் தங்களின் வாழ்நாளில் ஓரு முறையிலாவது கற்பழிக்க முயற்ச்சிக்கப்படுவர்.

- ♦ நான்கு பெண்களில் ஒருவர் தன் வாழ்நாளில் ஒருமுறையில் கற்பழிக்கப்படும் அபாயத்தில் அல்லது திட்டமிட்டு கற்பழிப்பக்கப்படும் அபாயத்தில் உள்ளனர்.

- ♦ எட்டில் ஒரு பெண் கல்லுஸரியிலோ அல்லது பல்கலைக்கழகத்திலோ படித்துக்கொண்டிருக்கும் போது பலாத்காரப்படுத்தப்படுவார்.

- ♦ மாட்டிக்கொள்ள மாட்டோம் என்ற அபாயம் இல்லையானால் தாங்கள் பலாத்காரத்தில் டேுபட்டுவிடுவோம் என கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் 60மூ ஆண்கள் தெரிவித்தனர்.

நாம் வாழும் சமூகத்தில் அடிப்படையில் ஏதோ தவறு இருக்கிறது. சமூகத்தின் வாழ்க்கை முறையிலும் கலாச்சாரத்திலும் ஒரு அடிப்படையான மாற்றிலும் முற்றிலும் அவசியமானது. ஒழுக்கரீதியான வாழ்க்கை மிகவும் அவசியப்படுகின்றது. உடையில், பேச்சில் ஆண் பெண் இருபாலருடைய பழக்கவழக்கங்களிலும் ஒழுக்கம் வேண்டும். இல்லையெனில் மிகவும் மோசமான புள்ளி விபரம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேதான் வரும் மேலும் துரதிர்ஷ்டவசமாக தென் விலையை பெண்கள்தான் கொடுத்து வருவார்கள். இதனால் உண்மையில், நாம் அனைவரும் துன்பத்திற்குள்ளாகிறோம் என்றாலும், நம் நிலை ,க. கிப்ரன் அவர்கள் கூறியது போல் ... அடியை வாங்கிக்கொண்டிருப்பவன் அதை எண்ணிக்கொண்டிருப்பவனைப் போலல்ல.''[84] பெண்கள் வாங்கும் அடியை எண்ணிக் கொண்டிருப்பவர்கள் போன்றவர்களாவர்கள் ஆண்கள். ஆகவே, ஒழுக்கமாக உடையணிந்து வந்த காரணத்தால் பள்ளிக்கூடங்களிலிருந்த மாணவிகளை வெளியேற்றிய பிரஞ்சு சமுதாயத்தைப் போன்ற சமுதாயங்களெல்லாம் இறுதியில் தனக்கே தீங்கிழைத்துக் கொள்கிறது.

ஆண்களுக்கு பெண்கள் மேலுள்ள அதிகாரத்தை காண்பிக்கும் வகையில் கத்தோலிக்க சந்நியாசிப்பெண்களால் அணியப்படும் தலைமறைவை 'புனித' அடையாளம் என மதிக்கப்படும் அதே வேளையில் பாதுகப்பிற்காக முஸ்லிம் பெண்கள் அணியும் அதே தலைமறைவை 'அடக்குமுறை'யின் அடையாளம் என கருதப்படுவது இன்றைய உலகில் உள்ள மிகப்பெரும் ஆச்சரியங்களில் ஒன்றானதேயாகும்.

Top Top

- ## முடிவுரை

இந்த ஆராய்ச்சி கட்டுரைகளை வாசித்த எல்லா முஸ்லிம் அல்லாதவர்களின் மனங்களில் எழும் பொதுவான கேள்வி என்னவெனில்: இன்றைய உலகில் வாழும் முஸ்லிம் பெண்கள் இந்த கட்டுரைகளில் விவரிக்கப்பட்டுள்ளபடி கண்ணியமான முறையில்தான் நடத்தப்படுகின்றார்களா? என்பதுவேயாகும். இதன் பதில், துரதிர்ஷ்டவசமாக, இல்லை என்பதுதான். இஸ்லாத்தில் பெண்களின் அந்தஸ்து பற்றிய விவாதங்களில் இந்த கேள்வி மிகவும் தவிர்க்கமுடியாததாக இருப்பதால் இதற்கான பதிலை வாசகர்களுக்கு, அவர்கள் முழுமையான சூ ழ்நிலைகளை புரிந்து கொள்ளும் வகையில், நாம் விரிவாக விளக்கிட வேண்டும்.

முஸ்லிம் சமுதாயத்தில் நிலவிவரும் இதுபற்றிய பல வித்தியாசமான நடவடிக்கைகள் அனைத்தையும் ஒரே மாதிரியானதாக - பொதுவானதாக கருதுவது சரியானதல்ல என்பதை முதலில் தெளிவுபடுத்தப்பட வேண்டும். பெண்கள் எவ்வாறு நடத்ததப்படவேண்டும் என்ற கருத்தோட்டம் இன்றைய முஸ்லிம் உலகில் பல விதமாக இருக்கின்றது. இந்த கருத்தோட்டம் ஒரு சமூகத்திலிருந்து மற்றொரு சமூகத்திற்கும் ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கும் வித்தியாசப்படுகின்றது. இருப்பினும் சில பொதுவான கருத்தோட்டங்கள் தெளிவாக காணப்படுபவையே. பெண்களின்

அந்தஸ்தை பொறுத்தவரை பெரும்பாலும் எல்லா முஸ்லிம் சமூகங்களுமே ஏதோ ஒரு வகையில் இஸ்லாத்தின் கொள்கைகளை விட்டு விலகி இருக்கின்றன. பெரும்பாலும் இந்த விலகல் இரண்டு நேர் எதிர் எதிர் திசையிலே ஆகியிருந்திருக்கின்றன. முதலாவது, கட்டுப்பாடுகள் மிக்க, வாழையடி வாழையாக இருந்து வரும் பழக்கங்களுக்கொப்ப உள்ளதாகும்: இரண்டாவதோ மிகவும் சுதந்திரமானதும் மேற்கத்திய கலாச்சாரத்தை ஒட்டியதுமாகும்.

முதல் வகையான கூட்டம் முன்னோர்களிடமிருந்து பெற்ற பழக்க வழக்கங்கள் நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தங்களின் பெண்களை நடத்தின. இந்தப் பழக்கவழக்கங்கள், சாதாரணமாக, இஸ்லாத்தால் பெண்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளை பறிப்பவையாக இருந்தன. ஆண்களை எவ்வாறு நடத்த வேண்டுமென அவர்கள் விதிமுறைகளை வைத்திருந்தார்களோ அதை விட மிகவும் மாறுபாடான முறையிலேயே பெண்களை நடத்தினர். இந்த பாராபட்சம் அவளின் முழு வாழ்விலும் தொடர்ந்து நிலவியது் மகன் பிறக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியை விட மிகவும் குறைவான மகிழ்ச்சியே மகள் பிறந்த போது அவர்களுக்கு ஏற்பட்டது. அவள் கல்விக்கூடம் செல்வதும் அவ்வளவாக இருக்காது. குடும்பச் சொத்திலிருந்து அவளுக்கு கிடைக்க வேண்டிய உரிமையை பறிக்கப்படுவாள். அவளின் சகோதரர்களின் ஒழுங்கீன நடவடிக்கைகளெல்லாம் பொறுத்துக்கொள்ளப்படும் அதே வேளையில் அவள் ஒழுங்கீனமான முறையில் நடந்து கொள்ளாமலிருக்கும் வகையில் அவள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவாள். ஆண்கள் தாங்கள் செய்ததாக பெருமை கூட அடித்துக் கொள்ளும் அதே காரியத்தை அவள் செய்தாளோ அவள் கொல்லப்பட்டுக்கூட விடுவாள். குடும்ப மற்றும் சமூக விவகாரங்களில் அவள் கருத்து சொல்வது மிகவும் குறைவான அளவிலேயே இருக்கும். அவளின் சொத்துக்கள் மற்றும் திருமணக்கொடைகளின் மீது அவளுக்கு முழுமையான அதிகாரம் இருந்திடாது. ஒரு தாயாக அவள் ஆண் குழந்தைகளையே வேண்டிட விரும்பிடுவாள். அதனால் சமூகத்தில் அவளுக்கு சிறந்த அந்தஸ்து கிடைக்கும் என்பதற்காக.

மற்றொரு புறம் மேற்கத்திய கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறைகளால் முற்றிலும் கவரப்பட்ட முஸ்லிம் சமூகங்கள் (அல்லது ஒரு சமூகத்தில் உள்ள சில பிரிவுகள்) உள்ளன. இந்த சமூகங்கள் மேற்கத்திய கலாச்சாரங்களை கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றி இறுதியில் அதனால் ஏற்படும் மோசமான விளைவுகளையும் சந்திக்கின்றன. இந்த சமூகங்களில் உள்ள பெண்களின் முதல், முக்கிய குறிக்கோள் தங்களின் உடல் வனப்பை அதிகப்படுத்திக் கொள்வதுதான். ஆகவே, அவள் எவ்பொழுதும் தன் உடலின் தோற்றம், அளவு, எடை ஆகியவை பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பாள். தன் உள்ளத்தை கவனிப்பதை விட தன் உடலை கவனிப்பதற்கே அவள் அதிகம் விரும்புகிறாள் தன் அறிவை வளப்படுத்துவதில் கவனம் செலுத்துவதை விட தன் அழகை வளர்ப்பதிலேதான் அதிக கவனம் செலுத்துகிறாள். **அவள் வாழும் சமூகத்தில் அவளின் கல்வி சாதனை, அறிவாராய்ச்சிகள் மற்றும் அவளின் சமூகப்பணிகள் ஆகியவற்றை விட மற்றவர்களை கவருவதற்கும் அவர்களின் உணர்வுகளை தூண்டுவதற்குமுள்ள அவளின் திறமைதான் அதிகமாக மதிக்கப்படுகின்றன.** அத்தகைய ஒருத்திக்கு திருக்குர்ஆனின் பிரதியொன்றை தன் கைப்பைக்குள் வைத்துக்கொள்ள அதில் இடமிருக்காது் ஏனெனில் அவளின் அவள் செல்லுமிடத்திற்கெல்லாம் எடுத்துச்செல்லும் அலங்காரப்பொருட்களால் அது நிரப்பப்பட்டிருக்கும். அவளின் கவர்ச்சிக்கே சமூகம் அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் அங்கே அவளின் ஆத்மிக நடத்தைகளுக்கு இடமில்லை. ஆகவே அவள் தன் மனிதத்தன்மையை வளர்ப்பதில் தன் முயற்சிகளை செலவளிப்பதை விட அதிகம் தன் பெண்மைத்தன்மையை வளப்படுத்துவதிலேயே செலவளிப்பாள்.

ஏன் முஸ்லிம் சமூகங்கள் இஸ்லாத்தின் போதனைகளிலிருந்து விலகியது? தெற்கு எளிய பதில் இல்லைதான். பெண்கள் சம்பந்தமாக முஸ்லிம்கள் ஏன் திருக்குர்ஆனின் கட்டளைகளை கடைப்பிடிக்கவில்லை என்ற காரணங்களை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்வது இந்தக் கட்டுரைகளின் தலைப்பிற்கு உட்பட்டதல்ல. இருப்பினும், முஸ்லிம்கள் இஸ்லாத்தின் பல விசயங்களை விட்டு விட்டு வெகு காலமாகவே விலகிப்போயுள்ளனர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டிய விசயங்களுக்கும் அவர்கள் செய்து கொண்டிருப்பவைகளுக்குமிடேய மிகப்பெரும் இடைவெளி இருக்கிறது. இந்த இடைவெளி புதிதாக ஏற்பட்ட நிகழ்ச்சியல்ல. இது பல நூற்றாண்டுகளாக இருந்து

வருகிறது மேலும் நாளுக்கு நாள் அது அதிகப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. இந்த வளர்ந்து வரும் இடைவெளி முஸ்லிம் உலகின் மீதுஇ அவர்கள் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் மிகவும் அழிவுதரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது: அரசியல் கொடுங்கோன்மை, ஒற்றுமைகுலைவு, பொருளாதார வீழ்ச்சி, சமூக அநீதி, அறிவியல் ஆராய்ச்சியில் திவாலாகியிருப்பது, சிந்தனை தேக்கம் போன்றவைகள் அவைகளாகும். இன்றைய முஸ்லிம் சமூகத்தில் பெண்களுக்கு இஸ்லாத்தால் வழங்கப்பட வேண்டிய அந்தஸ்துகள் வழங்கப்படாமலிருப்பது ஒரு ஆழமான நோயின் அடையாளமேயாகும். **முஸ்லிம் சமூகத்தின் வாழ்க்கை முறை முழுவதையும் சீர்திருத்த நடவடிக்கை எடுக்காமல் முஸ்லிம் பெண்களின் அந்தஸ்தை உயர்த்துவதற்காக எடுக்கப்படும் எந்த முயற்சியும் பலனளிக்குமென எதிர்பார்க்கப்படமுடியாது. முஸ்லிம்களை இஸ்லாத்தின் கொள்கைகளோடு மிகவும் நெருக்கி வைக்கக்கூடிய மறுமலர்ச்சிதான் இப்போது தேவைப்படுகின்றது அதைவிட்டு விலக்கிக்கொண்டு போகக்கூடிய எதுவும் அவசியமில்லை. இஸ்லாம் முற்றிலும் தவறான முறையில் புரிந்து கொள்ளப்பட்டதனாலேயே இன்றைய முஸ்லிம் பெண்கள் மிகத் தாழ்ந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். முஸ்லிம்களுக்கு பொதுவாக ஏற்படும் பிரச்னைகள் அவர்கள் இஸ்லாத்தின் கொள்கைகளை தீவீரமாக கடைப்பிடித்ததனால் ஏற்பட்டதல்ல மாறாக அவர்கள் அதிலிருந்து நெடுங்காலமாக மிக அதிகம் விலகியிருப்பதனாயே ஏற்பட்டதாகும்.**

இருப்பினும், இந்த ஆராய்ச்சி கட்டுரைகளின் நோக்கம் யூத-கிறிஸ்தவ மதங்களை இழிவுபடுத்துவதல்ல என்பதை நாம் மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறோம். இருபதாம் நூற்றாண்டில் பெண்களுக்கு வழங்கப்பட்ட அந்தஸ்தை யூத-கிறிஸ்தவ சட்டங்கள் அவர்களுக்கு (ஏற்கனவே) வழங்கியிருந்ததோடு ஒப்பிட்டு நோக்கினால் இந்த யூத-கிறிஸ்தவ மதச் சட்டங்கள் மிகவும் பயங்கரமானவையாக தோன்றலாம். இருப்பினும், அதை நாம் சரியான சரித்திர பிண்ணனியோடுதான் நோக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், யூத-கிறிஸ்தவ மதத்தில் பெண்களின் நிலை பற்றி பாராபட்சமற்ற எந்த ஆய்வும் செய்ய வேண்டுமானால், இந்த சட்டங்கள் உருவான சரித்திர பிண்ணனிகளைப் பற்றியும் நாம் ஆராய வேண்டும். பெண்கள் பற்றிய யூத அறிஞர்கள் மற்றும் கிறிஸ்தவ பாதிரியார்கள் ஆகியோர்களின் சிந்தனைப்போக்குகள் அவர்களின் சமூகத்தில் நிலவிவந்த சிந்தனைப்போக்குகளின் தாக்கங்களினால் உண்டானவையே. பைபிள் கூட பல்வேறு ஆசிரியர்களால் பல்வேறு காலங்களில் எழுதப்பட்டதே. அவர்கள் வாழ்ந்து வந்த சமூகத்தின் மாண்புகள் மற்றும் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றின் தாக்கங்கள் அவர்கள் மேல் ஊடுருவியிருக்காமல் இருந்திருக்க முடியாது. உதாரணமாக, பழைய ஏற்பாட்டின் கள்ள உறவு பற்றிய சட்டம் பெண்களுக்கெதிராக மிகவும் ஒருதலைப்பட்சமானதாக, நம் பகுத்தறிவை முற்றிலும் தோற்கடிக்கூடியதாக இருக்கிறது. இருப்பினும் முன்னுள்ள யூத குலங்கள் தங்கள் பரம்பரையை காக்க வேண்டுமென்பதில் மிகவும் கவனமாகவும் மற்ற சமுதாயத்தினரிடமிருந்து தங்களை பிரித்து காண்பித்துக் கொள்வதில் மிகவும் ஆர்வமுடையவர்களாகவுமிருந்தார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். திருமணமான பெண்கள் கள்ளவுறவு கொள்வது மாத்திரம்தான் இந்த இலட்சியத்தையே கெடுக்கக்கூடியது என்று அவர்கள் நம்பினார்கள் என்பதை புரிந்து கொண்டால் அவர்களின் இத்தகைய ஒருதலைப்பட்சமான சட்டத்திற்கான காரணத்தையும் புரிந்து கொள்ள முடியும் ஆனால் அதற்காக நாம் அதை அங்கீகரித்திட முடியாது. அதுபோல, பெண்களுக்கெதிராக கிறிஸ்தவ பாதிரியார்களின் ஒருதலைப்பட்ச நடவடிக்கைகளும் அவர்கள் வாழ்ந்து வந்த ரோம-கிரேக்க கலாச்சாரங்களின் செல்வாக்கினால் உண்டானது என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட சரித்திரப் பிண்ணனிகளை கவனத்தில் கொள்ளாமல் யூத-கிறிஸ்தவ சட்டங்களை பற்றி மதிப்பிடுவது நியாயமான ஒன்றாக இருக்காது.

**உலக சரித்திரத்திற்கும் மானிட கலாச்சாரத்திற்கும் இஸ்லாம் அளித்துள்ள மிகச் சிறந்த சட்டங்களின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதற்கு இந்த யூத-கிறிஸ்தவ சட்டங்களின் சரித்திரப் பிண்ணனியை சரியான முறையில் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். யூத கிறிஸ்தவ சட்டங்கள் அப்போதிருந்த சமுதாய பழக்க வழக்கங்கள், சூழ்நிலைகள், கலாச்சாரங்கள் ஆகியவைகளின் தாக்கங்களால் உருவானவையே. மோசே, இயேசு ஆகியவர்களுக்கு இறைவனால் அருளப்பட்ட அந்த உண்மையான தூதை ஏழாம் நூற்றாண்டுக்குள்ளாகவே இந்த அன்னிய கலாச்சாரத்தின் தாக்கங்கள் உருத்தெரியாத அளவிற்கு மாற்றிவிட்டிருந்தன. ஏழாம் நூற்றாண்டில் யூத கிறிஸ்தவ உலகிலிருந்த பெண்களின் தாழ்ந்த நிலையானது இந்த அந்நிய கலாச்சார தாக்கங்களின் விளைவால் ஏற்பட்டவைகளில் ஒன்றேயாகும். ஆகவே**

**மானிட இனத்தை மீண்டும் நேரிய வழியில் செலுத்திடுவதற்காக புதிய இறைவெளிப்பாடு வரவேண்டிய தேவை அப்போது மிகவும் அதிகமாக இருந்தது. புதிய இறைத்தூதரின் பணியை, யூத கிறிஸ்தவர்களை (உலகின் மற்ற அனைத்து சமுதாயங்களையும்) அவர்களின் மேலிருக்கும் சுமைகளிலிருந்து விடுவிக்கும் பணியாகவே திருமறைகுர்ஆன் விவரிக்கின்றது:**

**அந்த அருளுக்குரியவர்கள் எத்தகையவர்களெனில், அவர்கள் 'உம்மீ' நபியாகிய இந்தத் தூதரைப் பின்பற்றுவார்கள். இவரைக் குறித்து அவர்களிடமுள்ள தவ்ராத்திலும்இ இன்ஜீலிலும் எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். இவர் நன்மை செய்யுமாறு அவர்களை ஏவுகின்றார் தீமைகளிலிருந்து அவர்களைத் தடுக்கின்றார் மேலும், அவர்களுக்குத் தூய்மையானவற்றை ஆகுமாக்குகின்றார் தூய்மையில்லாதவற்றைத் தடை செய்கின்றார் அவர்களைப் பிணைத்திருந்த விலங்குகளையும் உடைத்தெறிகின்றார். (7:157)**

ஆகவே இஸ்லாம் யூத மதத்திற்கோ கிறிஸ்தவ மதத்திற்கோ போட்டியான மதமாக கருதப்படக்கூடாது. அது முன் வந்த இறைவெளிப்பாடுகளின் முழுமையாக, இறுதியானதாக, பரிபூர்வமானதாகவே கருதப்படவேண்டும்.

இந்த ஆராய்ச்சியின் இறுதியில் உலக முஸ்லிம் சமூகத்திற்கு பின்வரும் அறிவுரைகளை வழங்க விரும்புகின்றேன். ஏராளமான முஸ்லிம் பெண்களின் அடிப்படை உரிமைகள் நீண்ட காலங்களாகவே மறுக்கப்பட்டு வந்துள்ளன. கடந்த கால தவறுகள் சரிப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு செய்வது ஏதோ உதவி செய்ததாக ஆகிவிடாது அவ்வாறு செய்வது முஸ்லிம் சமூகத்தின் கடமையாகும். திருக்குர்ஆனின் கட்டளைகள் மற்றும் நபி (ஸல்) அவர்களின் போதனைகளின் அடிப்படையில் உண்டாக்கப்பட்ட பெண்களின் உரிமைகளின் பட்டியலை உலகலாவிய முஸ்லிம் சமுதாயம் வெளியிட வேண்டும். இந்த பட்டியல், முஸ்லிம் பெண்களுக்கு அவர்களின் படைப்பாளன் வழங்கியுள்ள அனைத்து உரிமைகளயும் வழங்கும். பிறகு, இந்தப்பட்டியலில் உள்ளவைகள் நடை முறைப்படுப்படுத்தப்படுகின்றன என்று உறுதி செய்யும் வகையிலான எல்லா வகையான நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். இந்தப் பட்டியல் முன்னமேயே கொடுக்கப்படவேண்டிய ஒன்றாக இருப்பினும் இன்னும் காலந்தாழ்த்தாமல் இப்பொழுதே இதை செய்வது சிறந்தது. தங்களின் தாய்மார்கள், மனைவிகள், சகோதரிகள் மற்றும் மகள்களின் முழு உரிமைகளுக்கும் உலகளாவிய அளவில் முஸ்லிம்களே உறுதி கொடுக்கவில்லையெனில் பின் யார்தான் கொடுப்பர்?

மேலும், நம்முடைய முன்னோர்களின் இஸ்லாத்திற்கு எதிரான கடந்த கால பழக்கவழக்கங்கள், முறைகள் ஆகியவைகளை உடனேயே எதிர்த்து நிராகரிப்பதற்கு நாம் போதிய தைரியம் பெற வேண்டும். முன்னோர்களின் பழக்கவழக்கங்களை கண்மூடிக்கொண்டு பின்பற்றி வந்த குரைசுழிகளை திருமறைகுர்ஆன் கடுமையான முறையில் விமர்சிக்கவில்லையா? இதையடுத்து, **மேற்கத்திய அல்லது வேறு எந்த கலாச்சார பழக்கங்களில் எதை நாம் பெற்றாலும் அவற்றை தீவிரமாக ஆராயும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.** மற்ற கலாச்சாரத்தை பறிமாறிக்கொள்வதும் பழப்பதும் நமக்கு விலைமதிப்பற்ற அனுபவத்தை வழங்கும். இந்த பரிமாற்றத்தை படைப்பின் இலட்சியங்களில் ஒன்றாகவே திருக்குர்ஆன் கருதுகின்றது: மனிதர்களே ஒரு ஜோடி ஆண் பெண்ணிலிருந்து உங்களை நாம் படைத்தோம் மேலும் நீங்கள் (ஒருவரையொருவர்) அறியும் பொருட்டு நாம் உங்களை சமுதாயங்களாகவும் குலங்களாகவும் ஆக்கினோம்." (49:13) மேலும், மற்றவர்களை கண்மூடிக்கொண்டு பின்பற்றுவதென்பது சுயமரியாதைக் குறைவின் சரியான அடையாளம் என்பதை அது சொல்லாமலேயே உணர்த்துகின்றது.

யூத, கிறிஸ்தவ அல்லது மற்ற மத-இயக்கங்களைச் சார்ந்தவர்களுக்கு இந்த இறுதி வார்த்தைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன: பெண்களின் அந்தஸ்தை மிகப் புரட்சிகரமாக்கிய ஒரு மதத்தை பெண்களை நசுக்கும் மதமாக சுட்டிக்காட்டப்பட்டு கெடிப்படுவது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். இஸ்லாத்தை பற்றிய இந்த நினைப்பு இன்று உலகில் மிக அதிகமாக பரவியுள்ள கட்டுக்கதைகளில் ஒன்றேயாகும். தங்குதடையில்லாமல் வெளிவந்து கொண்டிருக்கும் காமத்தை தூண்டும் புத்தகங்கள், கட்டுரைகள், செய்தி பரப்பு படங்கள் மற்றும் ஹாலிவுட் படங்களாலும் இந்த கட்டுக்கதை பரப்பப்பட்டு வருகின்றது. **இந்த தவறான எண்ணத்தை உண்டாக்கக் கூடிய, வழி கெடுக்கும் சித்திரங்கள் தவிர்க்க**

**முடியாத விளைவுகளைகளா ஏற்படுத்தியுள்ளது என்னவெனில் இஸ்லாத்தை முற்றிலும் தவறாக புரிந்துகொள்வது, இஸ்லாத்தோடு சம்பந்தப்பட்ட எதையும் பயத்தோடு நோக்குவது ஒரு போன்ற உணர்வுகள்தான்.** பாராபட்சம், ஒருதலைப்பட்சம், தப்பபிப்பராயம் ஆகியவை அற்ற உலகில் நாம் வாழ வேண்டுமானால் இஸ்லாத்தை பற்றி உலக செய்தி ஸ்தாபனங்களால் தவறாக சித்தரிக்கப்படும் இந்தப்போக்கு முடிவிற்கு வர வேண்டும். **முஸ்லிம்களின் நம்பிக்கைகள் அவர்களின் செயல்கள் ஆகியவற்றிற்கிடையே இருக்கும் மிகப்பெரும் இடைவெளியை முஸ்லிம் அல்லாதவர்கள் உணர வேண்டும். முஸ்லிம்களின் நடவடிக்கைகள் இஸ்லாத்தை தவறாமல் பிரதிபலிப்பதில்லை என்ற சாதாரண உண்மையை அவர்கள் உணர வேண்டும். இன்றைய மேற்கத்திய பெண்களின் நிலையை யூத-கிறிஸ்தவ கொள்கைகளுக்கியைந்தது என்று முத்திரை குத்தினால் அது எவ்வளவு உண்மைக்கு புறம்பானதாக இருக்குமோ அது போல இன்றைய முஸ்லிம் உலகில் பெண்களின் நிலையை 'இஸ்லாமிய கொள்கைகளுக்கியைந்த நிலை' என முத்திரை குத்துவது உண்மைக்கு புறம்பானதாகும்.** இதை தெளிவாக மனதில் இருத்திக்கொண்டு, முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர்களும் தங்களுக்கிடையே இருக்கும் தப்பபிப்பராயங்கள், சந்தேகங்கள், பயம் ஆகியவற்றை களையும் நோக்கத்துடன் தங்களுக்கிடையே தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். மனித இனத்திற்கு அமைதியான ஒரு எதிர்காலம் வேண்டுமென்பது அத்தகைய பேச்சுவார்த்தையை மிகவும் அவசியப்படுத்துகின்றது.

நவீன உலகம் பெண்களுக்கு இந்த நூற்றாண்டில்தான் அங்கீகரித்த பல உரிமைகளை (பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே) அவர்களுக்கு அளித்து அவர்களின் அந்தஸ்தை மிகவும் உயர்த்திய ஒரு மதமாகவே இஸ்லாம் நோக்கப்படவேண்டும். இன்றைய உலக பெண்களுக்கு அளிப்பதற்கு இஸ்லாத்திடம் இன்னும் ஏராளனமானவைகள் உள்ளன: அவர்களின் ஆத்மீக, பகுத்தறிவு, பௌதீக, உணர்வு ஆகிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் தேவையானவற்றை அளித்து சமப்படுத்தி, அங்கீகரித்தது போக, பிறப்பு முதல் இறப்பு வரையிலும் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் கண்ணியம், மரியாதை, பாதுகாப்பு போன்றவைகளை அவர்களுக்கு அளிக்கும். ***பிரிட்டனில் முஸ்லிம்களாக ஆகியவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. ஒரு ஆணுக்கு நாலு பேர் என்ற விகிதத்தில் அமெரிக்காவில் பெண்கள் முஸ்லிம்களாகிக் கொண்டிருக்கின்றனர்.*** [85] ஒழுக்கம் சம்பந்தமான வழிகாட்டுதல் மற்றும் சரியான தலைமைத்துவம் ஆகியவை மிக அதிகமாக தேவைப்படும் இவ்வுலகிற்கு அளிப்பதற்கென ஏராளமானவற்றை இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது. ஹெர்மன் எலிட்ஸ் என்ற அமெரிக்க தூதுவர் அமெரிக்க Foreign Affairs of the oouse of Representatives of the United States Congress என்ற கமிட்டியின் முன் 24-06-95 அன்று சமர்ப்பித்த அறிக்கையில் இன்றைய உலகில் வாழும் முஸ்லிம்கள் ஏறக்குறைய ஒரு பில்லியன் பேர் உள்ளனர். இது மிகவும் மனதைக்கவரும் எண்ணிக்கையாகும். இது போல் மனதை கவரும் மற்றொரு விசயம் என்னவெனில் இஸ்லாம்தான் இன்று உலகிலேயே வேகமாக வளர்ந்து வரும் ஏகத்துவ கொள்கை கொண்ட மதமாகும். இது நாம் நன்கு கவனிக்க வேண்டிய விசயமாகும். இஸ்லாம் சரியான மார்க்கமாகும். அது ஏராளமான மக்களை கவர்ந்த வண்ணமிருக்கின்றது." ஆம். இஸ்லாம் சரியான மார்க்கமே! அதை கண்டு கொள்வதற்கு இதுதான் சமயம். இந்த ஆராய்ச்சி அந்த திசையை நோக்கி ஒரு படியாக இருக்குமென நான் நம்புகிறேன்.

Top Top

- ஆதார நூற்கள்

1. The Glo,e and Mail, Oct. 4.1994.

2. Leonard J. Swidler, Women in Judaism: the Status of Women in Formative Judaism (Metuchen, N.J: Scarecrow Press, 1976) p. 115.

3. Thena Kendath, “Memories of an Orthodox youth” in Susannah oeschel, ed. On ,eing a Jewish Feminist (New York: Schocken Nooks, 1983), pp. 96-97.

4. Swidler, op. cit., pp. 80-81.

5. Rosemary R. Ruether, “Christianity”, in Arvind sharma, ed., Women in World Religions (Alnany: State University of New Youk Press, 1987) p. 209.

6. For all the sayings of promi,ent Saints, see Karen Armstrong, The Gospel According to Woman (London: Elm Tree Nooks, 1986) pp. 52-62. See also Nancy van Vuuren, The Sunversion of Women as Practiced ny Churches, Witch-ounters, and OtherSexists (Philadelphia: Westminister Press) pp. 28-30.

7. Swidler, op. cit., p. 140.

8. Denise L. Carmody, “Judaism”, in Arvind Sharma, ed., op. cit., p. 197.

9. Swidler, op. cit., p. 137.

10. Inid., p. 138.

11. Sally Priesand, Judaism and the New Woman (New York: Nehrman oouse, Inc., 1975) p. 24.

12. Swidler, op. cit., p. 115.

13. Lesley oazleton, Israeli Women The Reality Nehind the Myths (New Youd: Simon and Schuster, 1977) p. 41.

14. Gage, op. cit., p. 142

15. Jeffrey o. Togay, “Adultery,” Encyclopaedia Judaica, Vol. II, col. 313. Also, see Judith Plaskow, Standing Again at Sinai: Judaism from a Feminist Perspective (New Youk: oarper ~ Row Punlishers, 1990) pp. 170-177.

16. oazleton, op. cit., pp. 41-42.

17. Swidler, op. cit., p. 141.

18. Matilda J. Gage, Woman, Church, and State (New Youk : Truth Seeker Company, 1893) p. 141

19. Louis M. Epsten, The Jewish Marriage Contract (New Youk: Arno Press, 1973) p. 149.

20. Swidler, op. cit., ;. 142.

21. Epstein, op. cit., pp. 164-165.

22. Inid., pp. 112-113. See also Priesand, op. cit., p.15

23. James A. Nrundage, Law, Sex and Christian Society in Medieval Europe (Chicago: University of Chicago Press, 1987) p.88.

24. Inid., p. 480.

25. Thompson, Women, in Stuart England and America (London: routledge ~ Kegan Paul, 1974) p. 162.

26. Mary Murray, The Law of the Father (London: Routledge, 1995) p. 67.

27. Gage, op. cit., p. 143.

28. For example, see Jeffrey Lang Struggling to Surrender, (Neltsville, MD: Amana Punlications, 1994) p. 167.

29. Elsayyed Saniq, Fiqh al Sunnah (Cairo: Darul Fathah lile'lam Al-Arani, 11th edition, 1994), vol. 2, pp. 218-229.

30. Andel-oaleem Anu Shuqqa, Tahreer al Mar'aa fi Asr al Risala (Kuwait: Dar al Qalam, 1990) pp. 190-112.

31. Leila Nadawi, "Islam", in Jean oolm and John Nowker, ed., Women in Religion (London: Pinter Punlishers, 1994) p. 102

32. Amir o. Siddiqi, Studies in Islamic oistory (Karachi : Jamiyatul Falah Punlications, 3rd edition, 1967) p.138.

33. Epstein, op. cit., p. 196.

34. Swidler, op. cit., pp. 162-163.

35. The Toronto Star, Apr. 8, 1995.

36. Saniq. op. cit., pp. 318-329. See also Muhammad al Ghazali, Qadaya al Mar'aa nin al Taqaleed al Rakida wal Wafida (Cairo: Dar al Shorooq, 4th edition, 1992) pp. 178-180.

37. Inid., pp. 313-318.

38. David W. Amram, The Jewish Law of Divorce According to Ninle and Talmud (Philadelphia: Edward Stern ~ CO., Inc., 1896) pp. 125-126.

39. Epstein, op. cit., p. 219.

40. Inid, pp. 156-157.

41. Muhammad Anu Zahra, Usnu al Fiqh al Islami (Cairo: al Majlis al A'la li Ri'ayat al Funun, 1963) p. 66.

42. Epstein, op. cit., p. 122.

43. Armstrong op. cit., p. 8.

44. epstein, op. cit., p. 175.

45. Inid., p. 121.

46. Gage, op. cit., p. 142.

47. Aisha Lemu and Fatima oeeren, Woman in Islam (London: Islamic Foundation, 1978) p.23.

48. oazleton, op. cit., pp. 45-46.

49. Inid., p. 47.

50. Inid., p. 49.

51. Swidler, op. cit., pp. 144-148.

52. oazleton, op. cit., pp 44-45.

53. Euge,e oillman, Polygamy Reconsidered: African Plural Marriage and the Christian Churches (New York: Ornis Nooks, 1975) p.140.

54. Inid., p. 17.

55. Inid., pp. 88-93.

56. Inid., pp. 92-97.

57. Philip. L. Kilnride, P.lural Marriage For Our Times (Westport, Conn.: Nergin ~ Garvey, 1994) pp 108-109.

58. The Weekly Review, Aug. 1, 1987.

59. Kilnride, op. cit., p. 126.

60. John E'Emilio and Estelle N. Freedman, Intimate Matters: A history of Sexuality in America (New Youk: oarper ~ Row Punlishers, 1988) p. 87.

61. Ute Frevert, Women in German oistory: from Nourgeois Emancipation to Sexual Li,eration (New York: Nerg Punlishers, 1988) pp. 263-264.

62. Inid., pp. 257-258.

63. Saniq, op. cit., p. 191.

64. oillman, op. cit., p. 12.

65. Nathan oare and Julie oare, ed;, Crisis in Nlack Sexual Politics (San Francisco: Nlack Think Tank, 1989) p. 25.

66. Inid., p. 26.

67. Kilnride, op. cit., p. 94.

68. Inid., p. 95.

69. Inid.

70. Inid. pp. 95-99.

71. Inid., p. 118.

72. Lang, op. cit., p. 172.

73. Kilnride, op. cit., pp. 72-73.

74. Saniq, op. cit., pp. 187-188.

75. Andul Rahman Doi, Woman in Shari'ah (London: Ta=oa Punlishers, 1994) p. 76.

76. Menachem M. Nrayer, The Jewish Woman in Ranninic Literature: A Psychosocial Perspective (oonoken, N.J: Ktave Punlishing oouse, 1986) p. 239.

77. Inid., pp. 316-317. Also see Swidler, op. cit., pp. 121-123.

78. Inid., p. 139.

79. Susan W. Sch,eider, Jewish and Female (New Yourk: Simon ~ Schuster, 1984) p. 237.

80. Inid., pp. 238-239.

81. Alexandra Wright, "Judaism", in oolm and Nowker, ed., op. cit., pp. 128-129.

82. Clara M. oenning, "Cannon Law and the Nattle of the Sexes: in Rosemary R. Ruether, ed., Religion and Sexism: Images of Woman in the Jewish and Christian Traditions (New York: Simon and Schuster, 1974) p. 272.

83. Donald N. Kraynill, The riddle of the Amish Culture (Naltimore: Johns oopkins University Press, 1989) p. 56.

84. Khalil Ginran, Thoughts and Meditations (New York: Nantam Nooks, 1960) p. 28.

85. The Times, Nov. 18, 1993.